மரியாயின் மாசற்ற இருதய
பரிகார பக்தி

முதல் சனி பக்தி முயற்சி

ஆசிரியர் : சுவாமி பங்கிராஸ் M. ராஜா

2007

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

பாத்திமாவிலிருந்து
கொண்டு வரப்பட்ட
அற்புத சுரூபம்
மாதத்தின் முதல் சனிதோறும்
மரியாயின் மாசற்ற இருதயப்
பாத்திமாவில் மாதா
சிறப்பாக நடைபெற்று வரும்
கிறிஸ்துராஜாபுரம்,

பரிகார பக்தி முயற்சியும்
பரிகார முழு இரவு ஆராதனையும்
கேட்டுக்கொண்டபடி
மரியாயின் மாசற்ற இருதயக் கெபி
குமரி மாவட்டம்

மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி

முதல் சனி பக்தி முயற்சி

ஆசிரியர் : சுவாமி பங்கிராஸ் M. ராஜா

வெளியிடுவோர் : மாதாவின் அப்போஸ்தலர்கள்

கிடைக்குமிடம் : சுவாமி பங்கிராஸ் M. ராஜா
கிறிஸ்துராஜாபுரம், ஐரேனிபுரம் அஞ்சல்,
புதுக்கடை வழி,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 197.
✆ : 04651-294785 & 233530
Cell : 9360250211

முதல் பதிப்பு : 2007
: 2000 **Copies**

நகல் உரிமை

ஆசிரியரின் அனுமதியின்றி இந்நூலை முழுமையாகவோ இதன் ஒரு பகுதியையோ அச்சடிக்கவும் விற்பனை செய்யவும் யாருக்கும் உரிமை இல்லை. இந்நூலின் வார்த்தைகளை மாற்றவோ கூட்டவோ குறைக்கவோ ஆசிரியரின் முன் அனுமதியை எழுத்துமூலம் பெற வேண்டும்.

விலை : **Rs. 25/-**

குறிப்பு :

இது ஒரு தனி உபயோகத்திற்கு மட்டுமே என்பதால் இந்நூலுக்கு **"IMPRIMATUR", "NIHIL OBSTAT"** பெற வேண்டியதில்லை.

எம்மிடமிருந்து இந்நூலை மொத்தமாகவோ
சில்லறையாகவோ வாங்கி விற்பனை செய்யவோ
இனாமாக வினியோகிக்கவோ செய்யலாம்.

அச்சிட்டோர் : **பிரான் கம்ப்யூட்டர் ஆப்செட்,**
விண்ணரசி பில்டிங்,
490/2, கே.பி. ரோடு, கோட்டாறு,
நாகர்கோவில் – 629 002.
✆ : 242594.

"ஆண்டவர் என் சுதந்தரமும்
என் பாத்திரத்தின் பங்குமாயிருக்கிறார்" சங்.15:5

சகோதரி. **அன்னாள் ஸ்விதின் மேரி** அவர்களின்

கன்னியர் வாழ்வின்

பொன்விழா நினைவு மலர்

50th Year Golden Jubilee Souvenir of

Rev. Sr. Annal Swithin Mary

St. Anne's Convent, Tiruchirapalli - 1.

23-05-2007

முன்னுரை

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குச் செலுத்தப்படும் பரிகார பக்தி முயற்சி மட்டுமே இக்காலத்தில் திருச்சபையில் நிலவிவரும் விசுவாச நெருக்கடிக்கும் உலகத்தில் நிலவிவரும் பயங்கரத் தீராவாத பிரச்சினைகளுக்கும் மாற்று மருந்தாகும். இப்பரிகார பக்தி முயற்சியானது பாத்திமாச் செய்தியின் அடிப்படையிலும் புனித லூயிஸ் மரிய மோன்போர்ட் காட்டியுள்ள உணர்வின் அடிப்படையிலும் அமையும் போது மிகவும் சக்தியுள்ள மாற்று மருந்தாகப் பயன்படும்.

இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளதின் நோக்கம் என்ன வென்றால், உலகெங்கிலும் உள்ள பாரம்பரிய கத்தோலிக்கர்கள் பாத்திமா மாதாவின் செய்தியைப் பரப்புவதும், மரியாயின் மீது உண்மை பக்தியைக் கடைபிடிப்பதும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு முழு அர்ப்பணத்தையும் பரிகார பக்தியையும் அனுசரிக்கத் தூண்டுவதும் ஆகும்.

இப்பக்தி முயற்சியைக் கடைபிடிப்பதற்கு எவ்வளவு அதிகமான பேர் தேவமாதாவைச் சூழ்ந்து கூடி வருகிறார்களோ, அவ்வளவு விரைவாக மரியாயின் மாசற்ற இருதய வெற்றியானது நிறைவேறும். அப்படி மரியாயின் மாசற்ற இருதயம் வெற்றி பெறும்போதுதான், அதைப் பெற்றால் மட்டுமே சாத்தானின் கொடுங்கோன்மையான அடக்குமுறை ஒரு முடிவுக்கு வரும்.

“இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றி பெறும்.... உலகிற்கு ஒரு சமாதான காலம் கொடுக்கப்படும்,” என நம் தேவ அன்னை பாத்திமாவில் 1917 ஜூலை 13-ம் நாளில் கூறியுள்ளார்கள். இதுவே தேவமாதா பாத்திமாவில் வெளிப்படுத்தியுள்ள கடவுளின் மாபெரும் திட்டத்தின் கடைசி முடிவாகும்.

சாத்தானின் அதிநவீன அழிவுத் திட்டத்தை அடித்து உடைக்கும் பரிசுத்த கன்னிமரியாயின் இம்மாபெரும் கடைசி வெற்றியானது, மாதாவின் தலைமையிலேயே ஏற்படுத்தப்படப் போகிற ஒரு சக்திவாய்ந்த இயக்கமாக உருவெடுத்து செயல்படவில்லை யென்றால் எளிதில் நிறைவேறாது. ஆகவே மரியாயின் பிரமாணிக்கமுள்ளப் பிள்ளைகளையும் ஊழியர்களையும் கொண்ட மரியாயின் பரிகாரப் பேரணி ஒன்றை இப்போது ஏற்படுத்த கடவுள் சித்தம் கொண்டுள்ளார்.

இந்த நம்பிக்கையைப் புனித லூயிஸ் மோன்போர்ட் நமக்குத் தருகிறார். "இறுதிய காலங்களில் மாமரி, சாத்தானுக்கும் அவனைப் பின் செல்கிறவர்களுக்கும், போரில் அணிவகுத்து நிற்கும் சேனையைப் போல் பயங்கரமாயிருக்க வேண்டும். ஏனெனில் ஆன்மாக்களைக் கெடுக்கத் தனக்கு இனி நேரமில்லை – மிகக் கொஞ்சமே உள்ளது – என சாத்தான் அறிந்து ஒவ்வொரு நாளும் தன் முயற்சிகளையும் தாக்குதல்களையும் இரட்டிப்பாக்குகிறான். சாத்தான் சீக்கிரமே கொடூர கலாபனைகளை எழுப்பிவிடுவான். மாமரியின் பிரமாணிக்கமுள்ள ஊழியர்களுக்கும் உண்மையான பிள்ளைகளுக்கும் மிகக் கொடிய கண்ணிகளை அவன் விரிப்பான். மற்றவர்களைவிட இவர்களை மேற்கொள்வது சாத்தானுக்கு அதிகக் கடினமாயிருக்கும்." (மரியாயின் மீது உண்மை பக்தி எண்.50:(7))

''உலகில் என் மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்த வேண்டுமென்று சேச விரும்புகிறோம்" (பாத்திமா மாதா – 1917 ஜூலை 13) புனித லூயிஸ் மோன்போர்ட் சொல்லுகிறபடி மக்கள் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தங்களை அர்ப்பணித்து இவ்வுன்னத பக்தி முயற்சியை அனுசரித்து வருவார்களானால் இது நிறைவேறும். (காண் : உண்மை பக்தி எண். 55) ஏனெனில் அவர் கூறுகிறார்: "சர்வேசுரன் தமது கைவேலையின் சிகரமான மாமரியை இப்பிந்திய காலங்களில் வெளிப்படுத்தி அறிவிக்க விருப்பம் கொண்டுள்ளார்" (உண்மை பக்தி எண். 50)...... ''ஏனெனில் கடவுளின் கைவேலைகளின் சிகரமாக இருக்கிறார்கள். எனவே அதே மரியாயின் நிமித்தம் இப்பூவுலகில் சர்வேசுரன் மகிமைப்படவும் வாழ்த்தப்படவும் விரும்புகிறார்." (உண்மை பக்தி எண். 50.2)

இதுதான் புனித லூயிஸ் மரிய மோன்போர்ட் என்பவருடைய தீர்க்கத் தரிசனத்தால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு, இப்பொழுது பாத்திமாவில் நம் தேவ அன்னை வழியாக வெளிப்படுத்தப்பட்டு, பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ள மரியாயின் மாசற்ற இருதயப் பரிகார பக்தி முயற்சி ஆகும்.

எனவே போதுமான அளவுக்கு மக்கள் தங்கள் வாழ்க்கை நிலைக்கேற்ப இப்பக்தி முயற்சியைக் கடைபிடிக்க மனமுவந்து முன்வருவார்கள் என நம்புகிறோம். இவர்கள் மாதாவின் பெயரால் வெளிவருகிற அநேக அதிகாரப்பூர்வமற்ற, தவறான செய்திகளால் குழப்பமடையாமல், இப்பக்தி முயற்சியைப் பிரமாணிக்கமாய்க்

கடைபிடிக்க வேண்டும்.

இந்நூலின் வழியாக மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு சரியான முறையில் பக்திமுயற்சி அனுசரிக்க விரும்பும் பாரம்பரிய கத்தோலிக்க விசுவாசிகளுக்கு திருச்சபையின் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள் காண்பிக்கப்படும். அவை பாத்திமாச் செய்திகளின் அடிப்படையிலும் புனித லூயிஸ் மரிய மோன்போர்ட் காட்டிய உணர்வுகளின் அடிப்படையிலும் அமைந்திருக்கும். இவ்வான்மீக வழியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பாரம்பரியக் குருத்துவ, துறவற சபைகள் புதிதாய் நிறுவப்பட வேண்டும். இந்நூலின் முதற்பாகத்தில் இப்பக்தியின் வேத சாஸ்திர விளக்கமும், இரண்டாவது பாகத்தில் அதைக் கடைபிடிக்கும் வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன. இதில் காணப்படும் ஆன்மீகம் ஆழமானது. அதன் பயிற்சியும் சற்று சிரமமானது. ஆயினும் சிரமம் எடுத்து இப்பக்தி முயற்சியைக் கடைபிடித்தால் மட்டுமே, திருச்சபை அதன் ஒட்டு மொத்தமான விசுவாசப் பேரழிவிலிருந்து (Universal crisis of Faith) காப்பாற்றப்படும்; அப்போதுதான் அது விலகிச் சென்ற தனது பாரம்பரிய வழிபாட்டிற்குத் திரும்பி வரும் என்பது இந்நூல் ஆசிரியரின் கருத்தாகும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

1. அதிகாரம் – 1 பாத்திமா செய்திகள்
மரியாயின் மாசற்ற இருதயத்தை வெளிப்படுத்துதல் 1

2. அதிகாரம் – 2 பரிகார பக்தியின் அப்போஸ்தல அலுவல்
மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் 12

3. முதல் சனி பக்தி முயற்சி (விளக்கம்) 21

4. அதிகாரம் – 3 பரிகார பக்தியின் வழிவகைகள்
அனுதின ஆன்மீகப் பயிற்சிகள் 26

5. அதிகாரம் – 4 பரிகார பக்தி முயற்சியின்
ஜெபங்களும் பாடல்களும் – பாத்திமா ஜெபங்கள் 33

6. அனுதின ஜெபங்கள் 37

7. விரிவான காலை ஜெபம் 42

8. பகலில் சொல்லத்தகும் ஜெபங்கள் 47

9. திவ்விய நற்கருணையையும் மாதாவையும் சந்தித்தல் 48

10. சுருக்கமான சிலுவைப் பாதை (VIA CRUCIS) 52

11. பாவசங்கீர்த்தனம் செய்யும் வகை 58

12. மாலை ஜெபம் 61

13. ஜெபமாலை 64

14. தேவ மாதாவின் பிரார்த்தனை 66

15. சேசுநாதருடைய திரு இருதயத்தின் ஜெபமாலை 69

16. சேசுநாதருடைய திருஇருதயத்திற்கு குடும்பங்களை
ஒப்புக்கொடுக்கும் ஜெபம் 71

17. சேசுவின் திருஇருதயத்தின் பிரார்த்தனை 72

18. அர்ச். சூசையப்பரைக் குறித்து ஜெபம் 74

19. அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை 75

20. இரவு ஜெபம் 77

21. பரிகார முழு இரவு ஆராதனை
முதல் சனி பக்தி முயற்சியின் வழிபாட்டுச் சடங்குகள்
முதல் பாகம் – நிகழ்ச்சி: 1 பணியும் ஆன்மீகத் தயாரிப்பும் 79

22. பாத்திமா ஜெபமாலை மாதா பிரார்த்தனை 81

23. பாத்திமா திருத்தலப் பரிகார ஜெபம் 85

24. ரஷ்யாவை அர்ப்பணிக்கும் ஜெபம் 86

25. நிகழ்ச்சி : 2 தியானித்து ஜெபமாலை ஜெபித்தல் 88

26. சகலத்திற்கும் இராஜாவாகிய சேசு கிறிஸ்துநாதருக்கு
தன்னை முழுவதும் ஒப்புக் கொடுக்கும் ஜெபம் 96

27. பரிசுத்த பாத்திமா மாதா நவநாள் ஜெபம் 98

28. மரியாயின் மாசற்ற இருதயத்துக்குத் தன்னை
முழுதும் அர்ப்பணிக்கும் ஜெபம் 100

29. இரண்டாம் பாகம் – நிகழ்ச்சி: 3 மரியாயின் ஜெபக் கிரீடம் 101

30. நிகழ்ச்சி : 4 தேவமாதாவின் ஏழு சந்தோஷங்களும்
ஏழு துயரங்களும் 104

31. நிகழ்ச்சி : 5 வியாகுல மாதா ஜெபமாலை 109

32. மாதாவின் துயரப்பாதை (VIA MATRIS) 111

33. மூன்றாம் பாகம் பாவ சங்கீர்த்தனம், திவ்விய பலிபூசை,
பரிகார நன்மை 116

34. நான்காம் பாகம் – பரிகாரத் திருமணிகள் 116

35. திருமணி : 1. தவ ஜெபமாலைத் திருமணி 117

36. திருமணி : 2. சேசு மரிய திரு இருதயங்களுக்கு
நிந்தைப் பரிகாரத் திருமணி 135

37. சேசு மரிய இருதயங்களுக்கு நிந்தைப் பரிகார ஜெபம் 146

38. வியாதியஸ்தரை மந்திரித்தல் 147

39. ஜெபமாலை தேவ இரகசியங்களின் விரிவான தியானம் 149

பரிகார பக்தியின் பாடல்கள்

1.	தோத்துஸ் தூவுஸ் (விருது வாக்கு கீதம்)	36
2.	முழுவதும் உமக்கே யான் சொந்தம் (Totus Tuus)	37
3.	மைந்தனார் சிலுவை மீது (Stabat Mater)	52
4.	வாரும் சிருஷ்டிகர் ஸ்பிரித்துஸ் (Veni Creator Spiritus)	79
5.	வேனி க்ரேயாத்தோர் ஸ்பிரித்துஸ்	79
6.	மரியாயின் மாசற்ற இருதயமே (பரிகார பவனிப் பாடல்)	80
7.	எழுந்தீர் எம் நேசத் தாயே (On a tree O Loving Mother)	85
8.	மாதாவே சரணம்	87
9.	ஜெபமாலைத் தேவ இரகசியப் பாடல்	88
10.	பாத்திமா பதி ராணி	96
11.	இராஜாதி ராஜா (கிறிஸ்து இராஜாவின் கீதம்)	97
12.	பாத்திமா கோவா தா ஈரியாவில் (In Fatima Cove)	98
13.	ஆவே மாரிஸ் ஸ்தெல்லா	99
14.	ஆழியின் தாரகையே (Ave Maris Stella)	99
15.	வியாகுல மாமரியே	110
16.	தேவனின் தாயே மாமரியாயே	115
17.	சேசுவே எழுந்தருளுவீர்	116
18.	முன்னாள் வனத்தினில்	119
19.	பாடுகள் நீர் பட்ட போது	121
20.	ஜீவிய நாள் முழுதும்	124
21.	இரக்க மென்றும் சுரக்கும்	129
22.	ஆணி கொண்ட உம் காயங்களை	131
23.	மாதாவின் மறைந்த காயங்களை	131

24.	சோகமாதா அம்மா மரி	134
25.	என் மீட்புராகிய ஏக தேவனே	137
26.	சேசுவின் மதுர திரு இருதயமே	138
27.	தேவ நற்கருணையில் சிநேக பலியாய்	143
28.	பாத்திமா பதியிலே பாலகர் மூவருக்கு	145
29.	ஓ தேவ சற்பிரசாதமே	149
30.	நித்திய ஸ்துதிக்குரிய	177
31.	அன்புருவாய் எம் நடுவில்	177
32.	சேசு எம் அன்பே உம் திரு	177
33.	என் யேசுவே என் நல் யேசுவே	178
34.	மாசில்லா மாமரியாயின் பேர் சொன்னால்	178
35.	மாசற்ற கன்னியே வாழ்க தேவன்னையே	179
36.	வந்தோம் உம் மைந்தர் சுவடி	180
37.	மாமரியே நல்ல தாய் மரியே	180
38.	மாதாவே துணை நீரே உம்மை	181
39.	வானவர் புடை சூழ	181
40.	அலை கடல் ஒளிர் மீனே	182
41.	ஞானம் நிறைக் கன்னிகையே	182
42.	சூரியன் சாய காரிருள் மெல்ல	183
43.	ரட்சகர் திருமாதாவை பட்ச நிறையும் மாதாவை	183
44.	தாயே நீரேயன்றி எம்மை	183
45.	எம் தாய் எம் தாய் எம் தாய்	184
46.	சர்வ தயாபர சேசுவே (பிழை தீர்க்க மந்திரம்)	184
47.	தேவ மாதா பிரார்த்தனைப் பாடல்	186

பாத்திமா செய்திகள்

மரியாயின் மாசற்ற இருதயத்தை வெளிப்படுத்துதல்

1. பாத்திமா செய்தி என்றால் என்ன?

பாத்திமா செய்தி என்பது தேவ மாதாவினால் 20-ம் நூற்றாண்டில் பாத்திமாவில் வெளிப்படுத்தப்பட்டு, திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட பரலோகச் செய்தி. இதனை அறிவிக்க தேவமாதா போர்த்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா என்னும் சிற்றூரில் 1917-ம் ஆண்டில், தீர்க்கத்தரிசிகளில் மிகப்பெரும் தீர்க்கத்தரிசினியாகத் தோன்றினார்கள். உலகிலுள்ள மனிதர்களையெல்லாம் ஜெபம், தவம், பரிகாரம் செய்யும்படி அழைத்தார்கள். கடவுளின் திட்டப்படி உலகத்தை ஆன்மீக அழிவிலிருந்தும் சமூக சீர்கேடுகளிலிருந்தும் காப்பாற்றுவதற்காக, உலகத்தில் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை அறிமுகம் செய்து, பாவிகள் மனந்திரும்பவும் ரஷ்யா மனந்திரும்பவும் அதனால் உலக சமாதானம் வரும் படியாகவும் "பரலோகத்திலிருந்து வந்த ஒரு சமாதானத் திட்டத்தை"ச் செயல்படுத்த மாதா பாத்திமாவில் வெளிப்படுத்திய பரலோக உண்மைகளே பாத்திமா செய்தி எனப்படும்.

2. மாதாவின் மாபெரும் திட்டம்

"மக்கள் என்னை அறிந்து நேசிக்கும்படி சேசு உன்னைப் பயன்படுத்த விரும்புகிறார்; அவர் உலகில் என் மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்த விரும்புகிறார்...." இப்படி மாதா லூசியாவிடம் 1917 ஜூன் 13-ம் நாளில் கூறினார்கள். இதுவே பாத்திமா மாதா தம்முடைய காட்சிகளில் வெளிப்படுத்திய கடவுளின் மாபெரும் திட்டமாகும். இத்திட்டமானது இன்றைய புதிய திருச்சபையின் நவீன வேதசாஸ்திரப் பாடத் திட்டத்திற்கு நேர் எதிரானது.

உலகில் பாவம் பெருகியபோதெல்லாம் கடவுள் ஒரு பரலோகத் திட்டத்தை அறிவிக்கிறார். அதன்படி ஒரு தீர்க்கத்தரிசியின் வாயிலாக மனிதர்களை எச்சரிக்கிறார். சத்திய வேத போதகத்தினாலும் செய்திகளினாலும் மனிதர்களுக்கு அவரது உண்மையைக் கற்பிக்கிறார். தம்முடைய வரப்பிரசாதத்தினாலும், இரக்கத்தினாலும் மனிதர்களைக் காப்பாற்றி இரட்சிக்கிறார். அல்லது, மனிதர்கள் அவரைப் பிடிவாதமுடன் நிந்திக்கும் போது அவர்களை அழித்து நிர்மூலமாக்குகிறார்.

"சர்வேசுரன் தமது கைவேலையின் சிகரமான மாமரியை இப்பிந்திய காலங்களில் வெளிப்படுத்தி அறிவிக்க விருப்பம் கொண்டுள்ளார்"......

"ஏனெனில் பூலோகத்தில் வரப்பிரசாதத்தாலும், பரலோகத்தில் மகிமையாலும் நிறைந்துள்ள மாமரியின் நிமித்தம் சர்வேசுரன் இப்பூவுலகில் மகிமைப்படவும் வாழ்த்தப்படவும் விரும்புகிறார்" (மரியாயின் மீது உண்மை பக்தி எண். 50)

இதற்காக பாத்திமா செய்தியானது நம் தேவ அன்னை பரலோகத்திலிருந்து கொண்டு வந்த மும்மடங்குத் திட்டத்தை உலகிற்கு அறிவிக்கிறது.

1) மாதாவின் இரக்கத் திட்டம் - பாவிகள் மனந்திரும்பும்படியாக.

2) மாதாவின் வல்லபத் திட்டம் - தப்பறைகளுக்கு எதிராகப் போராடும்படியாக.

3) மாதாவின் வரப்பிரசாதத் திட்டம் - தம் பிள்ளைகளை அர்ச்சிக்கும்படியாக.

மாதாவின் பிரமாணிக்கமுள்ள ஊழியர்களும் மாதாவின் பிந்திய கால அப்போஸ்தலர்களும் மாதாவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு விசேஷ வரப்பிரசாதத்தினால் அர்ச்சிக்கப்படுவார்கள்.

1) மாதாவின் இரக்கத் திட்டம்:

"நாஸ்த்தீக கம்யூனிசம்" என்னும் தப்பறையை ரஷ்யா உலகமெங்கும் பரப்பும்போது என்ன நேரிடும் என்பதை நன்கு அறிந்திருந்த சர்வேசுரன், தமது மாதாவை உலகிற்கு அனுப்பி, அவர்கள் பாத்திமாவில் தோன்றி இரக்கமுடன் மனிதர்களை எச்சரிக்கும்படியாக 1917-ஆம் ஆண்டில் சித்தம் கொண்டார். ஏனெனில் அதே ஆண்டில்தான் கடவுளற்ற ஒரு மனிதமயமான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு லெனின் மாஸ்கோவில் கம்யூனிச இரத்தப் புரட்சியை ஆரம்பித்தான்.

இன்று உலகமானது கடவுளுக்கு எதிராக எழுந்து நிற்கிறது என்றால், கடவுளின் திருச்சபையும் மனிதனையே மையமாகக் கொண்டு மாறியிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் ரஷ்யாவின் அத்தப்பறைகளை உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதுதான். எப்படியோ லூசிபெர் நவீன வேத சாஸ்திரிகளைத் தன் கைவசப்படுத்தி ரஷ்யாவின் தப்பறையை திருச்சபைக்குள் புகுத்திவிட எடுத்த முயற்சியில் வெற்றி பெற்று விட்டான். அதனால் அவன் "மனிதமையத் திருச்சபை" என்னும் உலகநயப் புதிய திருச்சபைக்குள் "மனிதம்" (உலகநய மனிதமயம் = secular humanism) என்னும் தப்பறையைப் புதிய வேதசாஸ்திரம் என்ற பெயரில் அறிமுகம் செய்து, ஒரு புதிய (போலி) திருச்சபையை ஏற்படுத்தியுள்ளான்.

மாதா தமது மூன்றாவது காட்சியில் சொன்னபடி: "மக்கள் எனது வேண்டுகோளுக்குச் செவிமடுப்பார்களானால் அநேக ஆன்மாக்கள் இரட்சிக்கப்படுவார்கள்.......... ரஷ்யா மனந்திரும்பும், உலக சமாதானம் வரும். இல்லையென்றால் ரஷ்யா தன் தப்பறைகளை உலகமெங்கும் பரப்பும்......"

பாத்திமா மாதா கூறியுள்ள இந்த வேண்டுகோள்தான் நமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு நம்மைச் செயல்படத் தூண்டவேண்டும். மாதாவின் இவ்வேண்டுகோள் இரண்டு வகைப்பட்டது.

a) ஒரு பக்கத்தில் அது மாதாவின் ஒரு உருக்கமான அழைப்பு. அதாவது பாவிகள் மனந்திரும்புபடியாக நம் இரக்கமுள்ள மாதா ஜெபம், தவம், பரிகாரம் இவைகளை அனுசரிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறார்கள்.

b) மறு பக்கத்தில் அது மாதாவின் ஒரு அதிகாரமுள்ள ஆணை. அதாவது, ரஷ்யா மனந்திரும்புவதற்காக நம் மகிமையுள்ள இராக்கினி ரஷ்ய நாட்டைத் தமது மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும் என ஆணையிடுகிறார்கள்.

அதன்பின் இவற்றை எப்படி அனுசரிக்க வேண்டும் என கற்பிக்கிறார்கள்:

"கடவுள் உங்களுக்கு அனுப்புகிற துன்பங்களை அமைந்த மனதோடு ஏற்றுத் தாங்கிக் கொள்ளவும், அவருக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் பாவிகள் மனந்திரும்பவும் அத்துன்பங்களை ஒப்புக்கொடுக்கவும் தயாராயிருக்கிறீர்களா?" (பாத்திமாவில் மாதா சொன்ன முதல் செய்தி - 1917 மே 13)

"ஒவ்வொரு நாளும் ஜெபமாலை சொல்லுங்கள். பாவிகளுக்காக உங்களைப் பலியாக்குங்கள். விசேஷமாக, ஒறுத்தல் முயற்சிகள் செய்யும் போது: ஓ! என் சேசுவே, உமது அன்பிற்காகவும் பாவிகள் மனந் திரும்புவதற்காகவும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராகச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவும் இதை ஒப்புக்கொடுக்கிறேன் எனச் சொல்லுங்கள்." (1917 ஜூலை 13)

"மனிதர்கள் தங்கள் பாவ வாழ்க்கையைத் திருத்த வேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். ஏற்கெனவே, மிகவும் நொந்து போயிருக்கும் நமதாண்டவரை மனிதர்கள் இதற்குமேலும் நோகச் செய்யக் கூடாது." (1917 அக்டோபர் 13)

"பாவிகள் செல்லும் நரகத்தைக் கண்டீர்கள். அவர்களைக் காப்பாற்றும் படியாக, கடவுள் உலகில் என் மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்த விரும்புகிறார்."...... "உலகிற்கு வரப்போகும் கடவுளின் தண்டனைகளி லிருந்து தப்பித்துக் கொள்ளும்படி ரஷ்யாவை என் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கவும் முதல் சனிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்கும்படியாகவும் நான் கேட்க வருவேன்." (1917 ஜூலை 13)

மாதாவின் இரக்கமுள்ள தலையீடு எவ்வளவு உருக்கமானது! நரகத்திலிருந்தும் கடவுளின் தண்டனைகளிலிருந்தும் பாவிகளையும், உலகத்தையும் காப்பாற்றுவதற்காக எவ்வளவு இரக்கமுள்ள திட்டத்துடன் மாதா நம்மிடம் வருகிறார்கள் பாருங்கள்!

"பாத்திமாவில் நம் தேவ அன்னை விடுத்துள்ள வேண்டுகோள்களை ஏற்று நாமெல்லாம் கீழ்படிய வேண்டும். அதுபற்றி சந்தேகப்படுகிற காலம் கடந்துவிட்டது." (பாப்பரசர் 12-ம் பத்திநாதர், 1950)

2) மாதாவின் வல்லபத் திட்டம்

பாத்திமாவில் மாதா ஒரு தீர்க்கத்தரிசினியாக மட்டுமல்ல, நவீனத் தப்பறைகளுக்கு எதிராக ஒரு போர் முழக்கமாகவும் வந்துள்ளார்கள். ஏனெனில் நவீன தப்பறையானது கத்தோலிக்க விசுவாசத்தை திருச்சபைக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் அழித்துக் கொண்டிருக்கிறது.

உண்மையாகவே பாத்திமா செய்தியானது சாத்தானுடைய நாஸ்த்திக சோவியத் திட்டத்திற்கு எதிராகப் போராடும் திட்டம். ஏனெனில் சோவியத் திட்டம் என்பது கத்தோலிக்கத் திருச்சபையை கம்யூனிசத்தின் வெற்றிக்கான ஒரு செயலாக்கமுள்ள கருவியாகப் பயன்படுத்துகிற சதித் திட்டமாகும்!

1858-ம் ஆண்டில் தேவமாதா லூர்து நகரில் வந்து காட்சி கொடுத்து பாப்பரசர் ஒன்பதாம் பத்திநாதர் 1854-ல் பிரகடனம் செய்த மாதாவின் அமலோற்பவம் என்ற சத்தியத்தை உறுதிப்படுத்தியது போல, இப்பொழுது மாதா பாத்திமாவில் 1917-ம் ஆண்டு காட்சி கொடுத்து பாப்பரசர் 11-ம் பத்திநாதர் 1937-ல் கம்யூனிசம் தன்னிலேயே தீமையானது (Divini Redemptoris No. 58) என்று பிரகடனம் செய்த சத்தியத்தை முன் கூட்டியே உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்விதமாக பத்திமா செய்திகளால் மாதா திருச்சபையின் மிக முக்கியமான வேதசத்தியங்களை மீண்டும் வலியுறுத்திப் போதித்து, மார்க்சிஸம் என்னும் நாஸ்த்தீகக் கம்யூனிசத்தின் தப்பறைகள் உலகமெங்கும் பரப்பப்படும்போது திருச்சபையின் உண்மைகள் மறுதலிக்கப்படும் என எச்சரித்துள்ளார்கள்.

இறுதிக்காலப் போர்முழக்கம்

கத்தோலிக்கத் திருச்சபைக்குள்ளே இன்று சத்தியத்திற்கும் தப்பறைக்கும் (பழைய ஞான உபதேசத்திற்கும் புதிய ஞான உபதேசத்திற்கும்) எதிரே போராட்டம். நன்மைக்கும் தீமைக்கும் (விசுவாச, நல்லொழுக்க

ஆன்மீகத்திற்கும் மனோநிலை ஆன்மீகத்திற்கும் - psycho spirituality) எதிரே போராட்டம். பாரம்பரிய இயக்கங்களுக்கும் நவீன இயக்கங்களுக்கும் (கத்தோலிக்க திருச்சபைக்கும் புதிய திருச்சபைக்கும்) எதிரே போராட்டம். இவைகளைப் பார்க்கும்போது நம்தேவ அன்னை கத்தோலிக்கத் திருச்சபையின் உண்மையான போதனைகளுக்கு சார்பாகவே நின்று கம்யூனிசம் என்னும் சிவந்தப் பறவை நாகத்திற்கு எதிராகப் போர்புரிய தயாராய் நிற்கிறார்கள் என்பது நமக்கு ஆறுதல் அளிக்கிறது.

உண்மையிலேயே பாத்திமா செய்தியானது மாதாவின் இறுதிக்காலப் போராட்டத்தின் அறைகூவலாக உள்ளது. மாதா தம்முடைய வல்லமையுள்ள திட்டத்தினால் கடவுளின் எதிரிகளை விரட்டியடிப்பார்கள். ஏனெனில் கம்யூனிசம் என்னும் சிவந்தப் பறவை நாகமானது தன்னுடைய விஷ வாலினால் ஏற்கனவே திருச்சபையின் இளவரசர்களில் மூன்றில் ஒரு பகுதியினரைத் தரையில் இழுத்துப் போட்டுவிட்டது. (காண் : காட்சியாகமம் 12:4)

ஆம், "சாத்தானின் புகை" (புரோட்டஸ்டாண்டிஸம், மார்க்சிஸம், சாத்தானிஸம் ஆகியவை) கடவுளின் ஆலயம் என்னும் திருச்சபைக்குள் நுழைந்துவிட்டது என பாப்பரசர் 6-ஆம் சின்னப்பர் 1972-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி கூறியுள்ளார். இதுதான் இன்றைய திருச்சபை, அதாவது "புதிய திருச்சபை." இப்புதிய திருச்சபையானது சாத்தானால் தரையில் இழுத்துப் போடப்பட்டுள்ளதைப் பற்றி தானியேல் தீர்க்கத்தரிசி ஏற்கனவே கூறியுள்ளார்: "நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்திருக்கக் கண்டீரே; அவர்கள் மற்ற மனிதர்களோடே கலியாண சம்பந்தங் கலப்பார்கள்; ஆனால் களிமண்ணோடே இரும்பு கலக்காததுபோல் அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்." (தானியேல் ஆகமம் 2:43)

இந்த நவீனத் தப்பறைவாதிகளுக்கு எதிராக மாதா ஏற்படுத்தப்போகிற படையணிக்குப் பலமூட்டும்படியாக கடவுள் ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தைக் கொடுத்திருக்கிறார். "அந்த ஸ்திரீ வனாந்தரத்திலே தனக்குரிய ஸ்தலத்துக்குப் பறந்து போகும் படி பெருங் கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அவ்விடத்திலே அவள் அந்தப் பாம்புக்கு எட்டியத் தொலைவில், காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படுகிறாள்." (காட்சியாகமம் 12:14)

இந்த கால அவகாசத்தைப் பயன்படுத்தி நவீனத் தப்பறைவாதிகள் பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபைக்குள் உலகாதாய உணர்வுப்படியான பல புதிய சட்டங்களையும் மாற்றங்களையும் புகுத்துவதற்குத் தங்களால் ஆன

விக்கிரகங்களையெல்லாம் செய்வார்கள். இவ்விதமாய் திருச்சபையைத் தரையில் இழுத்துப் போடுவார்கள். "அவன் உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, மகா உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை நசுக்கி, காலங்களையும் சட்டங்களையும் மாற்றக்கூடுமென்று ஆலோசிப்பான்; அவர்களோ ஒரு காலமும், காலங்களும், அரை காலமும் செல்லுமட்டும் அவன் கையிலே ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்." (தானியேல் ஆகமம் 7:25)

ஆனால் இறுதியில், மாதா தமக்கு மிகவும் பிரமாணிக்கமுள்ளப் பிள்ளைகளைக் கொண்டு ஒரு உத்தமமான படையணியைத் தமக்கென்று தயாரித்து ஏற்படுத்துவார்கள். அவர்கள் "பரிசுத்த கன்னிமரியாயின் மீது தலைசிறந்த பக்தி பூண்டிருப்பார்கள்; மாமரியின் ஒளியால் வெளிச்சம் பெறுவார்கள்; மாதாவின் அமுதால் உணவூட்டப்பெறுவார்கள்; அவ்வன்னையின் கரத்தால் நடத்தப்படுவார்கள்; அவர்களின் கரத்தில் தாங்கப்படுவார்கள்; மாமரியின் ஆதரவில் பாதுகாக்கப்படுவார்கள். இதனால் அவர்கள் ஒரு கையால் போரிட்டு மறுகையால் கட்டி எழுப்புவார்கள். ஒரு கையினால் அவர்கள் பதிதரையும் அவர்களுடைய பதிதங்களையும், பிரிவினைக்காரரையும் அவர்களுடைய விக்கிரக ஆராதனையையும், பாவிகளையும், அவர்களுடைய துர்க்குணத்தையும் எதிர்த்துப் போராடி வென்று நசுக்கி விடுவார்கள். இன்னொரு கையினால் அவர்கள் கன்னி மாமரி என்னும் உண்மையான சாலமோனின் ஆலயத்தையும், பரம இரகசியம் அமைந்த கடவுளின் நகரத்தையும் கட்டியெழுப்புவார்கள்." (உண்மை பக்தி எண். 48).

இவ்விதமாக இன்று, தேவமாதாவும் சாத்தானும் தங்களோடு போராட படைவீரர்களைச் சேகரிக்கிறார்கள். பசாசானவன் அதிக வல்லமை உள்ளவனாகத் தோன்றுகிறான். "ஆயினும் பிந்திய காலங்களில்தான் நரகத்தின் மீது மாமரி கொள்ளும் அதிகாரம் அதிக சிறப்புடன் விளங்கும். அப்போது சாத்தான் கன்னிமரியாயின் குதிங்காலைத் தீண்டும்படி பதிவிருப்பான். அதாவது, மாமரியின் தாழ்மையான அடிமைகளையும் எளிய பிள்ளைகளையும் தீண்டும்படி மறைந்திருப்பான். அவர்கள் சாத்தானுக்கெதிராகப் போராடும்படி மாமரியால் தூண்டி எழுப்பப்படுவார்கள். உலகின் கண்களுக்கு அவர்கள் எல்லாரும் சிறியோராகவும் எளியவராகவும் தோன்றுவார்கள்." (உண்மை பக்தி எண்.54)

இந்த யுத்தத்தால் புதிய திருச்சபையின் அதிகார பலத்திற்கு எதிராக மாதா அடைந்து கொள்ளப்போகும் வெற்றியின் நம்பிக்கை நமக்குத்

தெளிவாகவே சொல்லப்பட்டிருக்கிறது: "இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றிபெறும்.... உலகிற்கு ஒரு சமாதான காலம் கொடுக்கப்படும்." இப்படி நம் தேவ அன்னை பாத்திமாவில் 1917 ஜூலை 13-ம் நாளில் கூறியுள்ளார்கள்.

மேலும் தானியேல் தீர்க்கதரிசியினால் இவ்வுண்மை மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மரியாயின் மாசற்ற இருதயத்தின் வெற்றியானது கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்லாகக் காண்பிக்கப்பட்டுள்ளது: "நீர் பார்த்துக் கொண்டிருந்த போது, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் மலையிலிருந்து உருண்டு, சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களிலே மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது........ சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியை எல்லாம் நிரப்பிற்று." (தானியேல் ஆகமம் 2:34,35)

ஆனால் மாதாவின் இந்த வல்லமையுள்ள திட்டம் எப்போது தொடங்கும்? மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் அடையாளம் எதுவாயிருக்கும்?

இது எப்போது நடைபெறும் என்றால், புனித லூயிஸ் மோன் போர்ட் கூறுகிறபடி, நம் ஆசீர்வதிக்கப்பெற்ற தேவமாதா இதுவரையில் இருந்ததை விட அதிகமாக அறியப்படும்போதும், அதிகமாக நேசிக்கப்படும்போதும், அதிகமாக மதிக்கப்படும் போதும் நடைபெறும். இந்த உத்தமமான, அந்தரங்கப் பயிற்சியைப் பரிசுத்த ஆவியின் அருளுடனும், ஒளியுடனும் முன் குறிக்கப்பட்டவர்கள் செய்யப்புகுவார்களானால் கடவுளின் இவ்விருப்பம் நிச்சயமாய் நிறைவேறும். (காண்: உண்மை பக்தி எண். 52)

மரியாயின் மாசற்ற இருதயப் பரிகார பக்தியைத் தீவிரமுடன் அனுசரிக்க எவ்வளவுக்கு அதிகமானபேர் மாதாவின் பாதத்தில் கூடிவருகிறார்களோ, அவ்வளவு வேகத்தில் இவ்வெற்றி நிறைவேறும். சகோதரி லூசியா கூறியுள்ளபடி, "போதுமான அளவுக்கு மக்கள் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை அனுசரிக்க வேண்டும்."

நடைமுறையில் மாதாவின் இந்த வல்லமையுள்ள திட்டம் நிறைவேறுவதற்கு ஏராளமான தேவ வரப்பிரசாதம் தேவைப்படுகிறது. எனவே இத்தேவ வரப்பிரசாதத்தைப் பெறுவதற்குரிய ஒரு வரப்பிரசாதத் திட்டத்தையும் மாதா கொண்டுவந்திருக்கிறார்கள்!

3) மாதாவின் வரப்பிரசாதத் திட்டம்

பாத்திமா மாதாவின் மிக முக்கியமான அலுவல் என்னவென்றால் தம்முடைய வரப்பிரசாத மத்தியஸ்த்துவத்தை வெளிப்படுத்துவது. அதாவது,

ஆன்மாக்களைக் கடவுளின் வெளிச்சத்திற்குள் வழிநடத்தி, அவர்கள் அர்ச்சிஷ்டதனம் அடைய வழி வகுப்பது.

தமது முதலாவது காட்சியில் (1917 மே 13), பாத்திமா மாதா "கடவுளின் வரப்பிரசாதம் உங்களைத் தேற்றும்" என்ற வார்த்தைகளைச் சொன்னபோது அச்சிறுவர்களை நோக்கித் தமது கரங்களை விரித்தார்கள். மாதாவின் கரங்களிலிருந்து மிகவும் சக்திவாய்ந்தப் பேரொளி அப்பிள்ளைகள் மேல் வீசியது. அவ்வல்லமை எப்பேற்பட்டதாக இருந்தது என்றால், அந்த ஒளி அவர்களுடைய இருதயத்தில் ஊடுருவி ஆன்மாவின் ஆழத்திலே அவர்கள் தங்களையே கடவுளில் காணச் செய்தது. ஏனெனில் அந்த ஒளி கடவுளாகவே இருந்தார்."

1917 ஜூன் 13-ம் நாளன்று இரண்டாவது முறையாக மாதா தம்முடைய கரங்களை விரித்துத் தம்மிடமிருந்து புறப்படும் பேரொளியின் பிரதிபலிப்பை அவர்களுக்கு ஊட்டினார்கள். கடவுளின் அப்பேரொளியில் அவர்கள் மாதாவின் இரகசியத்தைக் காட்சி தியானத்தில் காணக்கூடியதாய் இருந்தது. "அது முட்களால் ஊடுருவப்பட்ட மாதாவின் இருதயம்! மாதாவின் வலது கரத்தின் உள்ளங்கையில் முட்களால் சூழப்பட்ட ஒரு இருதயம் இருந்தது. நாங்கள் அது மரியாயின் மாசற்ற இருதயம் எனக் கண்டு கொண்டோம். மனிதர்களின் பாவங்களினால் நிந்திக்கப்பட்டுப் பரிகாரத்தைக் தேடும் இருதயமாக அது வெளிப்பட்டது" என சகோதரி லூசியா மொழிந்துள்ளாள். இங்கே நாம் பாத்திமா செய்தியின் மூலாதாரமான உண்மையைச் சந்திக்கிறோம். அதாவது பாத்திமா இரகசியத்தின் அந்தரங்கத்திற்குள் நுழைகிறோம். இந்த வெளிப்படுத்துதலின் பயன் என்னவென்றால், அது மரியாயின் மாசற்ற இருதயத்தை மிக அந்நியோந்நியமாகவும் தீவிரமாகவும் நேசிக்கச்செய்கிறது. சகோதரி லூசியா கூறுகிறபடி: "அந்த நாளில் எங்களுக்கு வழங்கப்பட்ட அப்பேரொளியின் நோக்கம் என்னவென்றால் மரியாயின் மாசற்ற இருதயத்தைப் பற்றி ஒரு விசேஷ ஞானமும் அதன் மேல் ஆழமான சிநேகமும் ஆகும். அன்றிலிருந்து எங்கள் இருதயங்களில் மரியாயின் மாசற்ற இருதயத்தை மிக ஆவலுடன் நேசிக்கும் உணர்வு ஏற்பட்டது." (லூசியாவின் நான்காவது சம்பவக் குறிப்பேடு பக். 333)

சகோதரி லூசியா தொடர்ந்து கூறுவது: "ஜஸிந்தா உருக்க நேசத்தினால் உந்தப்பட்டு என்னிடம் கூறியது என்னவெனில், மாதாவின் மாசற்ற இருதயம் உங்களுக்குப் புகலிடமாக இருக்கும், அது உங்களைக் கடவுளிடம் இட்டுச் செல்லும் எனக்கூறினார்களே: அதை நீ நேசிக்க

வில்லையா? மாதாவின் இருதயம் எவ்வளவு அருமையானது; நான் அதை எவ்வளவாக நேசிக்கிறேன்!"

இச்சிறுவர்களுக்கு ஒரு வருடத்திற்கு முன்னால் சம்மனசானவர் தோன்றி, சேசுவும் மாதாவும் உங்களுக்கென இரக்கமுள்ள திட்டங்களை வைத்திருக்கிறார்கள் எனக் கூறினார். இப்பொழுது மாதா இந்த நூற்றாண்டிற்கான கடவுளின் மாபெரும் திட்டத்தை அச்சிறுவர்கள் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். அது என்னவெனில்: "உலகில் என் மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்த சேசு விரும்புகிறார். இப்பக்தி முயற்சியைக் கடைபிடிப்பவர் களுக்கு நான் இரட்சணியத்தை வாக்களிக்கிறேன்."

புனித லூயிஸ் மரிய மோன்போர்ட் கூறுகிறபடி இது எப்பொழுது நிறைவேறும் என்றால், பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தாலும் வரப்பிரசாதத்தாலும் மக்கள் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தங்களை அர்ப்பணித்துப் பயிற்சி செய்யும் இந்த உன்னதமான அந்தரங்க பக்தி முயற்சியைப் போதுமான பேர் கடைபிடிக்கும்போது நிறைவேறும். (காண்: உண்மைபக்தி எண். 55)

இப்பக்தி முயற்சியானது இந்த நூற்றாண்டுக்குரியது என்றால், இப்போது வாழ்கிற நாம்தாம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த வரப்பிரசாதத் திட்டத்தில் நாம் ஒத்துழைக்க வேண்டும். மரியாயின் மாசற்ற இருதயத்தின் இந்த அப்போஸ்தல அலுவலில் நாம் அங்கத்தினர்களாக வேண்டும்.

மாதா நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார்கள். லூசியாவைப் பார்த்து: "மக்கள் என்னை அறிந்து நேசிக்க சேசு உன்னைப் பயன்படுத்த விரும்புகிறார்," என்று சொன்னபோது மாதா உன்னையும் என்னையும் பார்த்துதான் கூறினார்கள். இந்த அழைப்புக்கு நாம் எப்படி செவிசாய்க்கலாம்? எப்படியெனில் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு முழு அர்ப்பணம் செய்து பரிகார பக்தியைத் தீவிரமாய்க் கடைப்பிடிப்பதினால்.

புனித லூயிஸ் மோன்போர்ட் கூறுகிறபடி: "பிந்திய காலத்தின் இந்த அப்போஸ்தலர்கள் தங்களை முழுவதும் மாமரிக்கு அர்ப்பணம் செய்து அவர்களின் ஊழியர்களாகவும் நேச அடிமைகளாகவும் உழைப்பார்கள்...... அவர்கள் தங்கள் ஆத்துமத்தையும் சரீரத்தையும் முழுமையாக மாமரிக்குக் கையளித்து சேசுவுக்குச் சொந்தமாவார்கள்." (உண்மை பக்தி எண். 55) இவ்விதமாக மரியாயின் மாசற்ற இருதயத்திலிருந்து பொழியப்படும் விசேஷ

வரப்பிரசாதத்தினால் இந்த மரியாயின் பேரணிக் குழுக்கள், "புனிதத்தின் தீவுகளாய்" உருவாகி உலகமெல்லாம் பரந்து விரிந்து ஒரு அகில உலக "மரியாயின் பரிகாரப் பேரணியை" விரைவில் தோன்றச் செய்வனவாகும்.

மரியாயின் பரிகாரப் பேரணி

பாத்திமா மாதாவே லூசியா, பிரான்சிஸ்கோ, ஜஸிந்தா ஆகிய மூன்று சிறுவர்களைக் கொண்ட ஒரு ஜெப, தவ, பரிகார மாதாக் குழுவை ஏற்படுத்தினார்கள். இவர்கள் தமது மாசற்ற இருதயத்தோடு இணைந்திருந்து (அர்ப்பணித்து), தினசரி ஜெபமாலை சொல்லவும் பாவிகள் மனந்திரும்பும்படியாக ஒறுத்தல் முயற்சிகள் செய்யவும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரமாக முதல் சனி பக்தி அனுசரிக்கவும் மாதாவே கற்பித்தார்கள்.

இவ்விதமாக மாதா பாத்திமாவில் ஏற்படுத்திய பரிகார பக்தியானது உலகம் முழுவதிலும் தொடர்புடைய சிறுசிறு பரிகாரக் குழுக்களை ஏற்படுத்துவதிலேயே அடங்கியிருக்கிறது. இந்தக் குழுக்கள் மாதாவின் இம்மாபெரும் திட்டத்தோடு இணைந்து செயல்படும் நோக்கமுள்ளவைகளாக இருக்க வேண்டும். இவர்கள் பரிசுத்த கன்னிமரியாயின் கரங்களில் தகுதியுள்ள கருவிகளாக இயங்கும்படி விடாமல் முயன்றுவர வேண்டும். இவ்விதம் சாத்தானுக்கு எதிராக மரியாயின் மாசற்ற இருதயம் வெற்றி கொள்வதற்கு ஜெபம், ஒறுத்தல், கடின உழைப்பு (அப்போஸ்தல அலுவல்) ஆகிய மும்மடங்கு வழிகளைக் கடைபிடிக்க வேண்டும்.

மாதாவின் இம்மாபெரும் திட்டத்தின் இறுதி நோக்கு என்னவென்றால், சேசு கிறிஸ்துநாதருடைய வெற்றியை நிலைநாட்ட மாதா சாத்தானின் தலையை நசுக்கி வெற்றி பெறுவதுதான். "இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றிபெறும்; பாப்பரசர் ரஷ்யாவை என் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணிப்பார்; ரஷ்யா மனந்திரும்பும் உலகிற்கு ஒரு சமாதான காலம் கொடுக்கப்படும்."

பாத்திமாவில் மாதா வெளியிட்டுள்ள இச்செய்தியை முத்திரையிட்டு உறுதிப்படுத்தும் வகையில் கடவுள் சூரியனில் ஒரு மாபெரும் அற்புதத்தை நிகழ்த்தினார். 1917 அக்டோபர் 13-ம் நாளில் கோவா தா ஈரியாவில் 70,000 பேர் இவ்வற்புதத்தை நேரில் பார்த்தார்கள். இது காட்சியாகமம் 12-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நிகழ்ச்சியின் நிறைவேற்றம் அன்றோ? "அன்றியும் வானத்திலே ஒரு பெரிய அடையாளம் காணப்பட்டது; அதாவது:

ஒரு ஸ்திரீ சூரியனை ஆடையாக அணிந்திருந்தாள். அவளுடைய பாதங்களின் கீழ் சந்திரனும், அவளுடைய சிரசின் மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஓர் கிரீடமும் இருந்தது." (காட்சியாகமம் 12:1)

இந்த வெற்றிப்புகழ் கொண்ட பெண்மணியைப் பற்றித்தான் ஆதியில் கடவுள் தமது ஆதி சுவிசேஷ முன்னறிவிப்பில் வெளிப்படுத்தியுள்ளார்: "உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவளுடைய வித்துக்கும், பகைமை உண்டாக்குவோம்; அவள் உன் தலையை நசுக்குவாள்; நீயோ அவளுடைய குதிங்காலைத் தீண்டப் பிரயத்தனம் பண்ணுவாய்." (ஆதியாகமம் 3:15)

கடவுள் தமது பரிசுத்த மாதாவைப் பசாசுக்கு மிக வல்லமையுள்ள எதிரியாக ஏற்படுத்தியுள்ளார். புனித லூயிஸ் மரிய மோன்ட்போர்ட் இதனைக் கீழ்கண்டவாறு கூறுகிறார்: "சாத்தான் மீது சர்வேசுரன் மாமரிக்கு எத்துணைப் பகையைக் கொடுத்துள்ளாரென்றால் – இப்பழைய பாம்பின் வஞ்சகத் தந்திரங்களை வெளிப்படுத்த மாமரிக்கு எத்துணை ஆற்றலை அளித்துள்ளாரென்றால் – இந்த ஆங்காரப் புரட்சிக்காரனை மேற்கொள்ளவும், கீழே வீழ்த்தவும், நசுக்கவும் எத்துணை வலிமையைக் கொடுத்துள்ளாரென்றால், இச்சாத்தான் எல்லா சம்மனசுக்கள், மனிதர்களையும் விட மாமரிக்கே அதிகமாக பயப்படுகிறான். அது மட்டுமல்ல, ஒரு வகையில் சர்வேசுரனை விடவும் அதிகமாய் அவருடைய மாதாவுக்குப் பசாசு பயப்படுகிறான்." (உண்மை பக்தி எண். 52)

உண்மையாகவே மாதாவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தை நாம் நேருக்கு நேராகப் பார்க்கிறோம். "அவளுடைய பிள்ளையை விழுங்கிப்போடும்படிக்கு அந்தப் பறவைநாகம் அவளுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தது." (காட்சியாகமம் 12:4)

கடவுளின் திருமாதாவும் சாத்தானும் தங்களோடு போராடப் படைவீரர்களைச் சேர்க்கிறார்கள். பேயானது அதிக வல்லமையுள்ளதாகத் தோன்றுகிறது. "ஆயினும் பிந்திய காலங்களில்தான் நரகத்தின்மீது மாமரி கொள்ளும் அதிகாரம் அதிக சிறப்புடன் வெளிப்படும்." அதாவது, சாத்தான் மாதாவின் பிள்ளைகளுக்கு எதிராக கண்ணிகளை வைத்துப் போராடும் போது, "அவர்கள் சாத்தானுக்கு எதிராகப் போராடும்படி மாமரியால் தூண்டி எழுப்பப்படுவார்கள்." அப்போது மாதாவுடன் இணைந்திருக்கும் பிள்ளைகளோ வென்றால், "மாமரியின் ஐக்கியத்தில் அவர்கள் தங்கள் குதிங்காலின் தாழ்மையினால் சாத்தானின் தலையை நசுக்கி சேசுகிறிஸ்துநாதருக்கு வெற்றி தேடித் தருவார்கள்." (உண்மை பக்தி எண். 54)

அதிகாரம் – 2

பரிகார பக்தியின் அப்போஸ்தல அலுவல்

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம்

1. பரிகாரப் பக்தியின் சாரம்

மரியாயின் மாசற்ற இருதயத்தின் மீது நேசத்தையும் அறிவையும் ஒருவன் எவ்வளவுக்கு அதிகமாகப் பரப்புகிறானோ அந்த அளவுக்கு அவன் மாதாவுக்காக ஆன்மாக்களை சேகரித்து மாதா வழியாக அவர்களை சேசு நாதரிடம் கொண்டு சேர்ப்பான். "மக்கள் என்னை அறிந்து நேசிக்க சேசு உன்னை (மாதாவின் அப்போஸ்தலர்களைப்) பயன்படுத்த விரும்புகிறார்." (1917 ஜூன் 13)

மாதாவின் மேல் இப்படிப்பட்ட உருக்கமான சிநேகமும் தெளிந்த அறிவும் ஏற்பட வேண்டுமென்றால் ஒருவன் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பற்றி எரியும் ஆர்வத்தோடு பக்தி செலுத்துபவனாய் இருக்க வேண்டும். இதற்காகத்தான் "உலகில் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை சேசுநாதர் ஏற்படுத்த விரும்புகிறார்." இதுவே மாதாவின் அப்போஸ்தலர்களுக்கு சேசுநாதர் ஏற்பாடு செய்துள்ள ஒரு பெரிய திட்டம் ஆகும்.

ஆனால் இந்நாட்களில் பரிசுத்த கன்னிமரியாயின் பக்தியை மேன்மேலும் உதாசீனம் செய்து, தம் பிள்ளைகளுக்கு முன்னாலேயே மாதா இழிவுபடுத்தப்பட்டு அவசங்கைக்கு உட்படுத்தப்படுகிறதினால், சேசுநாதர் தம்முடைய திவ்விய மாதாவுக்கு இந்நாட்களில் விசேஷவிதமானப் பரிகார பக்தி கடைப்பிடிக்கப்பட வேண்டும் என விரும்புகிறார்.

பாத்திமாவில் 1917 ஜூலை 13-ம் நாளில் மாதா கூறியது என்னவென்றால்: "முதல் சனிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்கும்படி நான் கேட்க வருவேன்." மீண்டும் 1925 டிசம்பர் 10-ம் நாளில் **போந்தே வேத்ரா** என்னுமிடத்தில் மாதா குழந்தை சேசுவுடன் லூசியாவுக்குத் தோன்றினார்கள். அப்போது சேசு முதலில் பேசினார்: "உன்னுடைய பரிசுத்த மாதாவின் இருதயத்தைப் பார்த்து இரக்கப்படு. நன்றியற்ற மனிதர்கள் ஒவ்வொரு விநாடியும் தங்கள் பாவங்களினால் ஊடுருவக் குத்துகின்ற என் தாயின் இருதயத்தைப் பார். இம் முட்களைப் பரிகார முயற்சியினால் அகற்றுவதற்கு யாருமில்லை."

அதன்பின் மாதா முட்களால் சூழப்பட்ட தம் இருதயத்தைக் காட்டி சொன்னதாவது: "பார் மகளே, நன்றியற்ற மனிதர்கள் தங்கள்

துரஷணங்களாலும் நன்றியற்றதனத்தாலும் ஒவ்வொரு விநாடியும் காயப்படுத்துகிற என் இருதயத்தைப் பார். **நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு**, எனக்கு நிந்தைப் பரிகாரம் செய்யும் நோக்கத்தோடு முதல்சனி பக்தியை அனுசரிக்கிற ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு மரண சமயத்தில் தேவையான எல்லா வரப்பிரசாதங்களையும் நான் கொடுப்பேன் என அறிவிப்பாயாக."

இவ்விதம் இந்த அப்போஸ்தல அலுவலின் சாரம், மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகார பக்தி அனுசரிப்பது எனத் தெளிவாகிறது.

2. மரியாயின் மாசற்ற இருதய பக்தி

"இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றிபெறும்,....." என மாதா 1917 ஜூலை 13-ம் நாளில் கூறினார்கள். புனித லூயிஸ் மோன்போர்ட் சொல்லுகிறார்: "குறிப்பாக பிந்திய காலங்களில், மாமரி சாத்தானுக்கும் அவனைப் பின் செல்கிறவர்களுக்கும், போரில் அணிவகுத்து நிற்கும் சேனையைப்போல் பயங்கரமாயிருக்க வேண்டும். (உண்மை பக்தி எண். 50)

மரியாயின் மாசற்ற இருதயத்தின் இவ்வெற்றியானது எளிதாக நடைபெறக் கூடியதல்ல. இது பரிசுத்த கன்னிமரியாயின் தலைமையிலேயே ஏற்படுத்தப்பட இருக்கிற ஒரு மாபெரும் திட்டமிட்ட அப்போஸ்தலத்துவ முயற்சியினாலன்றி வேறுவகையாக நடைபெறக் கூடியதல்ல. ஏனெனில்: "சாத்தானுக்கெதிராக சர்வேசுரன் ஏற்படுத்தியுள்ள மிகவும் அஞ்சத்தக்க எதிரி அவருடைய மாதாவான மாமரியே." (உண்மை பக்தி எண். 52)

எனவே மரியாயின் மாசற்ற இருதயப் பரிகார பக்தியைத் தீவிரமுடன் அனுசரிக்க எவ்வளவுக்கு அதிகமானபேர் மாதாவின் பாதத்தில் கூடி வருகிறார்களோ, அவ்வளவு வேகத்தில் இவ்வெற்றி நிறைவேறும். சகோதரி லூசியா கூறியுள்ளபடி (1946). "போதுமான அளவுக்கு மக்கள் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை அனுசரிக்க வேண்டும்."

இப்பக்தி மூன்று வித முயற்சிகளினால் ஆனது.

1) அர்ச்சிக்கப்படுதல் - (மரியாயின் மாசற்ற இருதயத்தில் மனந்திரும்புதல்)
2) அர்ப்பணமாகுதல் - (மரியாயின் மாசற்ற இருதயத்தோடு ஒன்றித்தல்)
3) ஆறுதலளித்தல் - (மரியாயின் மாசற்ற இருதயத்தை நேசித்தல்)

1) அர்ச்சிக்கப்படுதல் - (மரியாயின் மாசற்ற இருதயத்தில் மனந்திரும்புதல்)

இம்மனந்திரும்புதல், "பாத்திமா உறுதிமொழி" என்னும் சாதாரணத் தனி நபர் அர்ப்பணத்தில் ஆரம்பமாகிறது (பக்கம் 34). அதன்பின் குடும்பங்கள், பங்கு அளவில் மரியாயின் பரிகாரப் பேரணிக் குழுக்கள் இயங்குவதால் நடைபெறுகிறது.

குறைந்தது இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்கள் வாரம் ஒருமுறை (கூடுமானால் ஒவ்வொரு நாளும்) சேர்ந்து ஜெபமாலை சொல்லுதல், பாத்திமா சம்மனசு ஜெபங்கள் சொல்லுதல், பாத்திமா உறுதிமொழி ஜெபம் அல்லது மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பண முயற்சி (பக். 34) இவைகளைச் சொல்லி வருதல்.

இந்த சிறு குழுக்களில் அவர்கள் பரிசுத்த கன்னி மரியாயின் மீது உண்மை பக்தி என்னும் நூலிலிருந்து ஒரு சிறு பகுதியை, அல்லது இந்த நூலின் முதற்பகுதியிலிருந்து ஒரு பகுதியை வாசிப்பார்கள். பாரம்பரிய கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளைக் கற்று அறிந்து கொள்வார்கள் அல்லது கற்றுக் கொடுப்பார்கள். (குறைந்தபட்சம் சின்னக்குறிப்பிடம் அல்லது ஒரு பாரம்பரிய ஞானஉபதேசப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை வாசிப்பது). மேலும் அவர்கள் பாத்திமா செய்தியின் வெளிச்சத்தில் தங்களுடையவும் உலகத்தினுடையவும் ஆன்மீக ஞானஜீவியத்தைப் பற்றி ஆலோசனை செய்வார்கள். பாத்திமா சிறுவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றி ஒருவர் ஒருவரை ஜெபிக்கவும், ஒறுத்தல் செய்யவும், பரிகாரம் செய்யவும், தூண்டி வருவார்கள். இவ்விதமாக பாவத்திற்கு எதிராகப் போராடி புனிதர்கள் ஆவதற்கு முயற்சியாய் இருப்பார்கள். (காண்: மரியாயின் பரிகாரப்பேரணிக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் (பக். 35)

ஒரு குழுவானது விரிவடையும் போது தங்கள் வழிகாட்டிகளின் உதவியுடனும் ஆன்மீக ஆலோசகருடைய ஏற்பாடுகளின் படியும் ஒரு மாதாந்திர பத்திரிகையின் வழியாகவும் இவர்கள் பலுகிப் பெருகி வளர்ந்து வருவார்கள். இதற்காக இவர்கள் திருச்சபை அதிகாரிகளால் கட்டுப்படுத்தப்படுவது அவ்வளவு அவசியமில்லை. லூசியா, பிரான்சிஸ்கோ, ஜெஸிந்தா ஆகிய மூன்று சிறுவர்களைக் கொண்டு மாதாவே ஏற்படுத்திய பரிகார பக்தியின் முதல் சிறு குழுவைப் போல இவர்களும் தாங்களாகவே இயங்கி வருவது போதுமானது.

இவர்கள் தங்கள் சரீரத்தையும், ஆத்துமத்தையும் மரியாயின் மாசற்ற இருதயத்திடம் ஒப்படைப்பார்கள். மேலும் தங்கள் அர்ப்பணத்தை எவ்வளவு நன்றாக வாழ்ந்து காட்ட முடியுமோ அவ்வளவுக்குப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பார்கள். இதனால் இவர்கள் தங்கள் தாயின் இருதயத்தோடு இயல்பாக இணைக்கப்பெற்று கடவுளின் பிரசன்னத்தை அனுபவித்து தேவ சிநேகத்தில் வளர்ந்து வருவார்கள். இதுவே அர்ச்சிஷ்டதனம் ஆகும்.

இவர்கள் பரிகாரப் பேரணிக் குழுக்களை நிறுவுவார்கள். துன்பங்களைத் தாங்கி அனுபவிப்பார்கள். பாவிகள் மனந்திரும்புவதற்காக

ஒறுத்தல் முயற்சிகளைச் செய்வார்கள். தங்கள் ஆடை அணியும் முறைகளாலும், நடத்தையாலும் முன் மாதிரிகையாய் இருந்து, பாவ சந்தர்ப்பங்களை அகற்ற ஒருவர் ஒருவருக்கு உதவியாய் இருப்பார்கள். சினிமா, டெலிவிஷன், நடனம் ஆகிய நிகழ்ச்சிகளிலிருந்தும் புகைப்பிடித்தல், குடி, சூதாட்டம், நடனம் ஆகிய பழக்கங்களிலிருந்தும் எல்லாப் பாவகரமானப் பொழுது போக்குகளிலிருந்தும் தங்களையே விடுவித்து தூரமாய் விலகி இருப்பார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் சகல பாவிகளையும் மரியாயின் மாசற்ற இருதயத்திடம் ஒப்படைத்து அவர்கள் மரியாயின் மாசற்ற இருதயத்திலிருந்து மனந்திரும்பும் வரப்பிரசாதத்தையும் இரக்கத்தையும் விசேஷமாகப் பெற்றுக் கொள்ள உதவியாய் இருப்பார்கள்.

2) அர்ப்பணமாகுதல் - (மரியாயின் மாசற்ற இருதயத்தோடு ஒன்றித்தல்)

1917 ஜூலை 13-ம் நாளில் மாதா லூசியாவிடம் தம்முடைய மாசற்ற இருதயம் அவளை ஒரு போதும் கைவிடாது எனவும் அவளுக்குப் புகலிடமாய் இருந்து அவளைக் கடவுளிடம் இட்டுச் செல்லும் எனவும் கூறியிருந்தார்கள். இங்கே மாதா தம் மாசற்ற இருதயத்தோடு ஒன்றிப்பதும் அவ்விருதயத்திற்கு அர்ப்பணிப்பதும் ஆகிய அந்தரங்க, தனிப்பட்ட பக்தியினால் ஏற்படக்கூடிய ஒரு வெளி அடையாளம்தான் மரியாயின் மீது பக்தி என உறுதிப்படுத்து கிறார்கள்.

ஆகவே, மாதாவை அதிகம் அறிந்து நேசிக்கச் செய்வது என்றால், ஒருவன் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தன்னை அர்ப்பணித்து அவ்விருதயத்தோடு ஒன்றித்திருந்தால் மாத்திரம் செய்யக் கூடியது ஆகும்.

தனி அர்ப்பணம்

1. அந்தரங்க அர்ப்பணம் : நினைவாலும், சொல்லாலும், செயலாலும் சேசுவையும் மாதாவையும் இடைவிடாமல் நினைத்து நேசித்து வாழ்த்துவதிலேயே இத்தனி அர்ப்பணம் பயிற்சி செய்யப்படுகிறது. இதனால் தங்கள் ஆன்மீக கடமைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பது, விசேஷமாய் எல்லா பாவசந்தர்ப்பங்களையும் முழுமனதோடு வெறுத்து விலக்கி, தேவ இஷ்டபிரசாத அந்தஸ்தைக் காப்பாற்றுவது. இதுவே அந்தரங்க அர்ப்பணம் ஆகும்.

2. வெளியரங்க அர்ப்பணம் : அந்தரங்க அர்ப்பணத்தின் உணர்வுகளோடு சில வெளியரங்கப் பயிற்சிகளையும் ஜெபங்களையும் கைக்கொள்வது வெளியரங்க அர்ப்பணம் ஆகும்.

இதற்காக இவர்கள்:-

a) பாத்திமா உறுதிமொழியில் கையொப்பமிட்டு பரிகார பக்தியின் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்வது.

b) தினசரி பாத்திமா உறுதிமொழியை அல்லது மரியாயின் மாசற்ற இருதய அர்ப்பண ஜெபத்தைச் சொல்லுவது.

c) தினமும் குறைந்த பட்சம் ஜெபமாலையின் ஐந்து தேவ இரகசியங்களைச் சொல்லுவது.

d) மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தங்கள் அர்ப்பணத்தின் அடையாளமாக கார்மேல் மாதாவின் பழுப்பு நிற உத்தரியத்தை அணிந்து கொள்வது.

முழு அர்ப்பணம்

சாதாரண உத்தரியத்தை அணிந்துகொள்வது பரிசுத்த கன்னிமரியாயின் புண்ணியங்களைக் கண்டு பாவித்து மாதாவுக்கு நாம் சொந்தமாக வேண்டும் என உணர்த்துமானால், இதைவிட எவ்வளவோ மேலான முறையில் தங்களையே மாதாவுக்கு அடிமைகளாக அர்ப்பணிக்க விரும்புகின்றவர்கள் மாதாவின் அப்போஸ்தலர்களாக ஊழியம் செய்வதற்கு எவ்வளவோ முழுமையாக மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

எனவே இந்த அப்போஸ்தல அலுவலில் சாதாரணத் தனிப்பட்ட உறுப்பினர்களிலிருந்து, யாராவது ஒருவர் விசேஷமான முறையில் தூண்டப்பட்டு மாதாவின் அப்போஸ்தலராக ஊழியம் செய்ய மனமுவந்து முன்வர விரும்பினால், அவர் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு இன்னும் அதிக நெருக்கமாவும் முழுமையாகவும் தங்களை அர்ப்பணித்து மாதாவுக்குச் சொந்தமாக வேண்டும்.

"உலகில் என் மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்த வேண்டுமென்று சேசு விரும்புகிறார்" (பாத்திமா மாதா-1917 ஜூலை 13). புனித லூயிஸ் மோன்போர்ட் சொல்லுகிறபடி மக்கள் மரியாயின் மாசற்ற இருதயத்திற்குத் தங்களை அர்ப்பணித்து இவ்வுன்னத பக்தி முயற்சியை அனுசரித்து வருவார்களானால் இது (மரியாயின் மாசற்ற இருதய வெற்றி) நிறைவேறும்." (காண்:உண்மை பக்தி எண். 55)

ஆகவே, மாதாவின் அப்போஸ்தலர்கள் எனத் தங்களையே அழைத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் புனித லூயிஸ் மோன்போர்ட் என்பவரின் உணர்வுகளின் அடிப்படையில் முழு அர்ப்பணப் பயிற்சியைப் பிரமாணிக்கமுடன் அனுசரிக்க வேண்டும். ஏனெனில் இதுவே மரியாயின்

மாசற்ற இருதய அர்ப்பணத்தின் உன்னதமான பயிற்சியாகும். பாத்திமா செய்திகளின் உணர்வுகளுக்கு மிக நெருங்கியதுமாகும்.

முழு அர்ப்பணப் பயிற்சி

இப்பயிற்சியானது ஒருவன் முழுமையாக சேசு நாதருக்குச் சொந்தமாகும்படியாக தன்னையே முழுவதும் பரிசுத்த கன்னி மாமரிக்குக் கையளிப்பது ஆகும்.

இப்பயிற்சியை அனுசரிக்க அடிப்படைத் தேவையாகச் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றால், ஒவ்வொருவரும்:

- தனது சரீரத்தையும் ஐம்புலங்களையும் அவையவங்களையும்

- தனது ஆத்துமத்தையும் அதன் தத்துவங்களையும்

- தனது நிகழ்கால எதிர்கால உலக உடைமைகளையும்

- தனது அந்தரங்க ஆன்மீக உடைமைகளையும், அதாவது தாங்கள் சம்பாதித்த வரப்பிரசாதங்கள், புண்ணியங்கள், வெகுமதிகள் அனைத்தையும் பரிசுத்த கன்னிமாமரிக்கு கையளித்து, அவைகளை மாதாவே வைத்துக் கொள்ளும் படியாகவும் அவைகளை மேலும் அதிகரித்து அலங்கரிக்கும் படியாகவும் அவர்களிடம் கொடுத்துவிடுவது. அவைகளின் பலன்களையும் அவர்களே தாம் விரும்புகிறவர்களுக்கு, அவர்கள் விரும்புகிறபடிப் பங்கிடும்படியாக விட்டுவிடுவது.

இப்பயிற்சிக்குத் தேவையானத் தகுதி

இதற்கு அடிப்படைத் தகுதியாக ஒருவன் மனமுவந்து தம்மிடமிருக்கிற உலக உணர்வுகளை வெறுமையாக்குவது; அதற்குப்பதிலாக தன்னையே கிறிஸ்துநாதருடைய உணர்வுகளால் நிரப்புவது.

இத்தகுதியை அடைவதற்கு 33 நாட்கள் தயாரிப்பாக ஞான தியானப்பயிற்சி செய்வது. அதன்பின் ஆடம்பரமாக முழு அர்ப்பணச் சடங்கை நிறைவேற்றுவது. இவ்வர்ப்பணத்தை ஆண்டுதோறும் புதுப்பிப்பது. (முழு அர்ப்பண புத்தகத்தைப் பார்க்கவும்)

இவ்விதமாக முழு அர்ப்பணம் செய்த மாதாவின் அப்போஸ்தலர்களி லிருந்து சரியான அங்கீகாரம் பெற்ற மாதாவின் அப்போஸ்தலர்கள் சபை என்னும் ஒரு துறவற சபை உருவாகும். (மாதாவின் துறவற சபைக் கையேடு பார்க்கவும்)

பாப்பரசரின் ரஷ்ய அர்ப்பணம்

1917 ஜூலை 13-ம் நாளில் மாதா கூறியது: "என் மாசற்ற இருதயத்திற்கு ரஷ்யாவை அர்ப்பணம் செய்யும்படி நான் கேட்க வருவேன்.......... மக்கள் என் வேண்டுகோளுக்குச் செவிமடுப்பார்களானால், ரஷ்யா மனந்திரும்பும்." அதன் பின் 1929-ம் ஆண்டு மாதா துாயி நகரில் சகோதரி லூசியாவுக்குத் தோன்றிச் சொன்னது என்னவெனில்: "ரஷ்யாவுக்கு என் மாசற்ற இருதயத்தைப் பாப்பரசர் உலக மேற்றிராணிமார்களோடு சேர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று கடவுள் கேட்பதற்குரிய நேரம் வந்துவிட்டது."

ரஷ்ய அர்ப்பணம் என்பது என்னவெனில் அந்நாட்டைப் பரிசுத்த கன்னிமரியாயின் கரங்களில் ஒப்படைப்பது. அதனால் மாதா ரஷ்யாவை மனந்திருப்பி உலகில் கடவுளின் சமாதானம் உண்டாகும்படி அந்நாட்டைப் பயன்படுத்துவது.

ஏன் ரஷ்யா? ஏனெனில் ஏற்கனவே ஞானஸ்நான அபிஷேகம் பெற்றுள்ள அந்நாடு நாஸ்தீக கம்யூனிசப் பாவங்களினாலும் தப்பறைகளினாலும் அவசங்கைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் உலகம் முழுவதிலும் அத்தப்பறைகளைப் பரப்புகிற முக்கியமான கருவியாகவும் இருந்துள்ளது.

ஏன் பாப்பரசரும் எல்லா மேற்றிராணிமார்களும்? ஏனெனில் அவர்களிடம்தான் ஆட்களையும் பொருட்களையும் இடங்களையும் கடவுளின் ஊழியத்திற்காக அர்ப்பணித்து அபிஷேகம் செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது. இந்த நாட்டின் அவசங்கையானது உலகளாவிய முறையில் எவ்வளவு பகிரங்கமாக ஏற்பட்டுள்ளது என்றால், அந்நாட்டைத் திரும்பவும் அர்ச்சிப்பதற்கும் அதன் பாவங்களுக்குப் பரிகாரம் செய்வதற்கும் உலகளாவிய முறையிலும் பகிரங்கமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சகோதரி லூசியா நமது ஆண்டவரிடம், பாப்பரசரும் உலக மேற்றிராணிமார்கள் அனைவரும் சேர்ந்து ரஷ்யாவை ஒப்புக்கொடுக்கவில்லை என்றால், அந்நாட்டை அவர் ஏன் மனந்திருப்பமாட்டார் என்று கேட்ட போது, நமது ஆண்டவர் கூறிய பதில் என்னவெனில்: "எனது மாதாவின் மாசற்ற இருதய வெற்றி இந்த அர்ப்பணத்தில் தான் அடங்கியிருக்கிறது என திருச்சபை முழுவதும் அங்கீகரித்து அறிக்கையிட வேண்டும் என்பதற்காகவே. இதனால் திருச்சபை இந்த பக்தி முயற்சியைப் பரப்ப வேண்டும் எனவும் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை என்னுடைய திருஇருதயத்தின் பக்தியோடு இணையாக வைத்து அனுசரிக்க வேண்டும் எனவும் நான் விரும்புகிறேன்."

பாப்பரசரின் இந்த அர்ப்பணம் எப்போது நடைபெறும்? அதற்குத் தேவையான வரப்பிரசாதத்தைப் பாப்பரசர் பெறும் போது இது நடைபெறும்.

நாம் வாழும் இந்த உலகில் பாப்பரசருடையவும் உலக மேற்றிராணிமாருடையவும் இக்கடமையானது எவ்வளவு முக்கியமானது! நாம் ஒவ்வொருவரும் திருச்சபையிலுள்ள மேல் அதிகாரிகளுக்காக ஜெபிக்க வேண்டும். விசேஷமாக ஒவ்வொரு மேற்றிராசனத்தின் ஆயருக்காகவும் ஜெபிக்க வேண்டும். இவ்விதம் மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் வழியாக கடவுளுடைய இராச்சியத்தின் வெற்றியானது விரைவில் நிறைவேற வேண்டும்." (பாத்திமா ஆயர் 1937 ஜூலை 13)

சகோதரி லூசியாவின் கூற்றுப்படி, கடவுள் இந்த அர்ப்பணத்திற்குத் தேவையான வரப்பிரசாதத்தைக் கொடுப்பார். அது எப்போது எனக் கேட்டால், போதுமான மக்கள் பாத்திமாச் செய்திகளைக் கேட்டுக் கடைபிடிக்கும்போது.

பாப்பரசரின் அர்ப்பணம் இதுவரையிலும் ஏன் நடைபெறவில்லை?

பாத்திமா செய்தி பற்றிய அதிகாரப்பூர்வமான உலக பிரசித்திபெற்ற வேதசாஸ்திரியான சங். டாக்டர். ஜாக்குயின் அலோன்சோ **C.M.F.** இந்த கேள்விக்கு அதிகாரப் பூர்வமாக பதில் சொல்லியிருக்கிறார். இவர் பாத்திமா ஆயரால் பாத்திமாச் செய்திகளை ஆராய்ந்து எழுதும்படியாக நியமிக்கப்பட்டவர். இவர் இந்த அர்ப்பணம் ஏன் நடைபெறவில்லை என்பதன் முக்கியமான காரணத்தை விளக்கிச் சொல்லுகிறார். அவர் எழுதியுள்ளபடி "ரஷ்ய அர்ப்பணம் என்பது ஒரு சாதாரண ஜெபத்தை வாசிப்பது என்ற முறையில் புரிந்து கொள்ளக் கூடியதல்ல. ஆனால் அது பாப்பரசராலும் அவரோடு இணைந்துள்ள மேற்றிராணிமார்களாலும் கத்தோலிக்க உலகம் முழுவதும் சேர்ந்து அனுசரிக்க வேண்டிய ஒரு ஆன்மீக பக்தி முயற்சி. எனவே இதற்காக மரியாயின் மாசற்ற இருதயத்தின் வல்லமையுள்ள பரிந்து பேசுதலை நாம் வேண்டி மன்றாட வேண்டும்."

"இவ் அர்ப்பணம் பற்றி பாப்பரசர் செய்யவுள்ளத் தீர்மானம் வெறும் கையெழுத்துக்களால் நடைபெறக் கூடியதல்ல. ஆனால் அதைவிட மேலாக, பாப்பரசருக்குத் தேவையான வரப்பிரசாதங்களை மாதாவே அடைந்து கொடுக்கும்படியாக பாத்திமாச் செய்திகளை வாழ்ந்து காட்டுவதில் அடங்கியிருக்கிறது."

" எனவே கடவுளின் மறைந்த பராமரிப்பினால் மட்டுமே இது நடைபெறும். முதலில், நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் மரியாயின்

மாசற்ற இருதயத்திற்கு நமது அர்ப்பணத்தை வாழ்ந்து காட்டி நடைமுறையாக்க வேண்டும். இரண்டாவது, ரஷ்யாவின் இவ்வர்ப்பணத்தைச் செய்வதற்காக பாப்பரசருக்கு ஆண்டவரிடமிருந்து வரப்பிரசாதத்தை அடைந்து கொடுக்க வேண்டும்."

" எனவே பாத்திமாச் செய்தியின் இந்த அப்போஸ்தல அலுவலை நாம் தீவிரப்படுத்த வேண்டும். ஏனெனில் இதற்குத் தடையாக இருப்பது நாம் தான். உண்மையிலேயே நாம் தான் இதற்குத் தடையாக இருக்கிறோம். நம்முடைய பாவங்களினால் பாப்பரசருக்குத் தேவைப்படுகிற இந்த வரப்பிரசாதத்தைச் சம்பாதிக்க முடியாத நிலையில் நாம் இருக்கிறோம்."

இதனால் தான் நமது ஆண்டவர் சகோதரி லூசியாவிடம் கூறினார் "பாப்பரசர்!......... ஆம், அவருக்காக அதிகம் ஜெபியுங்கள். அவர் இவ்வர்ப்பணத்தைச் செய்வார், ஆனால் அது மிகவும் பிந்திவிடும். இருப்பினும் மரியாயின் மாசற்ற இருதயம் ரஷ்யாவைப் பாதுகாக்கும். அது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது."

3) ஆறுதலளித்தல் – (மரியாயின் மாசற்ற இருதயத்தை நேசித்தல்)

"மரியாயின் மாசற்ற இருதயமானது சேசுவின் திரு இருதயத்தோடு இணையாக வைத்து நிந்தைப்பரிகாரம் செய்யப்பட வேண்டும் என சேசு விரும்புகிறார் என்பதை எல்லாருக்கும் அறிவிப்பாயாக" (லூசியாவுக்கு ஜெஸிந்தா கூறிய வார்த்தைகள்).

பாவமானது கடவுள் மனிதர்கள் மேல் கொண்டிருக்கும் சிநேகத்திற்கும் இரக்கத்திற்கும் நேர் எதிரானது. இரட்சணிய அலுவலில் சேசுநாதருடையவும் மரியாயினுடையவும் இருதயங்கள் எவ்வளவு ஒன்றித்திருக்கின்றன என்றால், கடவுளுக்கு எதிரான ஒவ்வொரு பாவமும் மாமரியின் தாய்க்குரிய இரக்கமுள்ள சிநேகத்தைப் பாதிக்கிறது. மேலும் பரிசுத்த கன்னிமாமரிக்கு எதிராகக் கட்டிக் கொள்ளப்படும் பாவங்கள் கடவுளுக்கு எதிராகவே செய்யப்படும் மிகக் கடுமையான துரோகம் ஆகிறது.

பரிசுத்த கன்னிமரியாயின் வரப்பிரசாத சலுகைகளுக்கு எதிராக வேண்டுமென்றும் பிடிவாதமுடனும் கட்டிக்கொள்ளப்படும் பாவங்கள் மிகவும் அருவருப்புக்குரிய தேவதூஷணங்கள் ஆகும். இப்படிச் செய்யப்படும் பாவங்களுள் பதிதர்களுடையவும், பிரிவினைக் காரர்களுடையவும், பாவிகளுடையவும் தேவதூஷணங்கள் அநேக கொடிய முட்களால் ஒவ்வொரு வினாடியும் மரியாயின் மாசற்ற இருதயத்தைக் குத்தி ஊடுருவுகின்றன.

இதனால் தான் நம் தேவ அன்னை குழந்தை சேசுவோடு போந்தேவேத்ரா என்னுமிடத்தில் 1925 டிசம்பர் 10-ம் நாளில் சகோதரி லூசியாவுக்குத் தோன்றி மாதாவுக்கு ஆறுதலாகவும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரமாகவும் முதல் சனிக்கிழமைகளில் பரிகார நன்மை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

சகோதரி லூசியா சங். கோன்சாலஸ் சுவாமி அவர்களுக்கு தேதி குறிப்பிடாமல் எழுதிய கடிதம் ஒன்று 1930 ஜூன் 12 என குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் ஐந்து முதல் சனிக்கிழமைகள் எதற்காக என்னும் காரணங்கள் காணப்படுகின்றன.

முதல் சனி பக்தி முயற்சி

"................ நீயாவது எனக்கு ஆறுதல் அளிக்க முயற்சி எடு," (1925 டிசம்பர் 10) என சகோதரி லூசியாவுக்கு மாதா சொல்லுகிறார்கள்;மேலும் - "முதல் சனிக்கிழமைகளில் கீழ்க்காணும் பக்தி முயற்சிகளை அனுசரிக்கிறவர்களுக்கு மரண சமயத்தில் தேவையான சகல வரப்பிரசாதங்களையும் கொடுப்பதாக நான் வாக்களிக்கிறேன் என்பதை நீ அறிவிப்பாயாக:

1) நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்வது.
2) திவ்ய நன்மை வாங்குவது.
3) ஜெபமாலையின் ஐந்து தேவ இரகசியங்களைச் சொல்வது.
4) ஜெபமாலை தேவ இரகசியங்களைத் தியானித்தவாறு பதினைந்து நிமிடம் என்னுடன் தங்கியிருப்பது. இவைகளை எனக்கு நிந்தைப் பரிகாரம் செய்யும் நோக்கத்தோடு நிறைவேற்றுவது."

ஏன் ஐந்து முதல் சனிக்கிழமைகள்?

தொடர்ச்சியாக ஐந்து முதல் சனிக்கிழமைகள் இப்பக்தி முயற்சி அனுசரிக்கப்பட வேண்டும். ஏனெனில் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராக ஐந்து வகையான பாவங்களும் தேவதூஷணங்களும் கட்டிக்கொள்ளப்படுகின்றன.

1930 மே 29-ம் நாளில் தூயி என்னும் இடத்தில் சகோதரி லூசியா நமது ஆண்டவரிடம் மன்றாடி ஏன் ஐந்து முதல் சனிக்கிழமைகள்? என்ற கேள்விக்குப் பதில் என்னவென்று அவளுக்கு உணர்த்தும்படிக் கேட்டபோது, நமது ஆண்டவர் சொன்னதாவது:

"என் மகளே, அதன் காரணம் மிக எளிதானது. மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராக ஐந்து வகையில் பாவங்களும் தேவ தூஷணங்களும் கட்டிக்கொள்ளப்படுகின்றன.

1. மரியாயின் அமலோற்பவத்திற்கு எதிரான தேவ தூஷணங்கள்

2. மாதாவின் நித்திய கன்னிமைக்கு எதிரான தேவ தூஷணங்கள்

3. மாதாவின் தெய்வீகத் தாய்மைக்கு எதிரான தேவ தூஷணங்கள், அதே வேளையில் மாதா சகல மனிதர்களின் தாய் என்பதை மறுக்கும் துரோகம்.

4. சிறுவர்களின் இருதயங்களில் மாதாவின் மேல் வெறுப்பையும் பகைமையையும் பகிரங்கமாக விதைத்து, மாதா பக்தியை அவர்களிடமிருந்து அகற்றுகிறவர்களின் தேவ தூஷணங்கள்

5. மாதாவின் பக்திப் பொருட்களை, அதாவது ஜெபமாலை, உத்தரியம், சுரூபம், படம், சபைச்சின்னம் போன்றவைகளைப் பழித்துப் புறக்கணிக்கிறவர்களின் துரோகம். இவைகளே, என் மகளே, மரியாயின் மாசற்ற இருதயம் இந்த பரிகார பக்தி முயற்சியைக் கேட்கும்படி என்னைத் தூண்டியெழுப்பியதின் காரணங்கள் ஆகும்."

எல்லாவற்றிற்கும் மேலாக இம்மகா பரிசுத்த கன்னிமாமரிக்கு எதிராகச் செய்யப்படும் இப்பெரிய பாவங்கள் விசுவாசத்திற்கு எதிரான பாவங்கள் என்பது உண்மையே, இக்கருத்தை நம் மனதில் பதித்துக் கொள்வது மிக முக்கியமானதும்.

தம திரித்துவத்தின் மிக்கேல் என்னும் சகோதரர் எழுதியுள்ளபடி:

"நமது ஆண்டவர், தமது மகா பரிசுத்த மாதாவை மிகவும் நோகச் செய்கின்ற இந்த ஐந்து வகை தேவ தூஷணங்களைப்பற்றி அறிவித்தபின், சகோதரி லூசியாவிடம் அது பற்றிய தீர்க்கமான விளக்கங்களைக் கொடுத்துள்ளார். இந்த விளக்கங்கள் மரியாயின் மாசற்ற இருதயத்தின் அந்தரங்க இரகசியத்திற்குள் ஊடுருவிச் செல்ல நம்மை அனுமதிக்கின்றன. மாதாவின் மாசற்ற இருதயம் பாவிகளின் மேல் கொண்டுள்ள இரக்கத்தினால் பொங்கி வழிகிறது. எந்த அளவுக்கென்றால், மாதாவை வெறுத்துப் புறக்கணிக்கிற பாவிகளையும் கூட இரக்கமுடன் மன்னிக்கும்படி அம்மாசற்ற இருதயம் ஆண்டவரிடம் கேட்கிறது."

"மேலும் நமது ஆண்டவர்: பார் மகளே, மரியாயின் மாசற்ற இருதயம் இச்சிறு பரிகார பக்தியைக் கேட்கும்படி என்னைத் தூண்டுவதின் காரணத்தைப் பார். மாதாவை நோகச் செய்கின்ற துர்பாக்கியமான செயல்களில் இறங்கியுள்ள ஆன்மாக்களை மன்னிப்பதற்கு என்னுடைய இரக்கத்தை மாதா கேட்கிறார்கள். உன்னைப் பொறுத்தவரையில், பரிதாபத்திற்குரிய இந்த

ஆன்மாக்களுக்கு என்னுடைய இரக்கத்தைக் கொண்டு வரும்படி நீ அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபித்து ஒறுத்தல் முயற்சிகள் செய்வாயாக."

"பரிசுத்த ஆவிக்கு எதிரான பாவம்:" இங்கு நாம் பாத்திமா செய்திகளின் ஒரு மூலாதாரமான படிப்பினையில் கவனம் செலுத்துகிறோம். கடவுள் தம்முடைய சிநேகத்தின் மகாப் பெரிய திட்டத்தை மேலும் மேலும் உலகிற்கு வெளிப்படுத்தத் தீர்மானித்துள்ளார். அது என்னவெனில் மனிதர்களுக்கு சகல வரப்பிரசாதங்களையும் இந்த மாசற்ற கன்னிகையின் வழியாகவே வழங்குவது. கடவுளின் இத்திட்டத்திற்குத் தாழ்ச்சியுடன் கீழ்படிய மறுக்கும் மனிதர்களுடைய மனப்பான்மைதான் அவருடைய இருதயத்தை மிகவும் வேதனைப்படுத்தும் துரோகமாயிருக்கிறது. இந்த குற்றத்திற்கு மன்னிப்பளிக்க அவர் ஒரு போதும் மனம் கொள்ளவில்லை. இப்பாவமே மன்னிக்க முடியாத பாவமாகத் தோன்றுகிறது. ஏனெனில் நமது இரட்சகருக்கு தமது மாதாவைப் பழிக்கும் துரோகத்தைவிட மன்னிக்க முடியாத பாவம் வேறு எதுவும் இல்லை. பரிசுத்த ஆவியின் மூல ஸ்தானமாக விளங்கும் மரியாயின் மாசற்ற இருதயத்தைப் புறக்கணிப்பது (இதுவே பரிசுத்த ஆவிக்கு எதிராகக் கட்டிக் கொள்ளப்படும் பாவமாகிய தேவ தூஷணம்) இந்த உலகிலும் மறுவுலகிலும் மன்னிக்கப்பட முடியாத பாவமாகும்"

1929-ல் தூயி நகரில் பாத்திமா செய்தியின் கடைசி நிறைவேற்றமாய் மிக அசாதாரணமாக வெளிப்படுத்தப்பட்ட பரிசுத்த தமதிரித்துவக் காட்சியின் போது, மாதா சகோதரி லூசியாவிடம் கீழ்காணும் வார்த்தைகளை முடிவாகக் கூறினார்கள்:

"எனக்கு எதிராகச் செய்யப்படும் பாவங்களுக்காக கடவுளின் நீதித் தீர்ப்பு எத்தனை ஆன்மாக்களைத் தண்டனைக்கு உள்ளாக்குகிறது என்றால், நானே அப்பாவங்களுக்குப் பரிகாரம் கேட்க வந்திருக்கிறேன். இந்தக் கருத்துக்காக நீ உன்னையே பலியாக்கி, ஜெபிப்பாயாக."

இவ்வார்த்தைகள் எவ்வளவு கடுமையானது என்றால் அநேக மொழி பெயர்ப்பாளர்கள் இதன் பொருளைக் குறைத்து மொழி பெயர்ப்பு செய்துள்ளார்கள்."

(காண்: "பாத்திமா பற்றிய முழு உண்மை" **Vol.II** பக்கம் 269, 270)

தனிப்பட்ட முறையில் முதல் சனி பக்தி அனுசரித்தல்

பரிகார பக்தியின் இல்லற அப்போஸ்தலர்கள் முதல்சனி பக்தியை குருக்களும் மேற்றிராணிமார்களும் ஆரம்பிக்கும் வரையில் காத்திருக்க

வேண்டியதில்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் இப்பக்தி முயற்சியை அனுசரிக்கவும் பரப்பவும் செய்யலாம். மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை அனுசரிப்பது போதுமானது. சகோதரி லூசியா கூறியுள்ளபடி (1930), முதல் சனிக்கிழமைக்கு முன் எட்டு நாள்கள் அல்லது அதற்கு பின் எட்டு நாள்களுக்குள் பாவ சங்கீர்த்தனம் செய்வது போதுமானது. திவ்விய நன்மை வாங்குகிறபோது தேவ இஷ்டபிரசாத அந்தஸ்தில் இருப்பது அவசியம்.

பாத்திமா செய்திகளைக் கடைப்பிடிப்பதில் மிக முக்கியமான பக்தி முயற்சி இதுவே ஆகும். இப்பக்தி முயற்சியானது திருச்சபையில் இன்று நிலவிவரும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடிய மிகப் பொருத்தமான பக்தி முயற்சியாகும். கத்தோலிக்க திருச்சபையும் பாப்பரசரும் இப்போது தான் மிகக் கடுமையான கலாபனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். பாத்திமா மாதா முன் அறிவித்தப்படி நவீன தப்பறைகள் அதனுள் ஊடுருவி விசுவாச, நல்லொழுக்கப் போதனைகளை மிகவும் கெடுத்து திருச்சபையின் அதிகாரிகள் மத்தியில் ஒழுக்கக் கேடுகளை உருவாக்கியுள்ளது.

இதற்கெல்லாம் காரணம் திருச்சபை என்னும் சேசுநாதருடைய ஞான சரீரத்தின் மாதாவாயிருக்கிற இக்கன்னிகையைப் போதுமான அளவுக்கு நேசியாத காரணத்தினால், திருச்சபையானது தப்பறைகளாலும் பாவங்களாலும் கலாபனைகளுக்கு உள்ளாகியிருக்கிறது. இக்கலாபனை நிறுத்தப்பட வேண்டுமென்றால் போதுமான மக்கள் முன் வந்து இப்பரிகார பக்தி முயற்சியைக் கடைபிடித்து தேவ மாதாவுக்கு சிநேகமும் ஆறுதலும் செலுத்த வேண்டும்.

ஆகவே, முதல் சனி பக்திமுயற்சியாகிய இந்தப் பரிகார பக்தியை நாம் தீவிரமாகக் கடைபிடித்துப் பரப்ப வேண்டும். தொடர்ச்சியாக ஐந்து முதல் சனிக்கிழமைகள் மட்டுமல்ல நம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து முதல் சனி பக்தியை அனுசரித்து வர வேண்டும்.

பங்குகளில் முதல் சனி பக்தி அனுசரித்தல்

பங்கு குருக்கள் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலின்படி தங்கள் பங்குகளில் முதல் சனி பக்தி முயற்சி அனுசரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

1. மாதா பாடல்களும் பிரார்த்தனையும் பாடிக் கொண்டு ஏதாவது ஒரு திருத்தலத்திற்கு அல்லது கெபிக்கு மாதா சுரூபத்துடன் ஒரு சிறு பவனி நடத்துதல்.

2. தேவ இரகசியங்களைத் தியானித்தபடி ஜெபமாலையின் ஐந்து தேவ இரகசியங்களைச் சொல்லுதல் அல்லது பாடுதல்.

3. குருவானவர் ஜெபமாலைத் தேவ இரகசியங்களை அல்லது இப்பரிகார பக்தி முயற்சியை விளக்கி ஒரு சிறிய பிரசங்கம் சொல்லுதல்.

4. பாத்திமா மாதாவின் நவநாள் ஜெபம்.

5. மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பண ஜெபம்

6. வியாதியஸ்தரை மந்திரித்தல்

7. பாவசங்கீர்த்தனம்

8. திவ்விய பலிபூசை, பரிகார நன்மை.

குறிப்பு: நாள் முழுவதும் பரிகாரத் தொடர் ஜெபமாலை, இரவு முழுவதும் பரிகார இரவு ஆராதனை இவைகளைத் திவ்விய நற்கருணை ஸ்தாபகம் செய்து ஆடம்பரச் சிறப்புடன் நடத்த ஏற்பாடு செய்வதால், முதல் சனி பக்தி முயற்சியைப் பங்குக் கோவில்களில் சிறந்த முறையில் நடத்தலாம். (பக். 79)

துறவற சபைகளில் முதல்சனி பக்தி முயற்சி அனுசரித்தல்

மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு மிக உன்னதமான முறையில் பரிகாரம் செய்து ஆறுதல் அளிப்பது எதில் அடங்கியிருக்கிறது என்றால், சகோதரி லூசியாவின் ஜீவியத்தைப் பின்பற்றுவது. மாதா சகோதரி லூசியாவை தன்னுடைய எஞ்சிய வாழ்நாள் முழுவதும் ஒரு கன்னியர் மடத்தில் அடைப்பட்டிருந்து பரிகாரம் செய்யும்படி அழைத்தார்கள். அதன்படி அடைப்பட்டக் கன்னியர் சபையில் சேர்ந்து தரித்திரம், கீழ்ப்படிதல், விரத்தத்துவம் ஆகிய மூன்று நிரந்தர வார்த்தைப்பாடுகளுடன் தங்களையே முழுமையாக மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பணித்து இப்பக்தி முயற்சி அனுசரிப்பது, மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு மிக உன்னதமான பரிகார முயற்சி ஆகும். (மாதாவின் அப்போஸ்தலர்கள் துறவற சபையின் கையேடு காண்க)

அதிகாரம் – 3

பரிகார பக்தியின் வழிவகைகள்

இவ்வப்போஸ்தல அலுவலின் ஆன்மீக வழிவகைகள்

ஆன்மீகப் பயிற்சிகள்

1. அனுதின ஆன்மீகப் பயிற்சிகள்

துயிலெழுதல்

அதிகாலையில் குறித்த நேரத்திலும் சுறுசுறுப்புடனும் எழுந்து, முதலில் "மரியாயே வாழ்க!" என மாதாவை வாழ்த்துவாயாக. சேசு, மரியாயின் மேல் உனக்குள்ள சார்பையும் நேசத்தையும் காட்ட கழுத்தில் அணிந்திருக்கும் பாடுபட்ட சிலுவையும் உத்தரியத்தையும் அல்லது உத்தரிய சுருபத்தையும் முத்தி செய்வாயாக. முழங்காலிலிருந்து, "மரியாயின் மாசற்ற இருதயமே! நான் முழுவதும் உமக்கே சொந்தம்; என் உடமைகள் யாவும் உமக்கே சொந்தம் " என்று சொன்னபின், நெற்றி தரையில்படத் தெண்டனிட்டு, பாத்திமா சம்மனசின் ஜெபங்களைச் சொல்வாயாக.(பக் –34)

காலை ஒப்புக்கொடுத்தல்

முழங்காலிலிருந்து, தாழ்ச்சியுடன் மாதாவிடம் ஆசீர்வாதங்கேள். மரியாயின் மாசற்ற இருதயத்துடன் ஒன்றித்து, மாதாவின் மனநிலைக்குள் புகுந்து சொல்: " மகா பரிசுத்த திரித்துவமே, பரிசுத்த கன்னி மரியாயின் தாழ்ச்சி, ஆராதனை, நன்றியறிதல், புகழ்ச்சித் தோத்திர முயற்சிகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்." பின்னர் உனது சொந்த ஜெபங்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

காலை ஜெபம்

மாதா அப்போஸ்தலர்களின் துறவற சபை இல்லங்களில் காலைச் செபம் பொதுவில் இலத்தீன் மொழியில் **(Laudes or Prime)** சொல்லப்படும். இல்லற அப்போஸ்தலர்கள் பாரம்பரிய ஜெபப் புத்தகங்களில் உள்ளபடி காலைச் செபங்களைத் தங்கள் சொந்த மொழியில் சொல்லலாம் (பக். 38).

காலை தியானம்

காலை ஜெபத்திற்குப் பின், குறைந்தது அரை மணி நேரம் மவுனமாக தியானம் செய்வார்கள். தியானப் பொருளாக, முன்தினம் மாலையில் தெரிந்தெடுத்துத் தயாரித்த ஞானக் கருத்துகளை மனதில் நினைத்து, சேசுவின் திரு இருதயத்திற்கு உகந்தவர்களாகும்படி மாதாவுடன் இணைந்திருந்து, ஒரு கிறிஸ்தவப் புண்ணியத்தை அனுசரிக்க அல்லது ஒரு பாவப்பழக்கத்தை விட்டுவிடத் தீர்மானிப்பார்கள்.

திவ்விய பலிபூசையும் திவ்விய நன்மையும்

திவ்விய பலிபூசை காணும்போது அவர்கள் சிலுவையடியில் நின்ற மாதாவின் ஆச்சரியத்துக்குரிய மனநிலையையும் பாவனையையும் கண்டுபாவித்து, அனைவரும் பக்தியுடன் முழங்காலிலிருந்தும் பெண்கள் தலையில் முக்காடிட்டும் பூசை காண்பார்கள்.

திவ்விய நன்மையை அவர்கள் எப்போதும் முழங்காலிலிருந்து கை கூப்பி நாவில்தான் வாங்குவார்கள். திவ்விய நற்கருணைக்கு முன் மிகவும் தாழ்ச்சியுடன் தெண்டனிட்டு வணங்கி,தேவ மாதாவின் சிநேக மன உணர்வுகளோடு சேசுநாதரை உட்கொள்ளும் வரத்தை மாதாவிடமே மன்றாடிக் கேட்பார்கள்.

திவ்விய நற்கருணையையும் மாதாவையும் சந்தித்தல்

நற்கருணைப் பேழையில் வீற்றிருக்கும் சேசுநாதர் சுவாமி கன்னி மரியாயின் பரிசு. சேசுநாதருடைய பத்திராசனமாய் இருக்கும் மாதா வழியாகவே எப்போதும் நாம் சேசுவிடம் செல்ல வேண்டும் என அவர் விரும்புகிறார். நற்கருணை பேழையிலிருக்கும் மறைந்த சேசுவிடம் பாத்திமா சிறுவன் பிரான்சிஸ்கோ கொண்டிருந்த பக்தியைப்போல், மாதாவின் அப்போஸ்தலர்களும் ஆழமான, விசேஷ பக்தி கொண்டிருக்க வேண்டும். சேசுநாதருக்கு அவர்கள் செலுத்தும் எவ்வகையான மகத்துவ மேன்மையும் அப்படியே மாதாவுக்கும் செலுத்தப்படுகிறது என்பதை அவர்கள் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் எல்லாக் கடமைகளையும் தொடங்கும் போதும் முடிக்கும்போதும் திவ்விய நற்கருணை சந்திப்பார்கள் (பக். 48, 49, 50).

ஞான வாசகம்

மாதாவின் அப்போஸ்தலர்கள் ஆபத்தான எல்லா புத்தகங்கள், நாவல்கள் வாசிப்பதை மட்டுமல்ல, பயனற்ற செய்தித் தாள்கள், பத்திரிகை முதலியவற்றைக்கூட நஞ்சுப்போல் கருதி ஒதுக்கி விடுவார்கள். அதற்கு மாறாக ஞான வாசக நூல்களையே மோட்சத்திலிருந்துத் தங்களுக்கு அனுப்பப்பட்டக் கடிதங்களாகக் கருதுவர் இந்நூல்கள் அவர்களைப் புனிதர்களோடு, ஏன் கடவுளோடும்கூட தொடர்பு கொள்ளச் செய்கின்றன.

அவர்கள் தங்கள் ஆன்ம ஆலோசகரிடம் கலந்தாலோசித்து ஞான வாசகத்துக்குரிய புத்தங்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அவற்றுள் முதன்மையாக மாதாவைப்பற்றிய நூல்கள் இடம்பெற வேண்டும். குறிப்பாக அவர்கள் புனித லூயிஸ் மரிய மோன்போர்ட் எழுதிய "மரியாயின் ரகசியம்", மற்றும் "மரியாயின்மீது உண்மை பக்தி" ஆகிய நூல்களைத் திரும்பத் திரும்ப வாசிக்க வேண்டும்.

மேலும் அவர்கள் தினமும் அரைமணி நேரம், காலையில் பதினைந்து நிமிடம் வேதாகம வாசகத்திற்காகவும் மாலையில் பதினைந்து நிமிடம் பக்திக்குரிய வாசகத்திற்காகவும் செலவிட வேண்டும். இவைகளை அவர்கள் தனிமையில் மவுனமாகவோ அல்லது குறிப்பிட்ட மணி நேரங்களில் பொதுவாகவோ வாசிக்கலாம்.

பரிசுத்த ஜெபமாலை

மாதாவின் அப்போஸ்தலர்கள் தங்கள் அனுதின ஜெபமாலையை ஒரு விசேஷ சிநேகத்தினாலும் பக்தியோடும் சொல்லுவார்கள். அவர்கள் தினமும் குறைந்தபட்சம் சொல்லவேண்டிய ஐந்து தேவ இரகசியங்களோடு நிறுத்திக்கொள்ளாமல், பதினைந்து தேவ இரகசியங்களையும், ஏன் அதற்கு அதிகமாகவும் சொல்ல ஆசைப்படுவார்கள்.

குழுவாக சேர்ந்து வாழ்கிறவர்கள் தினமும் மூன்று வேளைகளில் பொதுவாகக் கூடிவந்து ஜெபமாலையும் திரிகால ஜெபமும் சொல்லுவார்கள்.

1. காலையில் திவ்விய பலிப்பூசைக்கு முன்னால்.
2. மதிய உணவுக்கு முன்னால்.
3. மாலையில் இரவு உணவுக்கு முன்னால்.

மே, அக்டோபர் மாதங்களிலும், திவ்விய நற்கருணை ஆசீர்வாதங்கள் நடைபெறும்போதும், அவர்கள் திவ்விய நற்கருணை ஸ்தாபகம் செய்து, ஆண்டவர் முன் முழங்காலிலிருந்து ஜெபமாலைச் சொல்லுவார்கள்.

ஆத்தும சோதனை

தினமும் ஆத்தும சோதனை செய்வதில் அவர்கள் மிகவும் பிரமாணிக்கமாய் இருக்கவேண்டும். ஏனெனில் இப்பயிற்சியானது ஆன்மாக்களை மிக வேகமாக மாமரியுடன் ஐக்கியத்தை உண்டுபண்ணுகிறது. தினசரி ஆத்தும சோதனைக்காக மாலை ஜெபத்தின்போது ஐந்து நிமிடங்கள் மவுனம் அனுசரிக்கப்படுகிறது.

மாலைச் செபம்

மாதா அப்போஸ்தலர்களின் துறவற சபை இல்லங்களில் மாலைச் செபம் பொதுவில் இலத்தீன் மொழியில் **(Vespers or Compline)** சொல்லப்படும். இல்லற அப்போஸ்தலர்கள் பாரம்பரிய ஜெபப் புத்தகங்களில் உள்ளபடி மாலைச் செபங்களைத் தங்கள் சொந்த மொழியில் சொல்லலாம் (பக். 61).

ஜெபமாலை, தேவ மாதா பிரார்த்தனை, ஆத்தும சோதனை ஆகியவற்றை மாலைச் செபத்துக்கு முன்னால் அல்லது மாலைச் செபத்தோடு சேர்த்துக் கொள்ளலாம்.

துயில் கொள்ளுதல்

மாதாவின் அப்போஸ்தலர்கள் கன்னி மரியாவின் ஆசீர்வாதத்துடனும் அவர்களின் கண் பார்வையிலும் படுக்கைக்குச் சென்று துயில் கொள்வார்கள். படுக்கையிலேயே முழங்காலிலிருந்து அவர்கள் மாமரியின் வேண்டுதலில் நம்பிக்கை வைத்து அதை அடையாளமாக "மூன்று அருள் நிறைந்த மந்திரங்கள்" சொல்வார்கள்.

அதன்பின் அவர்கள் தங்கள் சொந்த செபங்களைச் சொல்லலாம்.

தரையில் நெற்றிபடத் தெண்டனிட்டு அவர்கள் பாத்திமா சம்மனசின் செபங்களைச் சொல்லுவார்கள். (பக். 34)

இறுதியாக அவர்கள் தங்கள் காவல் சம்மனசுக்குத் தோத்திரமாக ஒரு அருள் நிறைந்த மந்திரம் சொல்லுவார்கள். ஏனெனில் அவர் அந்த அருள் நிறைந்த மந்திரத்தை, அவர்களுடைய எதிரியின் தந்திரங்களிலிருந்து பாதுகாக்கப்படும்படியாக, இரவின் ஒவ்வொரு மணி நேரமும் அவர்களுக்காக மாதாவுக்கு ஒப்புக்கொடுப்பார்.

இரவில் தூக்கம் கலைந்து கண்விழிக்க நேரிட்டால், மாதாவைப்பற்றிய ஒரு எண்ணமே அவர்களது முதல் எண்ணமாக இருக்கவேண்டும். அந்நேரங்களில் அவர்கள் பாத்திமா சிறுவர்களைக் கண்டுபாவித்து தரையில் நெற்றி படும்படியாகத் தெண்டனிட்டு பாத்திமா சம்மனசின் செபங்களைச் சொல்லுவார்கள். (பக். 34)

இவ்விதமாக மாதாவின் அப்போஸ்தலர்கள் இந்த அனுதின ஆன்மீகப் பயிற்சிகளை அனுசரித்து - மாதாவுடன் இணைந்திருந்து இரவையும் பகலையும் புனிதமாக்குவார்கள்.

2. வாராந்தர ஆன்மீகப் பயிற்சிகள்

வாராந்தர "மரியாயின் பரிகாரப் சேனை" கூட்டம்

வாரம் ஒரு முறை மாதாவின் அப்போஸ்தலர்கள் சிறு சிறு குழுக்களாகக் கூடுவார்கள். (நமதாண்டவர் கடைசி இராப்போஜனம் செய்த அசன சாலையில் மாதாவுடன் அப்போஸ்தலர்கள் கூடியது போல் இவர்களும் மாதாவுடன் சேர்ந்து கூட்டம் நடத்துவதால், இக்கூட்டம் "பரிகாரப் சேனை" -யின் அசன சாலைக்கூட்டம் என அழைக்கப்படுகிறது.) இக்கூட்டத்தில் அவர்கள் ஜெபமாலை சொல்லுவார்கள், தங்கள் அப்போஸ்தல அலுவலின் ஆன்மீக முன்னேற்றம் பற்றி கலந்தாலோசிப்பார்கள், மற்றும் அக்கூட்டத்தில் ஆன்ம ஆலோசகர் வந்திருந்தால், அவரது ஞான உரைகளைக் கேட்பார்கள்; இல்லையென்றால், அவர்கள் இந்நூலிலிருந்து அல்லது புனித லூயிஸ் மோன்போர்ட் எழுதிய "மரியாயின் மீது உண்மை பக்தி" என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியை வாசிப்பார்கள்.

இரு வாரத்திற்கொரு முறை பாவசங்கீர்த்தனம்

மாதாவின் அப்போஸ்தலர்கள் இரண்டு வாரத்திற்கொரு முறை தங்கள் ஆன்ம குருவானவரிடம் சென்று பாவசங்கீர்த்தனம் செய்து, தங்கள் ஆன்மீக நிலைபற்றி அறிவுரை கேட்பார்கள். இந்த ஆன்ம குருவானவர் ஒரு பாரம்பரிய குருவானவராகவே இருக்க வேண்டும்.

3. மாதாந்தர ஆன்மீகப் பயிற்சிகள்

முதல் சனி பக்தி முயற்சி

மாதாவின் அப்போஸ்தலர்கள் முதல் சனி பக்தி முயற்சியில் கண்டிப்பாக கலந்து கொள்ளவேண்டும். அவர்கள் இருக்கிற இடத்தில் முதல் சனி பக்தி நடத்துவதற்கு குருக்கள் இல்லையென்றால், அவர்கள் தனித்தனியாகவோ ஒரு குழுவாகவோ சேர்ந்து முதல் சனி பக்தி முயற்சியை அதற்குரிய நிபந்தனைளோடு தனிப்பட்ட முறையில் அனுசரித்துக் கொள்ளலாம்.

பாவசங்கீர்த்தனமும் பரிகார நன்மையும் உட்கொள்ளுதல், தேவ இரகசியங்களைத் தியானித்தபடி ஜெபமாலையின் ஐந்து தேவ இரகசியங்களைச் சொல்லுதல், மாதாவுடன் தங்கியிருந்து பதினைந்து நிமிடங்கள் ஜெபமாலை தேவ இரகசியங்களைத் தியானித்தல். இவைகளை மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராகச் செய்யப்படும் நிந்தைகளுக்கு பரிகாரம் செய்யும் கருத்தோடு நிறைவேற்றுதல்.

மாதாவின் அப்போஸ்தலர்கள் தொடர்ச்சியாக ஐந்து முதல் சனிக்கிழமைகளில் மட்டுமல்ல, ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாதமும் இப்பக்தி முயற்சியை அனுசரிப்பார்கள்.

பரிகார முழு இரவு ஆராதனை

மாதம் ஒருமுறை, குறிப்பாக முதல் சனிக்கிழமைகளில் மாதாவின் அப்போஸ்தலர்கள் ஒரு இரவு முழுவதும் விழித்திருந்து ஜெபமும் தவமும் பரிகாரமும் செய்து, மனுக்குலத்தின் பாவங்களுக்காகவும் சேசுவின் திரு இதயத்திற்கும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கும் எதிராகச் செய்யப்படும் தேவ தூஷணங்களுக்கும் பரிகாரம் செய்வார்கள்.

மாதாந்தர ஒருசந்தி சுத்தபோசனம்

ஒவ்வொரு தலை வெள்ளிக்கிழமைகளிலும் மாதாவின் அப்போஸ்தலர்கள் பாத்திமா மாதாவின் வேண்டுகோளை நிறைவேற்றும் கருத்தோடு,ஒருசந்தி, சுத்தபோசனம் அனுசரித்து, பாவிகள் மனந்திரும்பும்படி தவமுயற்சியாக ஒப்புக்கொடுப்பார்கள்.

மாதாந்தர ஞான ஒடுக்கம்

மாதந்தோறும் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாத ஒடுக்கம் அனுசரித்தல். மதிய உணவு நேரம் வரையிலும் மௌனம் அனுசரிப்பார்கள். ஆன்மீக இயக்குநர் அவர்களுக்குரிய தியானக் கருத்துக்களையும் ஞான உரைகளையும் ஏற்பாடு செய்வார்.

ஞான ஒடுக்க நாளில் ஒரு மணிநேரம் திவ்விய நற்கருணை சன்னிதியில் குருக்களின் அர்ச்சிப்புக்காக திருமணி ஆராதனை செய்வார்கள். மகா பரிசுத்த திவ்விய நற்கருணைக்கு எதிராகச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக இதைச் செய்வார்கள்.

4. வருடாந்திர ஆன்மீகப் பயிற்சிகள்

முழு அர்ப்பணத்தைப் புதுப்பித்தல்

ஒவ்வொரு வருடமும் தங்கள் அர்ப்பணத்தின் வருடாந்திர நாளில் (மார்ச் 25) புனித லூயிஸ் மோன்போர்ட் கூறிய முறைப்படி 33 நாள் தயாரிப்பை திரும்பவும் செய்து மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு தங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பிப்பார்கள்.

வருடாந்திர தியானம்

ஒவ்வொரு வருடமும் புனித இஞ்ஞாசியார் ஆன்மீகப் பயிற்சியின் முறைப்படி அல்லது புனித லூயிஸ் மோன்போர்ட் முறைப்படி நடத்தப்படும் பாரம்பரிய மூன்று நாள் தியானத்தில் தவறாமல் கலந்து கொள்வார்கள்.

வருடாந்திர மாநாடு

மாதாவின் அப்போஸ்தலர்கள் ஆண்டுக்கொருமுறை வட்டார அளவில் நடத்தப்படும் பொது மாநாட்டில் கலந்து கொள்வார்கள். இம்மாநாட்டிற்கென்று ஆன்மீகக் கருத்துக்கள் அடங்கிய ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். மாநாட்டு நிகழ்ச்சிகள் பரிகார பக்தி முயற்சியை தீவிரப்படுத்தி மரியாயின் மாசற்ற இருதய வெற்றியை அடையும் நோக்கத்தோடு தயாரிக்கப்படும், இவை எப்போதும் ஆன்மீக இயக்குநருடைய நேரடி கண்காணிப்பில் தான் ஏற்பாடு செய்யப்படும்.

பாத்திமா மாதா திருவிழா

மாதாவின் அப்போஸ்தலர்கள் ஆண்டுதோறும் மே மாதம் 13-ம் தேதியன்றும் அக்டோபர் மாதம் 13-ம் தேதியன்றும் பாத்திமா காட்சியின் ஆண்டு நினைவு நாட்களைக் கொண்டாடுவார்கள். சுற்றுப்பிரகாரம், திவ்விய பலிபூசை, திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் ஆகிய நிகழ்ச்சிகள் ஆடம்பரமாகக் கொண்டாடப்படும்.

இவ்வப்போஸ்தல அலுவலின் அறிவுக்கடுத்த வழிவகைகள்
பாத்திமா கல்விக் குழுக்கள்

1. மாதா சிறுவர், இளைஞர் இயக்கங்கள்

மாதாவின் அப்போஸ்தலர்கள், தங்கள் ஆன்மீக இயக்குநர்கள் ஆலோசனைப்படி தங்கள் தங்கள் இடங்களில் சிறுவர்களுக்காகவும் இளைஞர்களுக்காகவும் பாத்திமா கல்வி குழுக்களின் கூட்டங்களை நடத்துவார்கள்.

வாரம் ஒரு முறை அல்லது குறைந்தபட்சம் மாதத்திற்கு இருமுறை சிறுவர்களும், இளைஞர்களும் ஒழுங்காக கூடிவந்து பாத்திமா ஞான உபதேச பாடங்களை கற்றுக்கொள்ளவும், பாரம்பரிய கத்தோலிக்க திருச்சபையின் வேத போதகங்களைப் படித்து அறிந்துகொள்ளவும், பாத்திமா மாதாவின் செய்திகளை ஆழமாக அறிந்து தேவமாதாவின் மேல் பிள்ளைக்குரிய உருக்கமான பக்தியை வளர்த்துக்கொள்ளவும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

குருக்கள் துறவியர்களுக்கான தேவ அழைத்தலை அவர்கள் உள்ளத்தில் ஊன்றி வளர்க்க ஏற்பாடு செய்யப்படும். இளைஞர்களுக்கான ஒரு பத்திரிகை கவனமுடன் தயாரிக்கப்பட்டு சிறுவர், இளைஞர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கத்துடன் ஆன்மீக இயக்குநரால் வெளியிடப்படும்.

2. பாத்திமா வெளியீடுகள்

மாதாவின் அப்போஸ்தலர்களுக்கான அதிகாரப்பூர்வ பத்திரிகையானது தேசிய அலுவலகத்திலிருந்து மாதம் ஒருமுறை அல்லது மூன்று மாதத்திற்கொருமுறை ஒழுங்காக வெளியிடப்படும். எல்லா பாத்திமா வெளியீடுகளும் ஆன்மீக இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் எழுதப்பட்டு வெளியிடப்படவேண்டும். ஆன்மீக இயக்குநர் எப்பொழுதும் ஒரு பாரம்பரிய குருவானவராகவே இருப்பார்.

இந்த அப்போஸ்தலத்துவம் கடவுளின் வரப்பிரசாதத்தையே முதன்மையான மூலதனமாகக் கொண்டு நடைபெறுவதாலும் மரியாயின் மாசற்ற இருதயத்தோடு அந்நியோந்நிய ஒன்றிப்பால் ஏற்படும் பக்தி முயற்சியால் நடைபெறுவதாலும், பரிகார பக்தியின் செயல்முறை அத்தனையும் தேவ வரப்பிரசாதத்தை மூலதனமாகக் கொண்டுள்ள ஆன்மீக வழிவகைகளின் உதவியாலும் உற்பத்தியிலுமே நிறைவேற்றப்படும்.

இவ்வப்போஸ்தல அலுவலின் பொருளாதார வழிவகைகள்
தரித்திரமும் கடின உழைப்பும்

வளர்ச்சியும் விரிவாக்கமும்

இந்த அப்போஸ்தலத்துவமானது அதன் பொருளாதார வழிவகையாக தரித்திர உணர்வையும் கடின உழைப்பையுமே எதிர்பார்க்கிறது. இதனுடைய வளர்ச்சியும் விரிவாக்கமும் முழுமையாக தேவ பராமரிப்பையே நம்பியிருக்கிறது. இந்த உணர்வு இல்லையெனில் மாதாவின் அப்போஸ்தல அலுவல் அதாவது மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஆன்மாக்களை நெருக்கமாகக் கொண்டுவரும் அலுவல் நடைபெறாமல் போய்விடும்.

எனவே, பொருளாதார உதவிகள் அனைத்தும் மரியாயின் மாசற்ற இருதய பக்தியை கட்டி எழுப்புவதற்காகவே பயன்படுத்தப்படும். உதாரணமாக மாதாவின் ஆன்மீகப் பயிற்சி நிலையங்கள், பரிகாரச் சேத்திரங்கள், இடைவிடாத பரிகாரக் கன்னியர், சன்னியாச மடங்கள் ஆகியவை.

இவைகளுக்காகத் தாராளமுடன் உதவும் ஆன்மாக்களுக்கு மரியாயின் மாசற்ற இருதயத்தின் வழியாக நிறைந்த பேறுபலன்கள் வழங்கப்படும்.

அதிகாரம் – 4

பரிகார பக்தி முயற்சியின் ஜெபங்களும் பாடல்களும்

பாத்திமா ஜெபங்கள்

1. பாத்திமா மாதாவின் ஜெபங்கள்

ஆராதனை

மகா பரிசுத்த திரித்துவமே, உம்மை ஆராதிக்கிறேன்; என் தேவனே, என் தேவனே மிகவும் பரிசுத்த திவ்விய நற்கருணையில் உம்மை நேசிக்கிறேன்.

வேண்டுதல் (பத்து மணி ஜெபம்)

ஓ! என் சேசுவே, எங்கள் பாவங்களை மன்னியும்; நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றும்; எல்லா ஆன்மாக்களையும் விசேஷமாய் உமது இரக்கம் யார் யாருக்கு அதிக தேவையோ அவர்களை மோட்சத்திற்கு கொண்டுபோய்ச் சேர்த்தருளும்.

ஒப்புக்கொடுத்தல்

ஓ! என் சேசுவே, உமது அன்பிற்காகவும், பாவிகள் மனந்திரும்பவும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராகச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவும் இந்த ஒறுத்தல் முயற்சியை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

2. பாத்திமா சம்மனசின் ஜெபங்கள்

மன்னிப்பு ஜெபம் (நெற்றி தரையில் பட)

என் தேவனே, உம்மை விசுவசிக்கிறேன், உம்மை ஆராதிக்கிறேன், உம்மை நம்புகிறேன், உம்மை நேசிக்கிறேன். உம்மை விசுவசியாதவர்க்காகவும் உம்மை ஆராதியாதவர்க்காகவும், உம்மை நம்பாதவர்க்காகவும், உம்மை நேசியாதவர்க்காகவும் உமது மன்னிப்பைக் கேட்கிறேன். (மூன்று முறை)

பரிகார ஜெபம் (நெற்றி தரையில் பட)

மகா பரிசுத்த திரித்துவமே, பிதாவே, சுதனே, பரிசுத்த ஆவியே, உம்மை மிகவும் ஆராதிக்கிறேன்; உலகமெங்கிலும் உள்ள தேவ நற்கருணைப் பேழைகளில் இருக்கும் சேசு கிறிஸ்து நாதருடைய விலைமதிக்கப்படாத திரு சரீரத்தையும் இரத்தத்தையும் ஆத்துமத்தையும் தெய்வீகத்தையும் அவருக்கு எதிராகச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்; சேசுவின் திரு இருதயத்தினுடையவும், மரியாயின் மாசற்ற இருதயத்தினுடையவும் அளவற்ற பேறுபலன்களைப் பார்த்து நிர்ப்பாக்கியப் பாவிகளை மனந்திருப்பும்படி மன்றாடுகிறேன். ஆமென்.

3. பாத்திமா உறுதிமொழி
(நீல அணி அர்ப்பணம்)

எங்கள் அன்புத்தாயும் அரசியுமான மரியாயே! ரஷ்யாவை மனந்திருப்பி உலகத்திற்கு சமாதானம் தருவேன் என்று பாத்திமாவில் வாக்களித்தீரே. எங்களுடையவும், உலகத்தினுடையவும் பாவங்களால் உமது மாசற்ற இருதயத்துக்கு ஏற்பட்ட நிந்தைகளுக்குப் பரிகாரமாக, எங்கள் கடமையைச் செய்வதில் எங்களுக்கு ஏற்படும் சகல துன்பங்களையும் பரித்தியாகமாக ஏற்றுக்கொள்கிறோம். 53 மணி ஜெபமாலையை தியானித்துச் சொல்வோம். எங்களை உமது மாசற்ற இருதயத்திடம் ஒப்படைக்கிறோம். இதன் அடையாளமான கார்மெல் உத்தரியம் அணிந்திருக்கிறோம். (இங்கு உத்தரியத்தை முத்தி செய்யவும்) இந்த ஒப்புக்கொடுத்தலை அடிக்கடி, விசேஷமாக சோதனை நேரத்தில் புதுப்பிப்போம் தாயே – ஆமென்.

தேதி: ....

இடம்: .... (கையொப்பம்)

4. மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பண முயற்சி
(புனித லூயிஸ் மோன்போர்ட்)

ஓ அமலோற்பவ தாயே!| இதோ, பாவியாகிய நான் ....| ஞானஸ்நானத்தில் கொடுத்த வார்த்தைப்பாட்டை| உமது கரங்களில் புதுப்பித்து உறுதிப்படுத்துகிறேன்.| பசாசையும்,| அதன் கிரியைகளையும்|

ஆரவாரங்களையும்| நான் விட்டுவிடுகிறேன்.| நித்திய ஞானமாகிய | சேசுகிறிஸ்து நாதருக்கு | என்னை முழுவதும் கையளித்து| என் ஜீவிய கால முழுவதும்| எனக்கு நேரிடும் துன்பங்களையும்| அவருடைய பாடுகளோடு ஒன்றித்து| முன்னைவிட இன்னும் அவருக்கு |அதிக பிரமாணிக்கமாய் இருப்பதாக | வாக்களிக்கிறேன்.

சகல மோட்சவாசிகளுக்கு முன் | உம்மை என் தாயாராகவும்| மாதாவாகவும் தெரிந்து கொள்ளுகிறேன்.| உமது அடிமையாக| என் சரீரத்தையும்,| ஆத்துமத்தையும்,| என் எல்லாவற்றையும்,| என் உள்ளிந்திரியங்களையும்,| ஐம்புலன்களையும், |என் ஜீவிய கால முழுவதும்| நான் செய்யும் நற்கிரியைகளையும்| பலன்களையும் | உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.| என்னையும்| எனக்குச் சொந்தமான யாவற்றையும்| இப்பொழுதும் எப்பொழுதும் | கடவுளின் அதிமிக தோத்திரத்திற்காக | உமது பிரியப்படி | நீரே முழு உரிமையுடன்| ஆண்டு நடத்தக் கையளிக்கிறேன்.| ஆமென்.

5. மரியாயின் பரிகார பேரணிக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

1. தொடக்க ஜெபம்

பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்.

சுருக்கமான இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்

இஸ்பிரீத்து சாந்துவே தேவரீர் எழுந்தருளி வாரும். உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பும். அவைகளில் சிநேக அக்கினியை மூட்டியருளும். உம்முடைய ஞானக் கதிர்களை வரவிடும். அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

ஜெபிப்போமாக

சர்வேசுரா சுவாமி! விசுவாசிகளுடைய இருதயங்களை இஸ்பிரீத்து சாந்துவின் பிரகாசத்தால் படிப்பித்தருளினீரே. அந்த இஸ்பிரீத்து சாந்துவினால் நாங்கள் சரியானவைகளை உணரவும், அவருடைய ஆறுதலால் எப்போதும் மகிழ்ந்திருக்கவும் அனுக்கிரகம் செய்தருளும். இவைகளை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்து நாதருடைய திரு முகத்தைப் பார்த்து தந்தருளும். ஆமென்.

அருள் நிறைந்த மரியாயே.........................

முதல் : ஞானத்துக்கு இருப்பிடமே,

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பாத்திமா சம்மனசின் ஜெபங்கள் (காண். பக். 35)

2. ஜெபமாலை (குறைந்தது ஐந்து தேவ இரகசியங்கள்) (பக். 65)

3. மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு அர்ப்பண முயற்சி (காண். பக். 35)

4. அறிவுரை (இதைத் தவிர்க்க வேண்டாம்)

- இக்கையேட்டிலிருந்து ஒரு பகுதியை வாசிக்கவும். (முக்கியமாக பாத்திமா செய்தி விளக்கம்)
- சின்னக்குறிப்பிடத்திலிருந்து ஒரு பகுதி வாசித்தல். (அல்லது பாரம்பரிய ஞானஉபதேச புத்தகம்)
- புனித லூயிஸ் மோன்போர்ட் எழுதிய "மரியாயின் மீது உண்மை பக்தி" என்னும் நூலிலிருந்து ஒரு பகுதி வாசித்தல்
- ஒரு சிறு விளக்கம் – வாசித்த பகுதியைப் பற்றி உரையாடல்.

5. தீர்மானம்

கீழ்க்காணும் செயல்முறைபற்றி நடைமுறைத் தீர்மானம் செய்தல்:

- பேரணிக் கூட்டங்கள் தவறாமல் நடைபெறுதல்.
- ஜெபமாலைக் குழுக்கள் வளர்ச்சி, விரிவாக்கம் அடைதல்.
- அப்போஸ்தல அலுவலில் ஏற்பட்டுள்ள ஆன்மீக வளர்ச்சி.
- சபையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது.
- முதல்சனி பக்திமுயற்சியில் பங்கு கொள்ளுதல்
- பரிகார பக்தியை அனுசரிப்பது, பரப்புவது.

6. முடிவு ஜெபம்

சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே! இதோ! உம்முடைய சரணமாக ஓடி வந்தோம். எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமாய் இராதேயும்; ஆசிர்வதிக்கப்பட்டவருமாய், மோட்சம் உடையவருமாயிருக்கிற நித்திய கன்னிகையே, சகல ஆபத்துக்களிலேயும் நின்று எங்களைத் தற்காத்தருளும். ஆமென்.

அருள்நிறைந்த மரியாயே..............

பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலேயே ஆமென்.

பரிகார பக்தியின் பாடல்கள்

1. விருதுவாக்கு கீதம்

தோத்துஸ் தூவுஸ் ஏகோ சும் (இலத்தீன்)

(புனித லூயிஸ் மோன்போர்ட்)

தோத்துஸ் தூவுஸ் ஏகோ சும் ரெஜீனா மேயா, மேயா மாத்தெர்,
எத் ஓம்னியா மேயா, எத் ஓம்னியா மேயா, ஓம்னியா மேயா தூவா சுந்த்.

தோத்துஸ் தூவுஸ் ஏகோ ஸம் ரெஜீனா மேயா, மேயா மாத்தெர்,
எத் ஓம்னியா மேயா தூவா ஸந்த், ஓம்னியா மேயா தூவா ஸந்த்

தோத்துஸ் தூவுஸ் ஏகோ ஸம் ரெஜீனா மேயா, மேயா மாத்தெர்,
எத் ஓம்னியா மேயா தூவா ஸந்த், ஓம்னியா மேயா தூவா ஸந்த்

தோத்துஸ் தூவுஸ் ஏகோ ஸம் (தமிழ்)

முழுவதும் உமக்கே யான் சொந்தம்
என் ராக்கினியே என் தாயாரே,
என் உடமைகள் யாவும்
என் உடமைகள் யாவும்
உடமைகள் யாவும் உமக்கே சொந்தம்.

முழுவதும் உமக்கே யான் சொந்தம்
என் ராக்கினியே என் தாயாரே,
என் உடமைகள் யாவும் உமக்கே சொந்தம்;
உடமைகள் யாவும் உமக்கே சொந்தம்;

முழுவதும் உமக்கே யான் சொந்தம்
என் ராக்கினியே என் தாயாரே,
என் உடமைகள் யாவும் உமக்கே சொந்தம்;
உடமைகள் யாவும் உமக்கே சொந்தம்;

2. பாத்திமா ஆவே - பாத்திமா கோவா தா ஈரியாவில் (காண் பக். 64)

❖❖❖❖❖

அனுதின ஜெபங்கள்

அதிகாலை ஜெபம்

விடியற்கண் விழிக்கிறபோது சொல்லுதல்

சேசு மரியாயே சூசையே । உங்கள் அடைக்கலத்திலே । நான் கண்விழித்து । இன்று யாதொரு பொல்லாப்பைக் காணாமலும் । நினையாமலும் செய்யாமலும் இருக்கக் கடவேனாக । சேசு மரியாயே சூசையே । என் இருதயத்தையும் ஆத்துமத்தையும் உங்களுக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

எழுந்திருக்கிற போது

சேசுநாதருடைய திரு நாமத்தினாலே எழுந்திருக்கிறேன். படுக்கையில் நின்று எழுந்தது போலே பாவத்தை விட்டெழுந்து, மறுபடியும் நான் பாவத்தில் விழாதபடிக்கு என்னைத் தற்காத்தருளும் சுவாமி.

உடுக்கிற பொழுது

ஆண்டவரே, இந்தச் சரீரத்தை மூட வஸ்திரம் கொடுத்தது போலே, ஆத்துமத்தை அலங்கரிக்க உமது கருணைப் பிரசாதத்தைக் கொடுத்தருளுவீராக.

சுருக்கமான காலை ஜெபம்

(கோவிலுக்கு வந்ததும் தீர்த்தத்தால் நெற்றியில் சிலுவை வரைந்து கொள்ளவும். திவ்ய நற்கருணையில் இருக்கும் சேசுவை ஒற்றை முழங்காலில் இருந்து ஆராதித்துவிட்டு உன்னுடைய இடத்திற்குப் போய் முழங்காலில் இருக்கவும்.)

அர்ச்சிஷ்ட சிலுவை மந்திரம்

அர்ச்சிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடத்திலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். எங்கள் சர்வேசுரா ! பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே. ஆமென்

(கோவிலில் நற்கருணை ஸ்தாபகம் இருந்தால்)

நித்திய ஸ்துதிக்குரிய பரிசுத்த பரம திவ்விய நற்கருணைக்குச் சதாகாலமும் ஆராதனையும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் நமஸ்காரமும் உண்டாகக் கடவது.

இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்

இஸ்பிரீத்து சாந்துவே தேவரீர் எழுந்தருளி வாரும். பரலோகத்திலே நின்று! உம்முடைய திவ்விய பிரகாசத்தின் கதிர்களை வரவிடும். தரித்திரருடைய பிதாவே | கொடைகளைக் கொடுக்கிறவரே | இருதயங்களின் பிரகாசமே எழுந்தருளி வாரும் |உத்தம ஆறுதலானவரே, | ஆத்துமங்களுக்கு மதுரமான விருந்தாடியே, | பேரின்ப இரசமுள்ள இளைப்பாற்றியே, பிரயாசத்திற் சுகமே, | வெய்யிலிற் குளிர்ச்சியே, | அழுகையில் தேற்றரவே எழுந்தருளி வாரும். | வெகு ஆனந்தத்தோடே கூடியிருக்கிற பிரகாசமே, | உமது விசுவாசிகளுடைய இருதயங்களின் உற்பனங்களை நிரப்பும். | உம்முடைய தெய்வீகமின்றியே | மனிதரிடத்தில் குற்றமில்லாதது ஒன்றுமில்லை. | அசுத்தமாயிருக்கிறதை சுத்தம் பண்ணும், | உலர்ந்ததை நனையும், நோவாயிருக்கிறதைக் குணமாக்கும், வணங்காததை வணங்கச் செய்யும் | குளிரோடிருக்கிறதைக் குளிர்போக்கும் | தவறினதைச் செவ்வே நடத்தும். | உம்மை நம்பின உம்முடைய விசுவாசிகளுக்கு உம்முடைய திருக்கொடைகள் ஏழையும் கொடுத்தருளும்; | புண்ணியத்தின் பேறுகளையும், | நல்ல மரணத்தையும், | நித்திய மோட்ச ஆனந்தத்தையும் எங்களுக்குத் தந்தருளும் -ஆமென்.

திரிகால ஜெபம்

(இந்த ஜெபத்தை முழங்காலிலிருந்து வேண்டிக் கொள்ள வேண்டும். ஆனால் சனிக்கிழமை மாலையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் இதை நின்று கொண்டு சொல்ல வேண்டியது.)

ஆண்டவருடைய சம்மனசானது மரியாயியுடனே விசேஷஞ் சொல்லிற்று.
அவரும் இஸ்பிரீத்து சாந்துவினாலே கர்ப்பிணியானார். (அருள்)
இதோ ஆண்டவருடைய அடிமையானவள்
உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது. (அருள்)
வார்த்தையானது மாம்சமாகி, எங்களுடனே கூட வாசமாயிருந்தது (அருள்)
சேசு கிறிஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக.
சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஜெபிப்போமாக

சர்வேசுரா சுவாமி! சம்மனசு சொன்னதினாலே உமக்கு குமாரனாகிய சேசுக்கிறிஸ்து நாதர் மனுஷனானதை அறிந்திருக்கிற நாங்கள், அவருடைய பாடுகளினாலேயும், சிலுவையினாலேயும் உத்தானத்தின் மகிமையை அடையத்தக்கதாக, எங்களுக்கு அனுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்கிறோம். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும் ஆமென்.

பாஸ்குக் காலத்தின் திரிகால ஜெபம்

(இது பெரிய சனி மாலை முதல் அர்ச். தமதிரித்துவத்தின் திருநாள் வரைக்கும் நின்று கொண்டு சொல்லத்தக்கது.)

பரலோகத்துக்கு இராக்கினியே! மனங் களிகூரும் -அல்லேலூய்யா

அதேதெனில் பாக்கியவதியான உமது திரு உதரத்தில் அவதரித்தவர் -அல்லேலூய்யா

திருவுளம்பற்றின வாக்கின்படியே உயிர்த் தெழுந்தருளினார் -அல்லேலூய்யா

எங்களுக்காக சர்வேசுரனை மன்றாடும் -அல்லேலூய்யா.

எப்போதும் கன்னிகையான மரியாயே அகமகிழ்ந்து பூரிக்கக் கடவீர் -அல்லேலூய்யா.

அதேதெனில் ஆண்டவர் மெய்யாகவே உத்தானமாயினார். -அல்லேலூய்யா

ஜெபிப்போமாக

சர்வேசுரா சுவாமி! உம்முடைய திருக்குமாரனுமாய், எங்கள் ஆண்டவருமாயிருக்கிற சேசு கிறிஸ்து நாதரின் உத்தானத்தினாலே உலகங்களிக்கச் சித்தமானீரே. கன்னிமரியாயி ஆகிய அவருடைய திருத்தாயாராலே நித்திய ஜீவியமான பரலோக வாழ்வை நாங்கள் அடையும்படிக்கு அனுக்கிரகம் செய்தளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுகிறிஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். -ஆமென்

தமதிரித்துவ ஆராதனை (கை கூப்பி, தலை குனிந்து)

பிதாவுக்கும், சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக, ஆதியில் இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக -ஆமென். (மூன்று முறை)

காவல் சம்மனசுக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் ஜெபம்

முதல் : எனக்குக் காவலாயிருக்கிற

எல் : சர்வேசுரனுடைய சம்மனசானவரே । தெய்வீக கிருபையால் । உம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட எனக்கு । ஞான வெளிச்சம் கொடுத்து । என்னைக் காத்து நடத்தி । ஆண்டருளும் ஆமென்.

சேசுவின் திரு இருதயத்திற்கு தன்னை ஒப்புக் கொடுக்கும் செபம்

(ஜெப அப்போஸ்தல சபையார் காணிக்கை செபம்)

முதல் : சேசுவின் திரு இருதயமே!

எல் : நாங்கள் கட்டிக்கொள்ளும் । துரோகங்களுக்குப் பரிகாரமாகவும் । தேவரீர் திருப்பீடத்தில் । ஓயாமல் உம்மைத்தானே । பலியாக ஒப்புக்கொடுக்கும் । சகல கருத்துக்களுக்காகவும் । அடியேன் இன்று செய்யும் । ஜெபங்களையும் கிரியைகளையும் । படுந்துன்ப வருத்தங்களையும் । அர்ச். கன்னிமரியாயின் । மாசில்லாத திரு இருதயத்தின் வழியாக । உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

இந்த மாதத்துக்கும் । இந்த நாளுக்கும் । சபையாருக்குக் குறிக்கப்பட்ட । சகல கருத்துக்களுக்காகவும் । விசேஷமாய், । பொதுக் கருத்து ....க்காகவும், । மிஷன் கருத்து ....க்காகவும், । அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன் ஆமென்.

முதல் : பரலோகத்தில் இருக்கிற........................

எல் : எங்கள் அனுதின உணவை........................

முதல் : அருள் நிறைந்த மரியாயே வாழ்க!......................

எல் : அர்ச். மரியாயே ....

முதல் : அர்ச். பிரான்சிஸ் சவேரியாரே!

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

முதல் : அர்ச். குழந்தை தெரசம்மாளே!

எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் ஜெபம்

(நீல அணி அர்ப்பண ஜெபம்)

எங்கள் அன்புத் தாயும் அரசியுமான மரியாயே! ரஷ்யாவை மனந்திருப்பி உலகத்திற்கு சமாதானம் தருவேன் என்று பாத்திமாவில் வாக்களித்தீரே! எங்களுடையவும் உலகத்தினுடையவும் பாவங்களால் உமது மாசற்ற இருதயத்துக்கு ஏற்பட்ட நிந்தைகளுக்குப் பரிகாரமாக, எங்கள் கடமையைச் செய்வதில் எங்களுக்கு ஏற்படும் சகல துன்பங்களையும் பரித்தியாகமாக ஏற்றுக்கொள்ளுகிறோம். 53 மணி ஜெபமாலையை தியானித்துச் சொல்வோம். எங்களை உமது மாசற்ற இருதயத்திடம் ஒப்படைக்கிறோம். இதன் அடையாளமான கார்மெல் உத்தரியம் அணிந்திருக்கிறோம். (இங்கு உத்தரியத்தை முத்தி செய்யவும்) இந்த ஒப்புக் கொடுத்தலை அடிக்கடி, விசேஷமாக சோதனை நேரத்தில் புதுப்பிப்போம் தாயே -ஆமென்.

தேவ சம்பந்தமான மூன்று புண்ணிய முயற்சிகள்

விசுவாச முயற்சி

என் சர்வேசுரா சுவாமி | திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற | சத்தியங்களை யெல்லாம் | தேவரீர்தாமே அறிவித்தபடியினாலே | நானும் உறுதியாக விசுவசிக்கிறேன். | -ஆமென்.

நம்பிக்கை முயற்சி

என் சர்வேசுரா சுவாமி | தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்த படியினாலே | சேசுநாதர் சுவாமி | பாடுபட்டு சிந்தின | திரு இரத்தப் பலன்களைப் பார்த்து | என் பாவங்களை எல்லாம் பொறுத்து | எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் | மோட்ச பாக்கியத்தையும் | தந்தருளுவீர் என்று | உறுதியாக நம்பியிருக்கிறேன். -ஆமென்.

தேவ சிநேக முயற்சி

என் சர்வேசுரா சுவாமி | தேவரீர் | மட்டில்லாத சிநேகத்துக்குப் | பாத்திரமாயிருக்கிறபடியினாலே | எல்லாத்தையும் பார்க்க | உம்மை நான் | முழு மனதோடு சிநேகிக்கிறேன். | பின்னையும் உம்மைப் பற்றி | என்னை நான் சிநேகிக்கிறாப்போல | மற்ற எல்லோரையும் சிநேகிக்கிறேன். -ஆமென்.

பாத்திமா பரிகார ஜெபம்

(நெற்றி தரையில் படும்படி தெண்டனிட்டு)

என்தேவனே! உம்மை விசுவசிக்கிறேன், உம்மை ஆராதிக்கிறேன். உம்மை நம்புகிறேன், உம்மை நேசிக்கிறேன், உம்மை விசுவசியாதவர்க்காகவும் உம்மை ஆராதியாதவர்க்காகவும் உம்மை நம்பாதவர்க்காகவும் உம்மை நேசியாதவர்க்காகவும் உமது மன்னிப்பைக் கேட்கிறேன்.

விரிவான காலை ஜெபம்

(கிறிஸ்தவனானவன் அதிகாலமே எழுந்தவுடனே மிகுந்த பக்தியோடேயும், வணக்கத்தோடேயும் கை குவித்து முழங்காலில் இருந்து ஏக சர்வேசுரனைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது) :

சர்வேசுரனுக்கு தேவ ஆராதனை (Latria)

தானாய் அநாதியுமாய் சரீரமில்லாதவருமாய், அளவில்லாத சகல நன்மைச் சுரூபியுமாய், ஞானத்தினாலேயும், பலத்தினாலேயும், காரணத்தினாலேயும், எங்கும் வியாபித்திருக்கிறவருமாய், எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமுமாய், யாவருக்கும் கதியுமாய், பொல்லாதவர்களை நரகத்திலே தள்ளி, நல்லவர்களுக்கு மோட்சம் கொடுக்கிறவருமாகிய பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்னும் மூன்று ஆட்களாயிருந்தாலும், ஒரே சர்வேசுரனாயிருக்கிற என் ஆண்டவரே, தேவரீர் மாத்திரம் மெய்யான தேவனாயிருக்கிறபடியினாலே உமக்கு மாத்திரம் செய்யதக்க தேவாராதனை செய்கிறேன்.

எல் : சுவாமி உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

(இந்த வார்த்தைகளைச் சொல்லும் பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே சாஷ்டாங்கமாக விழுந்து முழு மனதோடே சர்வேசுரனை வணங்குகிறது.)

(அதன் பின்பு எழுந்திருந்து பரிசுத்த தேவமாதாவைப் பார்த்துச் சொல்லத்தக்கதாவது)

தேவமாதாவுக்கு விஷேச வணக்கம் (Hyper Dulia)

சர்வேசுரனாலே உண்டாக்கப்பட்ட புத்தியுடைத்தான வஸ்துக் களுக்குள்ளே மேலானவராயிருக்கிற அர்ச். மரியாயே, நீர் மோட்சவாசிகள் என்னப்பட்ட யாவரையும் பார்க்க எண்ணப்படாத நன்மைகளினாலே அதிசயித்து சர்வலோகத்துக்கும் இராக்கினியாயிருக்கிற தினாலேயும், எப்பொழுதும் பரிசுத்த கன்னியாஸ்திரியாயிருந்து மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனும் ஒன்றான சேசுநாதருக்கு திவ்விய மாதாவாயிருக்கிறதினாலேயும், சகலமான அர்ச்சிஷ்டவர்களுக்கும் செய்யத்தக்க சாதாரண ஆராதனையைப் பார்க்க, உமக்கு மாத்திரமே விசேஷ ஆராதனை செய்கிறேன்.

எல் : அர்ச்சிஷ்ட தேவமாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(இந்த வார்த்தைகளைச் சொல்லும் பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே முழந்தாளிட்டு நெற்றி தரையிலே பட நமஸ்காரம் பண்ணுகிறது.)

(அதன்பிறகு எழுந்திருந்து காவலாயிருக்கிற சம்மனசானவரையும் பரம தூதர்களையும் சகலமான அர்ச்சிஷ்டவர்களையும் குறித்துச் சொல்லத் தக்கதாவது)

சம்மனசுகளுக்கும் அர்ச்சிஷ்டவர்களுக்கும் சாதாரண வணக்கம் (Dulia)

சகல மோட்சவாசிகளே, சர்வேசுரனைப் பிரத்தியட்ச தரிசனமாய்த் தரிசித்துக்கொண்டு ஆண்டவருக்கு உகந்தவர்களாயிருக்கிறபடியினாலேயும், நன்மையிலே நிலை கொண்டவர்களாயிருக்கிற படியினாலேயும், உங்களுடைய வேண்டுதல் மன்றாட்டுகளினாலேயும் சர்வேசுரன் உங்களைக் கொண்டு எங்களுக்கு அநேக சகாய உபகாரங்களைச் செய்துகொண்டு வருகிறதினாலேயும் திருச்சபை கட்டளையிட்ட பிரகாரம் உங்களுக்கு ஆராதனை செய்கிறேன்.

எல் : சகல மோட்சவாசிகளே. எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். (இந்த வார்த்தைகளைச் சொல்லும் பொழுது மிகுந்த தாழ்ச்சியோடே தலை குனிந்து தண்டன் செய்கிறது)

(இப்படிப்பட்ட ஆராதனைகளெல்லாம் முடிந்தபின் சுவாமியைப் பார்த்து சொல்லத்தக்கதாவது)

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சர்வேசுரா சுவாமி! தேவரீர் என் ஆத்துமத்தையும் சரீரத்தையும் ஒன்றுமில்லாதிருக்கையிலே உண்டாக்கி இந்த ஆத்துமமும் சரீரமும் பிழைக்கிறதற்கு எண்ணப்படாத நன்மைகளைத் தந்தருளினதினாலே, -சுவாமி உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

மேலும் உம்முடைய திருமரணத்தினாலே வந்த அளவில்லாத பலனை எனக்கு ஞானஸ்நானத்தின் வழியாகக் கொடுத்தருளினீரே, -சுவாமி உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

ஞானஸ்நானம் பெற்ற பிற்பாடு நான் அநேக முறை பாவங்களைச் செய்திருக்க அந்தப் பாவங்களையெல்லாம் பாவசங்கீர்த்தன முகாந்தரமாகப் பொறுத்து தெய்வீக போஜனமாகிற நற்கருணையும் கொடுத்து காவலாயிருக்கிற சம்மனசானவரையும் கட்டளையிட்டு, இவை முதலான எண்ணிக்கைக்குள் அடங்காத அநேக சகாய உபகாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற தினாலேயும், விசேஷமாய் இந்த இராத்திரி காலத்திலே என் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் யாதொரு

பொல்லாப்பில்லாமல் காத்து இரட்சித்ததினாலேயும், என்னால் கூடிய மாத்திரம் நன்றியறிந்த மனதோடே தேவரீரை வணங்கி ஸ்தோத்திரம் செய்கிறேன்.

எல்: சுவாமி உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக்கடவது.

(அதற்குப் பின் தன்னை முழுவதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கிற வகையாவது)

தன்னை முழுதும் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தல்

சர்வலோகத்துக்கும் ஆண்டவரே! தேவரீர் என் சரீரத்தையும் பஞ்சேந்திரியங்களையும், அதிலே உண்டான தத்துவங்களையும், என் ஆத்துமத்தையும் அதிலேயுள்ள புத்தி, நினைவு, மனதென்கிற மூன்று புலங்களாகிய உள்ளிந்திரியங்களையும் எனக்குக் கொடுத்தருளினீரே. இவையெல்லாம் தேவரீருக்குப் பிரியமாயிருகிறதற்கு சேசுநாதர் பண்ணின புண்ணியங்களோடேயும் சகல அர்ச்சிஷ்டவர்களுடைய தேவ வசீகரமென்னும் காணிக்கைகளோடேயும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறேன். ஆனபடியினாலே, இப்பொழுது துவக்கி மரணபரியந்தம் நான் செய்யும் தரும காரியங்கள் எல்லாவற்றையும் தேவரீக்கு ஸ்தோத்திரமாக ஒப்புக்கொடுக்கிறேன்.

(அதற்கு மேல் சர்வேசுரனுடைய அனுக்கிரகத்தைக் கேட்கிற வகையாவது)

வேண்டுதல் மன்றாட்டு

சர்வேசுரா சுவாமி! தேவரீக்கு அளவில்லாத பலமும் மட்டில்லாத ஞானமும் அளவறுக்கப்படாத கிருபா கடாட்சமும் உண்டாயிருக்கிற படியினாலே சேசு நாதருடைய திருமுகத்தைப் பார்த்து அடியேனுக்கும் திருச்சபைக்கும் சகலமான ஜனங்களுக்கும் வேண்டிய சகாயங்களைப் பண்ணுகிறதும் அல்லாமல் விசேஷமாய் நான் இன்று பாவங்களைச் செய்யாமல் புண்ணிய வழியிலே சுமுத்திரையாய் நடக்கத்தக்கதாகவும் எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளும் சுவாமி.

(இந்த செபம் முடிந்தவுடன் பக்தியோடே பரலோக மந்திரம், அருள் நிறைந்த மந்திரம், விசுவாச மந்திரம் சொல்லுகிறது)

பரலோக மந்திரம்

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உம்முடைய இராச்சியம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்குத் தின்மை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல எங்கள்

பாவங்களைப் பொறுத்தருளும், எங்களைச் சோதனையில் விழ விடாதேயும், தின்மையிலிருந்து எங்களை இரட்சித்தருளும். -ஆமென்

அருள் நிறைந்த மந்திரம்

அருள் நிறைந்த மரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சிஷ்ட மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும். -ஆமென்.

விசுவாச மந்திரம்

பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக சுதனாகிய நம்முடைய நாதர் சேசு கிறிஸ்துவையும் விசுவசிக்கிறேன். இவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பமாய் உற்பவித்து அர்ச்சிஷ்ட கன்னிமரியாயிடமிருந்து பிறந்தார். போஞ்சு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் மரித்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பரலோகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரனுடைய வலது பக்கத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியை விசுவசிக்கிறேன். பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையை விசுவசிக்கிறேன். அர்ச்சிஷ்டவர்களுடைய சமூதீதப் பிரயோஜனத்தை விசுவசிக்கிறேன். பாவப் பொறுத்தலை விசுவசிக்கிறேன். சரீர உத்தானத்தை விசுவசிக்கிறேன். நித்திய ஜீவியத்தை விசுவசிக்கிறேன். -ஆமென்.

(இதன் பின் சர்வேசுரனுடைய ஆறு இலட்சணங்களையும் தியானிக்கிறது)

ஆறு இலட்சண மந்திரம்

1-வது சர்வேசுரன் தாமாயிருக்கிறார்.

2-வது துவக்கமும் முடிவும் இல்லாமலிருக்கிறார்.

3-வது சரீரமில்லாமலிருக்கிறார்.

4-வது அளவில்லாத சகல நன்மையும் நிறைந்து இருக்கிறார்.

5-வது எங்கும் வியாபித்திருக்கிறார்.

6-வது எல்லாத்திற்கும் ஆதி காரணமாயிருக்கிறார்.

(இனி, இப்படிப்பட்ட கடவுளின் கற்பனைகளையும் அவர் ஸ்தாபித்த திருச்சபையின் கட்டளைகளையும் சொல்லி தன்னிலுள்ள பாவ துர்க்குணங்களை நினைத்து வெறுக்கிறது)

பத்துக் கற்பனைகள்

1-வது உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே. நம்மைத்தவிர வேறு சர்வேசுரன் உனக்கு இல்லாமல் போவதாக.

2-வது சர்வேசுரனுடைய திருநாமத்தை வீணாகச் சொல்லாதிருப்பாயாக.

3-வது சர்வேசுரனுடைய திருநாட்களை பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக.

4-வது பிதாவையும், மாதாவையும் சங்கித்திருப்பாயாக.

5-வது கொலை செய்யாதிருப்பாயாக.

6-வது மோகபாவம் செய்யாதிருப்பாயாக.

7-வது களவு செய்யாதிருப்பாயாக.

8-வது பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

9-வது பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக.

10-வது பிறர் உடைமையை விரும்பாதிருப்பாயாக.

திருச்சபையின் கட்டளைகள்

1-வது ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திரு நாட்களிலும் முழுப்பூசை காண்கிறது.

2-வது வருஷத்துக்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்கிறது.

3-வது பாஸ்கு காலத்தில் பாவசங்கீர்த்தனம் செய்து தேவ நற்கருணை உட்கொள்ளுகிறது.

4-வது வெள்ளிக்கிழமை முதலிய சுத்தபோசன நாட்களில் சுத்த போசனமும் ஒருசந்தி நாட்களில் ஒருசந்தியும் அனுசரிக்கிறது.

5-வது விலக்கப்பட்ட காலத்திலும், குறைந்த வயதிலும், விக்கினமுள்ள உறவு முறையாரோடும் கல்யாணம் செய்யாதிருக்கிறது.

6-வது நமது ஞான மேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்கிறது.

(சர்வேசுரனின் கற்பனைகளுக்கும் திருச்சபையின் கட்டளைகளுக்கும் விரோதமாய் செய்த நம் பாவங்களை நினைத்து துக்கப்பட்டு உத்தம மனஸ்தாபப்படுவது)

உத்தம மனஸ்தாப மந்திரம்

அனந்த தயை சுரூபியாயிருக்கிற என் சர்வேசுரா சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மையும் நிறைந்தவராகையால் எல்லாவற்றிற்கும் மேலாக உம்மை நான் முழுமனதோடு நேசிக்கிறேன். இப்படிப்பட்ட தேவரீருக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேன் என்று மிகவும் மனம் நொந்து மெத்த மனஸ்தாப மாயிருக்கிறேன். எனக்கிதுவே மனஸ்தாப மில்லாமல் வேறே மனஸ்தாபமில்லை. எனக்கிதுவே துக்கமில்லாமல் வேறே துக்கமில்லை. இனிமேல் ஒரு பொழுதும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று உறுதியான மனதுடனே பிரதிக்கினை செய்கிறேன்.

மேலும் எனக்குப் பலம் போதாமையால் சேசுநாதர் சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களையெல்லாம் பொறுத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும் மோட்ச பாக்கியத்தையும் தந்தருளுவீர் என்று முழு மனதோடு நம்பியிருக்கிறேன். திருச்சபை விசுவசித்துக் கற்பிக்கிற சத்தியங்களையெல்லாம் தேவரீர்தாமே அறிவித்திருப்பதினால் நானும் உறுதியாக விசுவசிக்கிறேன். -ஆமென்.

(அதன்மேல் சுவாமியை நோக்கி நல்ல பிரதிக்கினை பண்ணுகிற வகையாவது)

சர்வேசுரா சுவாமி! தேவரீர் அருளிச் செய்த வேத கற்பனையின் படியே அடியேன் சுமுத்திரையாய் நடக்கத் துணிந்திருக்கிறபடியினாலே என்னிடத்திலிக்கிற ஆங்காரம், கோபம் முதலிய விசேஷதுர்குணங்களை நீக்கி, இன்று அநேக தருமங்களைச் செய்து வாக்கினாலேயும் கிரிகையினாலேயும் தாழ்ச்சி, பொறுமை, கற்பு முதலிய புண்ணியங்களை அடைய பிரயாசைப்படுவேன்.

இவையெல்லாம் என்னுடைய பலத்தினாலே கூடாதே, பரிசுத்த தேவ மாதாவே எனக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும்.

என் காவலான சம்மனசானவரே! என்னைப் புண்ணிய நன்னெறியில் நடப்பித்துக் காத்தருளும்.

நான் பேர் கொண்டிருக்கிற அர்ச்சிஷ்டவரே உம்மைப்போலவே நான் இவ்வுலகத்தில் சர்வேசுரனைப் பக்தியோடே சேவிக்கவும், உம்மோடே அவரைப் பரலோகத்தில் தரிசித்து ஸ்துதிக்கவும் தேவ கிருபை எனக்குக் கிடைக்கும்படியாக மன்றாடிக்கொள்ளும் ஆமென்.

பகலில் சொல்லத்தகும் ஜெபங்கள்

போஜனத்துக்கு முன் செபம்

சர்வேசுரா சுவாமி! எங்களையும், உமதருளினால் நாங்கள் புசிக்கப் போகிற இந்த போஜனத்தையும் எங்கள் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து ஆசீர்வதித்தருளும். . . . -ஆமென்.

போஜனத்துக்குப் பின் ஜெபம்

சர்வேசுரா சுவாமி! தேவரீர் எங்களுக்குத் தந்தருளின இந்த போஜனத்துக்காகவும், தேவரீர் எங்களுக்குச் செய்து வருகிற சகல உபகாரங் களுக்காகவும் தேவரீருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம். . . . -ஆமென்.

வேலை துவக்கு முன் ஜெபம்

சுருக்கமான இஸ்பிரீத்து சாந்துவின் மந்திரம்

இஸ்பிரீத்து சாந்துவே, தேவரீர் எழுந்தருளி வாரும். உம்முடைய விசுவாசிகளுடைய இருதயங்களை நிரப்பும். அவைகளில் சிநேக அக்கினியை மூட்டியருளும். உம்முடைய ஞானக் கதிர்களை வரவிடும். அதினால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

ஜெபிப்போமாக

சர்வேசுரா சுவாமி! விசுவாசிகளுடைய இருதயங்களை இஸ்பிரீத்து சாந்துவின் பிரகாசத்தால் படிப்பித்தருளினீரே. அந்த இஸ்பிரீத்து சாந்துவினால் சரியானவைகளை உணரவும், அவருடைய ஆறுதலால் எப்போதும் மகிழ்ந்திருக்கவும் அனுக்கிரகம் செய்தருளும். இவைகளை எல்லாம் எங்கள் ஆண்டவராகிய சேசு கிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து தந்தருளும். -ஆமென்.

- அருள் நிறைந்த மரியாயே வாழ்க.....

முதல் : ஞானத்துக்கு இருப்பிடமே

எல் : எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்

வேலை முடிந்த பின் செபம்

சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே! இதோ! உம்முடைய சரணமாக ஓடி வந்தோம். எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமாய் இராதேயும்; ஆசீர்வதிக்கப்பட்டவருமாய், மோட்சம் உடையவருமாயிருக்கிற நித்திய கன்னிகையே, சகல ஆபத்துக்களிலேயும் நின்று எங்களைத் தற்காத்தருளும். -ஆமென்

தேவநற்கருணை சந்திப்பு

"இதோ உலக முடியுமளவும் நாம் உங்களோடு இருக்கிறோம்" (அர்ச். மத்தேயு, 28 : 20). தம்மால் சிநேகிக்கப்பட்ட ஆடுகளுக்காகத் தமது உயிரைக் கொடுத்த நல்ல ஆயனானவர், தாம் மரணமடைந்தாலும் நம்மை விட்டுப் பிரியாமலிருக்கத் திருவுளமாகி, நம்மைப் பார்த்து : நம்மால் மிகவுஞ் சிநேகிக்கப்படும் ஆடுகளே, இதோ நாம் உங்களோடு எப்பொழுதும் வாசமாயிருக்கிறோம், உங்களைக் குறித்தே நற்கருணையில் உயிரோடிருக்கிறோம், நமது தரிசனையால் உங்களுக்கு ஆறுதல் சகாயமாயிருக்க நாம் திருவுளமாய் இருக்கிறதினால் உங்களுக்கு வேண்டுமென்கிற போது நமது தரிசனையைக் காணலாம். உலகத்தில் மனிதர் இருக்குமளவும் நாமும் உலகத்தை விட்டுப் பிரியாமல் மனிதரோடு

வாசமாயிருப்போமென்று திருவுளம்பற்றி வருகிறார். தூர தேசத்திற்குப் போகிற பத்தாவானவர் தாம் இல்லாத சமயத்தில் தமது பத்தினி தனித்திராமல் தாமே தேவநற்கருணையில் எழுந்தருளித் தமது பத்தினிக்குத் துணையாயிருக்கத் திருவுளமாயினார் என்று அர்ச். அலெக்சாந்தர் இராயப்பர் வசனித்திருக்கிறார்.

செபம்

நன்மை நிறைந்த கர்த்தாவே! சிநேகம் நிறைந்த பிதாவே! இப்பொழுது நான் உம்மைச் சந்திக்கிறதற்குப் பதிலாய், நான் தேவநற்கருணையை உட்கொள்ளும் பொழுது தேவரீரும் என்னைச் சந்திக்க வருகிறீர். தேவரீர் என்னைச் சந்திக்க வருமளவில் உமது தரிசனையை எனக்குத் தந்தருளுகிறதும் அல்லாமல் உம்மைத்தானே எனக்குப் போஜனமாகக் கொடுத்து என்னோடு பந்தனமாகத் திருவுளமான என் சேசுவே, உம்மை முழுதும் எனக்குக் கையளிக்கிறதினால் நீர் இப்பொழுதும் என்னிடத்திலிருக்கிறீர் என்று உண்மையாகச் சொல்லுகிறேன். தேவனாயிருக்கிற நீர்தாமே உம்மை முழுதும் எனக்குக் கையளிக்கிறதினால், நிலத்தின் சகதியில் உதிக்கும் புழுவுக்குச் சமானமாயிருக்கிற நானும் என்னை முழுதும் உமக்குக் கையளிக்க ஞாயமல்லவோ? ஆ, என் தேவ சிநேகமே! நான் வார்த்தையினால் மாத்திரம் உமக்கு முழுதுஞ் சொந்தமாயிருக்கிறேன் என்று சொல்லாமல் உண்மையாகவே கிரியையினால் உமக்கு முழுதுஞ் சொந்தமாயிருக்கிறேன் என்று சொல்லுங் காலம் எப்பொழுது வரும்? சேசுவே! இது உம்மால் ஆகும் காரியமாகையால் நீர் எனக்காகச் சிந்தின திரு உதிரத்தின் பேறுகளைப் பார்த்து என் நம்பிக்கையை உறுதிப்படுத்தி நான் மரணம் அடையாமுன் ஒரு விதத்திலும் நான் என்னுடையவன் என்று இராமல் முழுதும் உம்முடையவனாயிருக்கச் செய்யும். சகல மனிதர் சத்தத்திற்குத் திருச்செவி கொடுக்குங் கர்த்தாவே, உமது சிநேகத்தை வருந்திக் கேட்கும் என் அபய சத்தத்திற்குச் செவிகொடும். ஆண்டவரே, நான் என் சத்துவமெல்லாங் கொண்டு உம்மைச் சிநேகிக்கவும், பிரயோஜனமும், ஆறுதலும், சம்பாவனையுமில்லாமல் உமது திருவுளத்திற்கு முழுதுங் கீழ்ப்படிந்திருக்கவும், சிநேகத்தைப் பற்றி மாத்திரமே உமக்கு ஊழியப் பணிவிடை செய்து வரவும், உமது மேலுள்ள சிநேகம் அக்கினி மயமாய்ப் பற்றி எரியவும், உமது திரு இருதயத்திற்கு மாத்திரமே பிரியப்படவும் அபேட்சிக்கிறேன். என் மேலுள்ள உமது சிநேகமே அடியேனுக்குச் சம்பாவனையாயிருக்க மன்றாடுகிறேன். பிதாவின் பிரிய சுதனான சேசுவே, என் மனச் சுதந்திரத்தையும் என்னையுந்தானே முழுதும் உமக்குள் ஐக்கியப்படுத்தும். சேசுவே! நான் உம்மையே நாடி, உம்மையேத் தேடி, உம்மையே அபேட்சித்து, உம்மை

மாத்திரமே சிநேகிக்க மன்றாடுகிறேன். உம்மையல்லாமல் எனக்கு வேறொன்றும் வேண்டாம், உம்மை மாத்திரமே எனக்குத் தந்தருளும்.
மனவல்லயச் செபம்: சேசுவே! நான் முழுதும் உமக்குச் சொந்தமாயிருக்கச் செய்யும்.

தேவமாதாவின் சந்திப்பு

பிதாவாகிய சர்வேசுரனின் சர்வ வல்லபத்தினுடையவும், சுதனாகிய சர்வேசுரனின் ஞானத்தினுடையவும், இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனின் பரவசப்படுத்தும் நன்மைத் தனத்தினுடையவுஞ் சாந்தமான கன்னி மரியாயே வாழ்க!

ஓ தேவ கன்னி மரியாயே! நீர் பரலோகத்தையும் பூலோகத்தையும் உமது உச்சிதமான வெளிச்சத்தால் நிரப்புகின்றீர். இஷ்டப்பிரசாதங்களினால் அலங்கரிக்கப்பட்டவரே, பிதாவுக்குப் புத்திரருமாய், உம்முடைய கன்னிமை தங்கிய இருதய சிநேகத்தின் குமாரருமாய், மதுரமும் இன்பமும் நிறைந்த உமது ஆத்தும பத்தாவுமான ஆண்டவர் உம்முடனே இருக்கிறார். ஏவாளின் மேல் விழுந்த சாபத்தை நீக்கிச் சுத்தமான வாழ்வை மனுக்குலத்துக்கு அடைந்தபடியால் ஸ்திரீகளுக்குள்ளே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவராயிருக்கிறீர். எல்லாக் காரியங்களையும் மென்மேலும் ஆசீர்வதித்து அர்ச்சித்துச் சிறப்பித்து உயிர்ப்பிக்கின்ற சகல வஸ்துகளுக்கு சிருஷ்டிகரும் ஆண்டவரும் சேசு கிறீஸ்துநாதருமாகிய உம்முடைய திருவயிற்றின் கனி ஆசீர்வதிக்கப் பட்டவராயிருக்கிறார். -ஆமென்.

என் மாதாவே! என் தாயாரே! என்னை முழுவதும் உமக்கே ஒப்புக்கொடுகிறேன்.

மனவல்லயச் செபம் : என் நம்பிக்கைக்கு ஆதாரமான மரியாயே, எனக்கு எல்லா நன்மையும் உம்மால் வரும் என்று காத்திருக்கிறேன்.

அர்ச். தேவ மாதாவின் உதவி சகாயம் அடைய ஜெபம்.

ஜென்ம மாசணுகாத கன்னிகையே! பரலோக பூலோக இராக்கினியே! பரிசுத்த மரியாயே! சர்வேசுரனின் மாதாவே! என் தாயாரே! கஸ்திபடுகிறவர்களுக்கு ஆறுதலே! பாவிகள் தஞ்சமே! பாவிகளுக்காக உமது திருக்குமாரனிடத்தில் மனுப் பேசுகிறவரே! பாவிகளில் பாவியாய் இருக்கிற அடியேன் உமது தஞ்சமென்று ஓடி வந்தேன். என்பேரில் கிருபையாயிரும். என் பாவ அகோரத்தால் அநேகமாயிரம் முறை நரகத்திற்குப் பாத்திரமாய் இருந்த என்னை இதுவரைக்கும் காப்பாற்றி மட்டற்ற உபகாரங்களைச் செய்து வருகிறதினால், உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறேன். மகா

சிநேகத்திற்குப் பாத்திரமான தாயே! உமது பேரில் வைத்த சிநேகத்தால் நான் என் ஆயுசுபரியந்தம் உமக்கு ஊழியம் செய்து வருகிறதும் அல்லாமல், சகல மனிதரும் உமக்கு ஊழியம் செய்து வர என்னாலானப் பிரயாசைப்படுவேன். என் பணிவிடையைப் புறக்கணித்துத் தள்ளாமல் என்னை உமது தாசரில் ஒருவனாகச் செய்யும். மகா இரக்கம் நிறைந்த மரியாயே! சர்வேசுரனுக்குப் பின் என் நம்பிக்கையே! நீர் சர்வேசுரனிடத்தில் மன்றாட வல்லபம் உள்ளவர் ஆகையால், நான் மரணபரியந்தம் பாவச் சோதனையில் அகப்பட்டு மோசம்போகாமல் என்னைக் காப்பாற்றும். என் நேசமுள்ள தாயே! சர்வேசுரன்பேரில் உமக்குள்ள மகா சிநேகப் பெருக்கத்தைப் பார்த்து எனக்கும் அவர் பேரில் மெய்யான சிநேகம் உண்டாகச் செய்யும். எந்தெந்தச் சமயத்திலும் நீர் எனக்கு உதவி சகாயமாயிருக்கிறதும் அல்லாமல், என் மரண நேரத்தில் விசேஷ உதவியாயிருந்து, நித்தியகாலமும் நான் உமது கிருபையை வாழ்த்தி ஸ்துதிக்க வருமளவும் என்னைக் கைவிடாதேயும், உமது கிருபையை நாடி உமது அடைக்கலத்தைத் தேடி வந்தவர்களில் ஒருவரையாகிலும் நீர் கைநெகிழவிட்டீர் என்று உலகத்தில் கேள்விப்பட்டதில்லை என்கிறதினால், என்னை உம்மைவிட்டுப் பிரியச் செய்யாதேயும்.

ஞான நன்மை (Spiritual Communion)

(சேசுநாதர் சுவாமியைத் தேவதிரவிய அனுமானமாக அருந்தாத, அதாவது அப்பத்தின் குணங்களுக்குள்ளே வாங்காதபோது, நாம் நேசமிகுந்து உயிருள்ள விசுவாசத்துடன் அவர் நம்முடைய இருதயத்தில் வந்திருக்க வேண்டும் எனக் கொள்ளும் ஆசையே ஞான நன்மை எனப்படும். ஆதலால், ஞான நன்மை வாங்குவது மிக எளிது. எந்நேரத்திலும், எவ்விடத்திலும், சுவாமி! என் இருதயத்தில் எழுந்தருளுளி வாரும் என்று அவரை வரவழைக்கலாம்.)

ஞான நன்மை வாங்குகிற ஜெபம்

என் அன்பான சேசுவே! தேவரீர் தேவநற்கருணையிலே மெய்யாகவே எழுந்தருளி இருக்கின்றீரென்று உறுதியாக விசுவசிக்கிறேன். நான் தேவரீரை எல்லாத்திற்கும் மேலாக சிநேகித்து தேவரீர் என் ஆத்துமத்திலே எழுந்தருளி வந்து வாசம் பண்ணும்படி மிகவும் ஆசைப்படுகிறேன். ஆனால் தேவரீர் இந்த நேரத்திலே தேவநற்கருணை மூலமாக என்னிடத்திலே வரக்கூடாத படியால், ஞானவிதமாயாவது எழுந்தருளி வாரும் சுவாமி, நீர் மெய்யாகவே என்னிடத்தில் எழுந்தருளி இருப்பதுபோல் எண்ணிப்பாவித்து உம்மை நான் அரவணைத்து என்னை முழுவதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் எப்போதும் உம்மைவிட்டுப் பிரிந்து போகாதபடி எனக்கு அனுக்கிரகம்பண்ணியருள வேண்டுமென்று உம்மை ஆவலோடு மன்றாடுகிறேன். – ஆமென்.

சுருக்கமான சிலுவைப் பாதை
(VIA CRUCIS)
பீடத்துக்கு முன்பாகச் சொல்லத்தகும் ஜெபம்

உத்தம மனஸ்தாப மந்திரம் (பக்.47)

திவ்விய சேசுவே! எங்களுக்காகவும் உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைச் சேவிக்கிறவர்களுக்கு அளிக்கப்பட்ட பலன்களை அடைய விரும்பித் தேவரீருடைய இரக்கத்தைத் தேடி மன்றாடுகிறோம்.

அர்ச். மரியாயே! வியாகுல மாதாவே, உம்மோடு கூட சிலுவைப் பாதையை சேவிக்க விரும்புகிற நாங்கள் அதனுடைய சகல பலன்களை அடையும்படிக்கு எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

1. மைந்தனார் சிலுவை மீது
 மாதுயருடன் வருந்த
 நொந்தழுதாள் தாய் மரி

முதலாம் ஸ்தலம்

முதல் : திவ்விய சேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்.

எல் : அதேனென்றால் உம்முடைய அர்ச்சிஷ்ட சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

சேசுநாதரை சாவுக்குத் தீர்வை இடுகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையிலே அறையுண்டு மரணத்தை அடையத் தீர்வையிடப்பட்டதை தியானித்து, நாங்கள் தேவரீரை வணங்கி நமஸ்கரிக்கிறோம். அகோரத் தீர்வையிலே நின்று எங்களை இரட்சித்தருளும் சுவாமி ஒரு பர. அரு. திரி.

மு. - எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி.

எல். - எங்கள் பேரில் தயவாயிரும்.

மு. - மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது.

எல். ஆமென்.

2. திரு மகன் அறையுண்ட
 சிலுவை அடியில் நின்ற
 தேவ தாய் நொந் தழுதாள்

இரண்டாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

சேசுநாதர் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் பாரமான சிலுவையை சுமந்து போனதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு இவ்வுலகில் வருகிற கஸ்தி பொல்லாப்புகளைப் பொறுமையோடே அனுபவிக்கக் கிருபை செய்தருளும் சுவாமி. ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் .... மற்றதும்.

3. வேதனைக் கடலமிழ்ந்த
மாதா ஆத்துமம் வதைய
வாள் பாய்ந் தூடுரு விற்று

மூன்றாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

சேசுநாதர் சிலுவையின் பாரத்தால் கீழே விழுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே முதல் விசை குப்புற விழுந்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் செய்கிற பாவங்களிலே மூர்க்கராய் நிலைகொள்ளாமல் உடனே அவைகளைவிட்டு எழுந்திருக்க அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி. ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் .... மற்றதும்.

4. நேய மகனை இழந்த
தாய் அனுபவித்த துயர்
தானுரைக்க நாவுண்டோ

நான்காம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

சேசுநாதர் தமது பரிசுத்த தாயாரை சந்திக்கிறார்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய பரிசுத்த மாதா உமக்கு எதிர்கொண்டு வருகிறதைக் கண்டு நீர் சொல்லிலடங்காத கஸ்தியை அனுபவித்ததைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாகும் வேளையில் வியாகுல மாதாவின் அடைக்கலத்தை அடைய அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி. – ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் .... மற்றதும்.

5. அருமையாய் ஈன்ற சுதன்
அவஸ்தையைக் கண்டிளகி
உருகிப் புலம் பினார்

ஐந்தாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சிரேனான சீமோன் சேசுநாதர் தமது சிலுவையைச்
சுமக்கும்படி உதவி செய்கிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவை சுமந்து போகிறதற்குச் சிரேனென்கிற சீமோன் உதவி செய்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். எங்களுக்கு நியமித்திருக்கிற சிலுவையாகிய துன்பங்களை உம்மோடுகூட நாங்கள் சுமக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.

– ஒரு பர. அரு. திரி.

எங்கள் பேரில் . . . . மற்றதும்.

6. இரட்சகர் திருத் தாயார்
இக் கொடிய வாதைப் பட
யார் கண்டழாதிருப்பார்?

ஆறாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

இரத்தக் கறைபிடித்த சேசுநாதருடைய திருமுகத்தை
ஓர் பெண்பிள்ளை துடைக்கிறாள்.

திவ்விய சேசுவே! வெரோணிக்கம்மாள் தேவரீருடைய திருமுகத்தைத் துடைத்ததைத் தியானித்து. உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் முகத்தாக்ஷிணியத்தைப் பாராமல், புண்ணிய நெறியில் உறுதியாய் நடக்க அநுக்கிரகஞ் செய்தருளும் சுவாமி. – ஒரு பர. அரு. திரி.

எங்கள் பேரில் . . . . மற்றதும்.

7. திருமகன் துயரத்தால்
உருகுந் தாயைக் கண்டுள்ளம்
கரையாதார் ஆருண்டு?

ஏழாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதர் சிலுவையின் பாரத்தால்
இரண்டாம் விசை தரையில் குப்புற விழுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே இரண்டாம் விசை குப்புற விழுந்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் எந்தப்

பாவத்திலும் திரும்ப விழாதபடிக்குக் கிருபை செய்தருளும் சுவாமி.
– ஒரு பர, அரு, திரி.
எங்கள் பேரில் . . . . மற்றதும்.

8. அன்புள்ள தம் திருமகன்
துன்ப துயர் அவஸ்தையுள்
தன் சீவன் தரக் கண்டார்

எட்டாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதர் தமது பின்னால் அழுதுகொண்டு வந்த
யூத ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் உம்மை நோக்கி அழுத ஜெருசலேம் பட்டணத்து ஸ்திரீகளுக்கு ஆறுதல் சொன்னதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் பண்ணின பாவ துரோகங்களுக்குத் துயரப்பட்டு, அவைகளுக்காக எப்போதும் அழுது கொண்டிருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி. – ஒரு பர, அரு, திரி.
எங்கள் பேரில் . . . . மற்றதும்.

9. பட்சவூறணி மாதாவே
பரிதவித்தே உம்மோடு
பாவி நான் அழச் செய்யும்

ஒன்பதாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதர் மூன்றாம் விசை கீழே விழுகிறார்

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையின் கீழே மூன்றாம் விசை குப்புற விழுந்ததைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சாவான பாவத்தோடே செத்து நித்திய நரகத்திலே விழாதபடிக்குக் கிருபை செய்தருளும் சுவாமி. – ஒரு பர, அரு, திரி.
எங்கள் பேரில் . . . . மற்றதும்.

10. ஆதி சேசுவை நேசித்தே
யான் அவர்க்கினியனாக
அன்பால் என்னுள்ளம் சுடும்

பத்தாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதருடைய வஸ்திரங்களை உரிகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் வஸ்திரங்கள் உரியப் பட்டதையும், தேவரீருக்குக் கசப்பான காடியைக் குடிக்கக் கொடுத்ததையும் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் சகலத்திலும் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து, பொறுமையோடு நடக்கக் கிருபை செய்தருளும் சுவாமி.

– ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் . . . . மற்றதும்.

11. தேவ தாயே தயை செய்து
பாவி என்னிருதயத்தில்
சேசு காயம் பதியும்

பதினோராம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதரை சிலுவையில் அறைகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவையில் அறையப் பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் இவ்வுலக செல்வங்களை வெறுத்து, பரலோகத்தை மாத்திரமே நாடக் கிருபை செய்தருளும் சுவாமி.

– ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் . . . . மற்றதும்.

12. சிலுவையடியில் நின்று
தேவ தாயே உம்மோடே, நான்
புலம்ப ஆசிக்கிறேன்

பன்னிரண்டாம் ஸ்தலம்

மு. திவ்விய சேசுவே . . . . மற்றதும்.

சேசுநாதர் சிலுவையில் மரிக்கிறார்.

திவ்விய சேசுவே! தேவரீர் சிலுவை மரத்தில் உயிர் விட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் உம்மை மாத்திரமே நேசித்து, இஷ்டப் பிரசாதத்தோடே மரித்து பரகதியில் உம்மோடே வீற்றிருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி. – ஒரு பர, அரு, திரி.

எங்கள் பேரில் . . . . மற்றதும்.

13. கன்னியர் அரசே தாயே
என் கண்ணீரை உம்முடைய
கண்ணீரோ டேற்றருளும்

பதின்மூன்றாம் ஸ்தலம்

ரு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

மரித்த சுவாமியை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கி வியாகுல மாதாவின் மடியிலே வளர்த்தப்பட்டதைத் தியானித்து, உம்மை ஆராதிக்கிறோம். எங்களுடைய இருதயத்திலே தேவரீருடைய திருக்காயங்களும், பரிசுத்த மாதாவின் வியாகுலங்களும் பதிந்திருக்கக் கிருபை செய்தருளும் சுவாமி. – ஒரு பர. அரு. திரி.

எங்கள் பேரில் .... மற்றதும்.

14. அன்பாய் அக்கினியை மூட்டி
அடியேனைத் தீர்வை நாளில்
ஆதரிப்பீர் கன்னியே

பதினான்காம் ஸ்தலம்

ரு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

சேசுநாதரைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

திவ்விய சேசுவே! தேவரீருடைய திருச் சரீரம் அடக்கம் பண்ணப்பட்டதைத் தியானித்து உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் மரண பரியந்தம் தேவரீரை நேசிக்கவும், தேவரீருடைய பேரின்ப இராச்சியத்துக்கு சேரவும் கிருபை செய்தருளும் சுவாமி. – ஒரு பர. அரு. திரி.

எங்கள் பேரில் .... மற்றதும்.

15. மண் உடல் உயிர் பிரிந்தால்
வான் மோட்சத் தாந்துமஞ் சேர்ந்து
வாழவுஞ் செய் தருளும்

(பீடத்திற்கு முன் முழந்தாளிட்டு)

ரு. திவ்விய சேசுவே .... மற்றதும்.

சேசுகிறிஸ்து நாதருடைய ஐந்து திருக் காயங்களைக் குறித்து ஐந்து பர. அரு. திரி. மந்திரங்களும், அர்ச். பாப்பானவருடைய கருத்துக்கள் நிறைவேற ஒரு பர. அரு. திரி. மந்திரமும் சொல்லுகிறது.

பார்ச்சே தோமினே,

(கைகளை விரித்து)

குரு : பார்ச்சே தோமினே, பார்ச்சே போப்புலோ துவோ
நே இன் எத்தேர்னும் இராஸ்காரிஸ் நோபிஸ்

எல் : பொறுத்தருளும் கர்த்தாவே, உமது ஜனத்தின் பாவங்களைப் பொறுத்தருளும்.

என்றென்றைக்கும் எங்கள் பேரில்
கோபமாய் இராதேயும் சுவாமி. (3 முறை பாடவும்)

(பாடுபட்ட சுரூப ஆசீர்வாதம்)

பாவசங்கீர்த்தனம் செய்யும் வகை
ஆயத்த செபம்

இஸ்பிரீத்து சாந்துவே! தேவரீர் எழுந்தருளிவாரும்; உமது திவ்விய பிரகாசத்தின் கதிர்களை என் ஆத்துமத்தில் வரவிட்டு, அதிலுள்ள பாவக்கறைகளையும், அந்தப் பாவங்கள் உமக்கு வருவிக்கிற அருவருப்பையும் நான் கண்டறியும்படி தயை செய்தருளும். அர்ச். கன்னிமரியாயே! அர்ச். சூசையப்பரே! நான் பெயர் கொண்டிருக்கிற அர்ச்சிஷ்டவரே! என் ஆத்துமத்திலுள்ள பாவக் கறைகளை எல்லாம் கண்டு, மனஸ்தாபப்பட்டு, கெட்டியான பிரதிக்கினை செய்து நல்ல பாவ சங்கீர்த்தனம் பண்ணும்படி எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

ஆத்தும சோதனை

1. பத்துக் கற்பனை

1-வது. மனது பொருந்தி விசுவாசத்தில் சந்தேகப்பட்டது; காலை ஜெபம், மாலை ஜெபம் செய்யத் தவறினது; செய்தாலும் பத்திக்குறைவாய்ச் செய்தது; கோவிலில் மரியாதைக் குறைவாயிருந்தது; பேய்க்குப் படைத்ததை வாங்கினது, சாப்பிட்டது; குருக்கள் தவிர மற்றவர்களைக் கொண்டு மந்திரித்தது; சகுன சாஸ்திரம் பார்த்தது, கேட்டது.

2-வது. பொய்யான காரியத்திற்கும் சந்தேகமான காரியத்திற்கும் சர்வேசுரனை சாட்சிக்கு அழைத்தது; சர்வேசுரனைத் தூஷணித்தது; அர்ச்சிஷ்டவர்களுக்கு விரோதமாய்ப் பேசினது; காற்று, மழை முதலியவைகளைப் பற்றி முறையிட்டது; சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், குருக்கள் இவர்களுக்கு விரோதமாய்ப் பேசினது; வேதத்துக்கு விரோதமாய் நினைத்தது, பேசினது; அவநம்பிக்கைப் பட்டது; தன்னையாவது புறத்தியாரையாவது சபித்தது.

3-வது. ஞாயிற்றுக்கிழமை கடன் திருநாட்களில் பூசை தவறினது; சரீரப் பிரயாசையான விலக்கப்பட்ட வேலை செய்தது, அல்லது செய்வித்தது.

4-வது. தாய் தகப்பன், உபாத்திமார், கணவர், குருக்கள் முதலிய பெரியவர்களுக்குக் கீழ்ப்படியாமலிருந்தது; மரியாதை தவறினது, வருத்தம் வருவித்தது.

5-வது. புறத்தியார் பேரில் வர்மம் வைராக்கிய மாயிருந்தது; துர்மாதிரிகை காட்டினது; துர்ப்புத்தி சொன்னது. கொலை செய்தது, அதற்குக் காரணமாய் இருந்தது.

6-வது. மனது பொருந்திக் கெட்ட நினைவு நினைத்தது; கெட்ட பேச்சுப் பேசினது, கேட்டது; கெட்ட பாட்டுப் பாடினது, கேட்டது; கெட்ட புத்தகங்களை வாசித்தது, கேட்டது; கெட்ட பிள்ளைகளோடு கூடினது; கெட்ட பார்வை பார்த்தது; கெட்ட காரியம் செய்தது; கெட்ட விளையாட்டு விளையாடினது; கெட்ட கருத்துடன் ஆடை ஆபரணங்கள் தரித்தது.

7-வது. திருடினது, திருடியதை உத்தரியாமலிருந்தது; திருடின உடைமையை வாங்கினது; புறத்தியாருக்கு நஷ்டம் வருவித்தது. அபகீர்த்தி உண்டாக்கினது.

8-வது. பொய் சொன்னது; அவதூறு சொன்னது; கோள் சொன்னது; புறத்தியார் பேரில் குறைவாய் நினைத்தது. பொய் சாட்சி சொன்னது.

9-வது. கெட்ட ஆசைப்பட்டது.

10-வது, புறத்தியார் சொத்துக்கு ஆசைப்பட்டது.

2. திருச்சபைக் கட்டளை

வருஷப் பாவசங்கீர்த்தனம் பண்ணாமலிருந்தது; பாஸ்கு காலத்தில் திவ்விய நற்கருணை வாங்காமற் போனது; விலக்கப்பட்ட நாட்களில் மாம்ஸம் சாப்பிட்டது.

3. தலையான பாவங்கள்

1-வது. தன்னைக் குறித்துப் பெருமையாய் நினைத்தது, பேசினது. 2-வது, கோபித்தது. 3-வது, கற்புக்கு விரோதமான பாவம் செய்தது. 4-வது, பணத்தின் மேல் மிஞ்சின ஆசை வைத்தது. 5-வது, வேண்டியதிற்கு மேல் சாப்பிட்டது. 6-வது, காய்மகாரப்பட்டது. 7-வது, வீண்காலம் போக்கினது.

4. அந்தஸ்தின் கடமைகள்

மந்திரக் குறிப்பிடம் படியாமலிருந்தது; ஞான உபதேசத்திற்கு வராமலிருந்தது; பாடங்களை சரியாய்ப் படியாமலிருந்தது; வேலைகளைச் சரியாய்ச் செய்யாமற் போனது; குடும்பத்துக்கு சவரட்சணை செய்யாமற் போனது; புருஷன் தன் பெண் சாதியையும், பெண் சாதி தன் புருஷனையும் சிநேகியாமற் போனது.

ஆத்தும சோதனைக்குப் பின் செபம்

சர்வேசுரா சுவாமி! தேவரீர் அடியேனை உண்டாக்கிக் காப்பாற்றி வருகிறதும் அல்லாமல், நான் செய்த பாவ அக்கிரமங்களைப் போக்கும் படியாய் உமது ஏக திருக்குமாரன் தானே மானபங்கமாய் மரணமடையும் படிச் சித்தமானீரே, நான் என் பாவ அக்கிரமங்களையெல்லாம் முழுதும் அருவருத்து, அவைகளை என்றென்றைக்கும் விலக்கும்படி தயவு செய்தருளும். -ஆமென்.

சர்வேசுரா சுவாமி! தேவரீர் அளவில்லாத சகல நன்மை நிறைந்தவராய் இருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன்; உமக்குப் பொருந்தாத பாவங்களைச் செய்தேன் என்கிறதினால், மிகவுந் துக்கப்பட்டு மனஸ்தாபப்படுகிறேன். பின்னையும் தேவரீருடைய உதவியைக் கொண்டு இனி ஒருக்காலும் ஒரு பாவமும் செய்வதில்லையென்றும், இதுவரையிலும் நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் பண்ணுவேனென்றும் கெட்டியான பிரதிக்கினை செய்கிறேன். -ஆமென்.

பாவசங்கீர்த்தன முறை

குருவானவரிடத்தில் போய் முழங்காலிலிருந்து சிலுவை வரைந்து சுவாமி நான் பாவியாயிருக்கிறேன், என்னை ஆசீர்வதித்தருளும் என்றும், கடைசி விசை எப்போது பாவசங்கீர்த்தனஞ் செய்தது என்றும், முந்தின பாவசங்கீர்த்தனங்களில் எதையாவது மறைத்து அல்லது மறந்திருந்தால் அதையும் சொல்லி, அதன் பின் நீ கட்டிக் கொண்ட சாவான பாவங்களை ஒவ்வொன்றும் எத்தனை விசையென்றும் மற்ற அற்பப் பாவங்களையும் தாழ்ச்சியுடன் சுருக்கமாயும் தெளிவாயும் துக்கத்தோடு வெளிப்படுத்தி நான் இப்பொழுது சொன்ன பாவங்களுக்காகவும், என் ஆயுள் காலத்தில் நான் செய்த சகல பாவங்களுக்காகவும் விசேஷமாய், (இன்னின்ன) பாவங்களுக்காகவும் மனஸ்தாபப் படுகிறேன் என்று சொல்லுகிறது. குருவானவர் சொல்லுகிற புத்திமதிகளையும், அவர் கொடுக்கிற அபராதத்தையும் கவனமாய்க் கேட்டபின் உத்தம மனஸ்தாப மந்திரஞ் சொல்லி, குருவானவரின் ஆசீர்வாதத்தை சிலுவை அடையாளமிட்டு பெற்றுக்கொண்டு இடத்திற்குப் போய், சர்வேசுரன் பாவப் பொறுத்தல் கொடுத்ததற்காக நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செய்து, குருவானவர் கொடுத்த அபராதத்தைக் கூடிய மட்டும் உடனே தீர்க்கிறது.

மாலை ஜெபம்

(தொடக்க ஜெபங்கள் காலை ஜெபத்தில் உள்ளது போல். பக்கம் 39 முதல் 41 வரை)

முதல் : அர்ச் சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுரா.

எல் : பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்

பரிசுத்த ஆவி ஜெபம், திரிகால ஜெபம், (பாஸ்கு கால திரிகால ஜெபம்), காவல் சம்மனசுக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கும் ஜெபம்.

பாத்திமா தமதிரித்துவ ஆராதனை ஜெபம்

(நெற்றி தரையில் படும்படி தெண்டனிட்டு)

மகா பரிசுத்த திரித்துவமே! | பிதாவே, சுதனே பரிசுத்த ஆவியே | உம்மை மிகவும் ஆராதிக்கிறேன் | உலக மெங்கிலுமுள்ள | தேவ நற்கருணைப் பேழைகளிலிருக்கும் சேசு கிறிஸ்துநாதருடைய | விலை மதிக்கப்படாத | திருச்சரீரத்தையும் இரத்தத்தையும் | ஆத்துமத்தையும் தெய்வீகத்தையும் | அவருக்கு எதிராகச் செய்யப்படும் | நிந்தை, துரோகம், | அலட்சியத்துக்குப் பரிகாரமாக | உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் | சேசுவின் திரு இருதயத்தினுடையவும் | மரியாயின் மாசற்ற இருதயத்தினுடையவும் | அளவற்ற பேறுபலன்களைப் பார்த்து | நிர்ப்பாக்கியப் பாவிகளை | மனந்திருப்பும் படி மன்றாடுகிறேன். -ஆமென்

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

முதல் : சர்வேசுரா! சுவாமி என்னை ஒன்றுமில்லாதிருக்கையிலே ஒரு மனிதனாய் உண்டாக்கினீரே

எல் : சுவாமி, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது.

முதல் : நான் செய்த பாவங்களினாலே நரகத்துக்குப் போக கடன் உண்டாயிற்றே. அந்தக் கடனை என்னால் உத்தரிக்கக் கூடாதென்று தேவரீர் மனுஷனாகப் பிறந்து பாடுபட்டு உத்தரித்தீரே.

எல் : சுவாமி, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது.

முதல் : அந்தப் புண்ணிய பலன்களையெல்லாம் ஞானஸ்நானத்தின் வழியாய் எனக்குத் தந்தருளினீரே.

எல் : சுவாமி, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது.

முதல் : நான் ஞானஸ்நானம் பெற்றபிற்பாடு அநேக முறை பாவங்களைச் செய்தேனே, அந்தப் பாவங்களையெல்லாம் பாவசங்கீர்தனத்தின் வழியாகப் பொறுத்து என்னை நரகத்திலே தள்ளாமல் மோட்சத்துக்குப் போகிற வழியிலே நடத்திக் கொண்டிருக்கிறீரே.

எல் : சுவாமி, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது.

முதல் : நீர் இன்றைக்கு எண்ணிறந்த உபகாரங்களைச் செய்ததுமல்லாமல் பசாசு எனக்கு நினைத்திருந்த அநேக பொல்லாப்புகளையும் விலக்கினீரே.

எல் : சுவாமி, உமக்கே ஸ்தோத்திரம் உண்டாகக் கடவது.

முதல் : இன்றைய தினம் நாம் செய்த பாவங்களை நினைத்து உத்தம மனஸ்தாப மந்திரத்தை சொல்கிறது.

எல் : உத்தம மனஸ்தாப மந்திரம் (பக்கம் 47)

மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு தன்னை அர்ப்பணிக்கும் ஜெபம்
(நீல அணி அர்ப்பண ஜெபம் பக்கம் 42)

தேவ மாதாவுக்குத் தன்னை முழுதும் ஒப்புக் கொடுக்கும் ஜெபம்

என் மாதாவே! என் தாயாரே! என்னை முழுமையும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிறேன். தேவரீர் பேரில் அடியேன் வைத்த பக்தியைக் காண்பிக்கத்தக்கதாக, இன்றைக்கு என் கண் காதுகளையும், வாய் இருதயத்தையும், என்னை முழுமையும் தேவரீருக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கிறேன். என் நல்ல தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக்கிற படியினாலே, என்னை உம்முடைய உடமையாகவும், சுதந்திரப் பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும்.

என் மாதாவே! என் தாயாரே! நான் தேவரீருக்குச் சொந்தமாயிருக் கிறேனென்று நினைத்துக் கொள்ளும். என்னை உம்முடைய உடமையாகவும், சுதந்திரப்பொருளாகவும் ஆதரித்துக் காப்பாற்றியருளும் ஆமென்.

சேசு நாதருடைய பாடுகளின் தியானம்

சர்வேசுரா சுவாமி, நிகரில்லாத தயையினாலே உலகத்தை மீட்டு இரட்சிக்கிறதற்காக தேவரீர் மனுஷனாய்ப் பிறக்கவும் விருத்தசேதனப்படவும், யூதர்களால் புறக்கணிக்கப்படவும் குருத்துரோகியான யூதாசென்பவன் உம்மை முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்கப்படவும், தேவரீர் கயிறுகளினாலே கட்டுண்டு குற்றமில்லாத செம்மறியைப் போல பலிக்கு ஏவப்படவும், அன்னாஸ், கைப்பாஸ், பிலாத்து, ஏரோதன் என்கிற இவர்கள் அண்டைக்கு அவமானமாகக் கூட்டிக் கொண்டு போய்விடப்படவும், பொய்ச் சாட்களினாலே குற்றஞ் சாட்டப்படவும், திருக் கன்னத்தில் கைகளினாலேயும், திருமேனியில் கசைகளினாலேயும் அடிக்கப்படவும், திருமுகத்தில் துப்பப்படவும், தூஷணங்களினாலே நிந்திக்கப்படவும், முள்முடி தரிக்கப்படவும், மூங்கில் தடியால் அடிக்கப்படவும், திருமுகம் வஸ்திரத்தால்

முடிப்படவும், திருத்தோளின் பேரில் பாரமான சிலுவை மரத்தைச் சுமத்திக் கபால மலை மட்டும் கூட்டிக் கொண்டு போகப்படவும், திருச்சட்டை உரியப்படவும், இரும்பாணிகளினாலே அறையுண்டு இரண்டு கள்ளருக்கு நடுவில் சிலுவையோடு உயர்த்தப்படவும், தாகத்துக்கு பிச்சுக் கலந்த புளித்த காடியைக் குடிக்கக் கொடுக்கப்படவும், திருவிலாவானது ஈட்டியால் குத்தித் திறக்கப்படவும் திருவுளமானீரே. சுவாமி! பாவியாயிருக்கிற அடியேன் இவையெல்லாம் பக்தியோடே தியானிக்க அனுக்கிரகஞ் செய்தருளும். தேவரீருடைய இந்த நிர்ப்பந்தங்களையும், சிலுவையையும் திருமரணத்தையும் பார்த்து நரக வேதனையை விட்டகற்றி அடியேனை இரட்சித்து உம்முடைய வலது பாரிசத்தில் இருந்த பச்சாத்தாபக் கள்ளனுக்குத் தந்தருளின மோட்ச பாக்கியத்தில் அடியேனையும் கூட்டிக் கொண்டு போகக் கிருபை செய்தருளும் சுவாமி. பிதாவோடேயும் பரிசுத்த ஆவியோடேயும் சதாகாலஞ் சீவியருமாய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே. -ஆமென்.

நன் மரணங் கேட்கும் ஜெபம்

சேசு கிறிஸ்துநாதரே சுவாமி, தேவரீர் சிலுவையிலே அறையுண்டிருந்த பொழுது அளவில்லாத கஸ்தி நோவுகளை அனுபவித்தீரே. விசேஷமாய் உம்முடைய திரு ஆத்துமம் திருச்சரீரத்தை விட்டுப் பிரியும் பொழுது மிகுந்த துக்கத்தை அடைந்தீரே. அந்த துக்கத்தை பார்த்து பாவியாயிருக்கிற அடியேன் சாகிற தறுவாயிலே, உலகம் பிசாசு சரீரம் என்னும் சத்துருக்களாலே என் ஆத்துமத்திற்கு யாதொரு மோசம் வரவொட்டாமல் கிருபை பண்ணி இரட்சியும் சுவாமி.

பிதாவாகிய, சர்வேசுரா! தேவரீருக்கு உகந்த குமாரனுமாய் எங்களுக்குக் கர்த்தருமாயிருக்கிற சேசு கிறிஸ்துநாதர் எங்களுக்காக இத்தனைப் பாடுகளைப் பட்டாரே. அவருடைய திருமுகத்தைப் பார்த்து எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் சுவாமி.

அவஸ்தையாய் இருக்கிறவர்களுக்காக செபம்

கருணாம்பர சேசுவே! ஆத்துமங்களை நேசிக்கிறவரே, தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட அவஸ்தையையும், தேவரீருடைய மாசில்லாத திருத்தயார் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து இன்று தானே பூமியில் எங்கும் அவஸ்தையாய்க் கிடந்து சாகப்போகிற பாவிகளை தேவரீருடைய திரு இரத்தத்தினால் சுத்திகரித்தருளும்.

அவஸ்தைப்பட்ட சேசுகிறிஸ்துநாதருடைய திவ்விய இருதயமே, மரிக்கிறவர்கள் பேரில் இரக்கமாயிரும். -ஆமென்.

செபமாலை

முதல் : சர்வேசுரா! எங்களுக்கு உதவியாக வாரும்.

எல் : கர்த்தாவே! எங்களுக்கு ஒத்தாசை செய்ய தீவிரியும்.

முதல் : பிதாவுக்கும் சுதனுக்கும் ....

எல் : ஆதியில் இருந்தது போல ....

முதல் : அளவில்லாத சகல நன்மை சுரூபியாயிருக்கிற சர்வேசுரா சுவாமி, நீச மனிதருமாய் நன்றியறியாத பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் மட்டில்லாத மகிமைப் பிரதாபத்தைக் கொண்டிருக்கிற தேவரீருடைய திருச் சந்நிதியிலேயிருந்து ஜெபம் பண்ண பாத்திரமாகாதவர்களாய் இருந்தாலும், தேவரீருடைய அளவில்லாத தயவை நம்பிக் கொண்டு, தேவரீருக்கு ஸ்துதி வணக்கமாகவும் அர்ச்சிஷ்ட தேவமாதாவுக்கு ஸ்தோத்திரமாகவும் ஐம்பத்து மூன்று மணிச் செபம் பண்ண ஆசையாயிருக்கிறோம். இந்த ஜெபத்தைப் பக்தியோடே செய்து பராக்கில்லாமல் முடிக்க தேவரீருடைய ஒத்தாசையைக் கட்டளை பண்ணியருளும் சுவாமி.

(செபமாலை பாடுபட்ட சுரூபத்தை முத்திசெய்து கையில் பிடித்துக் கொண்டு)

சகலமான புண்ணியங்களுக்கும் விசுவாசம் என்கிற புண்ணியம் அஸ்திவாரமாய் இருக்கிற படியினாலே முந்த முந்த விசுவாச மந்திரம் சொல்லுகிறது. (பக் 45)

(பெரிய மணியில்)

மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனிதனும் ஒன்றாயிருக்கிற சேசுநாதர் சுவாமி படிப்பித்த பரலோக மந்திரம் சொல்லுகிறது.

(மூன்று சிறிய மணிகளிலும்)

பரிசுத்த கன்னிமாஸ்திரியாயிருக்கிற தேவமாதாவினுடைய பிரதான மகிமைகளைக் குறித்து மூன்று பிரதான புண்ணியங்களைக் கேட்கிற வகையாவது :

பிதாவாகிய சர்வேசுரனுக்குக் குமாரத்தியாயிருக்கிற பரிசுத்த தேவ மாதாவே, எங்களிடத்திலே தேவ விசுவாசம் என்கிற புண்ணியம் உண்டாகிப் பலன் அளிக்கும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக் கொள்ளும்.

-ஒரு அரு. மந்.

சுதனாகிய சர்வேசுரனுக்குத் தாயாராயிருக்கிற பரிசுத்த தேவ மாதாவே, எங்களிடத்திலே தேவ நம்பிக்கை என்கிற புண்ணியம் உண்டாகி வளரும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். -ஒரு அரு. மந்.

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுக்கு மிகவும் பிரியமுள்ளவராயிருக்கிற பரிசுத்த தேவ மாதாவே, எங்களிடத்திலே தேவ சிநேகம் என்கிற புண்ணியம் உண்டாகி அதிகரிக்கும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். -ஒரு அரு. மந்.

பிதாவுக்கும் சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியிலே இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. -ஆமென்.

(இதன் பின் ஒவ்வொரு தேவ இரகசியத்தையும் சொல்லி ஒவ்வொன்றுக்கும் ஒரு பர. மந்., 10அரு. மந்திரம், திரித்துவ தோத்திரம் சொல்லவும்.)

ஒவ்வொரு பத்து மணி முடிவிலும்

ஓ என் சேசுவே எங்கள் பாவங்களை மன்னியும், நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றும். எல்லா ஆன்மாக்களையும் விசேஷமாய் உமது இரக்கம் யார் யாருக்கு அதிக தேவையோ அவர்களையும் மோட்சத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்தருளும்.

சந்தோஷ தேவ இரகசியங்கள்

1. கபிரியேல் சம்மனசானவர் தேவ மாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னதைத் தியானிப்போமாக.
2. தேவ மாதா எலிசபெத்தம்மாளைச் சந்தித்ததைத் தியானிப்போமாக.
3. கர்த்தர் பிறந்ததைத் தியானிப்போமாக.
4. சேசு கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டதைத் தியானிப்போமாக.
5. பன்னிரண்டு வயதில் காணாமல் போன சேசுவை தேவாலயத்தில் கண்டு களி கூர்ந்ததைத் தியானிப்போமாக.

துக்க தேவ இரகசியங்கள்

1. சேசுநாதர் சுவாமி பூங்காவனத்தில் இரத்த வேர்வை வியர்த்ததைத் தியானிப்போமாக.
2. சேசுநாதர் சுவாமி கல்தூணில் கட்டுண்டு அடிக்கப்பட்டதைத் தியானிப்போமாக.
3. சேசுநாதர் சுவாமி திரு சிரசில் முள்முடி சூட்டப்பட்டதைத் தியானிப்போமாக.
4. சேசுநாதர் சுவாமி சிலுவை சுமந்து கொண்டு போனதைத் தியானிப்போமாக.
5. சேசுநாதர் சுவாமி சிலுவையில் அறையப்பட்டு மரித்ததைத் தியானிப்போமாக.

மகிமை தேவ இரகசியங்கள்

1. சேசுநாதர் சுவாமி மரித்த மூன்றாம் நாள் உயிர்த்து எழுந்ததைத் தியானிப்போமாக.
2. சேசுநாதர் சுவாமி உயிர்த்த நாற்பதாம் நாள் பரலோகத்துக்கு ஆரோகணமானதைத் தியானிப்போமாக.
3. தேவ மாதா பேரிலும் அப்போஸ்தலர்கள் பேரிலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததைத் தியானிப்போமாக.
4. தேவ மாதா ஆத்தும சரீரத்தோடு மோட்சத்துக்கு ஆரோபணமானதைத் தியானிப்போமாக.
5. தேவ மாதா பரலோக பூலோக இராக்கினியாய் அர்ச்சிஷ்ட தமதிரித்துவத்தினால் முடி சூட்டப்பட்டதைத் தியானிப்போமாக.

முடிவு ஜெபம்

அதிதூதரான அர்ச். மிக்கேலே, தேவ தூதர்களான அர்ச். கபிரியேலே, இரபாயேலே, அப்போஸ்தலர்களான அர்ச். இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே நாங்கள் எத்தனைப் பாவிகளாயிருந்தாலும், நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்று மணிச் செபத்தையும் உங்கள் தோத்திரங்களோடே ஒன்றாகக் கூட்டி அர்ச். தேவ மாதாவின் திருப்பாதத்திலே பாத காணிக்கையாக வைக்க உங்களைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். பர. அரு. திரி.

ஜெபமாலையை ஒப்புக் கொடுத்தல்

முதல் : பரிசுத்த பாப்பரசருடைய கருத்துக்களுக்காகவும், உலக சமாதானத்துக்காகவும், பாவிகள் மனந்திரும்பவும், சேசு மரிய இருதயங்களுக்கு நிந்தைப் பரிகாரமாகவும் இந்த ஜெபமாலையை ஒப்புக் கொடுத்து வேண்டிக் கொள்வோம்.

(மூன்று முறை அருள் நிறைந்த மந்திரம்)

தேவ மாதாவின் பிரார்த்தனை

சுவாமி, கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, கிருபையாயிரும்.

சுவாமி, கிருபையாயிரும்.

கிறிஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறிஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி.
உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,
எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி.
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா,
எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி.
அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,
எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி.
அர்ச். மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே, *
கன்னியர்களுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,
கிறீஸ்துவினுடைய மாதாவே,
திருச்சபையினுடைய மாதாவே,
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே,
மகா பரிசுத்த மாதாவே,
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,
பழுதற்ற கன்னியாயிருக்கிற மாதாவே,
கன்னி சுத்தங்கெடாத மாதாவே,*
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,
ஆச்சரியத்துக்குரிய மாதாவே,
நல்ல ஆலோசனை மாதாவே,
சிருஷ்டிகருடைய மாதாவே,
இரட்சகருடைய மாதாவே,
மகா புத்தியுடைத்தான கன்னிகையே,
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,
சக்தியுடையவராயிருக்கிற கன்னிகையே,
தயையுள்ள கன்னிகையே,
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,
தருமத்தினுடைய கண்ணாடியே,
ஞானத்துக்கு இருப்பிடமே,
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,
ஞானப் பாத்திரமே,
மகிமைக்குரிய பாத்திரமே,
அத்தியந்த பக்தியுடைத்தான பாத்திரமே
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோஜா என்கிற புஷ்பமே.

தாவீது ராஜாவுடைய உப்பரிகையே,
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,
சொர்ணமயமாயிருக்கிற ஆலயமே,
வாக்குத்தத்தத்தின் பெட்டியே,
பரலோகத்திலுடைய வாசலே,
விடியற்காலத்தின் நட்சத்திரமே,
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,
பாவிகளுக்கு அடைக்கலமே,
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,
கிறிஸ்தவர்களுடைய சகாயமே,
சம்மனசுக்களுடைய இராக்கினியே,
பிதாபிதாக்களுடைய இராக்கினியே,
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,
வேத சாட்சிகளுடைய இராக்கினியே,
ஸ்துதியர்களுடைய இராக்கினியே,
கன்னியர்களுடைய இராக்கினியே,*
சகல அர்ச்சிஷ்டவர்களுடைய இராக்கினியே,
ஜென்மப் பாவம் இல்லாமல் உற்பவித்த இராக்கினியே,
பரலோகத்துக்கு ஆரோபணமான இராக்கினியே,
திருச் செபமாலையின் இராக்கினியே,
குடும்பத்தினுடைய இராக்கினியே,
சமாதானத்தின் இராக்கினியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

–எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

–எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

–எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி!

சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே

சர்வேசுரனுடைய அர்ச்சிஷ்ட மாதாவே! இதோ உம்முடைய சரணமாக ஓடிவந்தோம்; எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமாய் இராதேயும். ஆசீர்வதிக்கப்பட்டவருமாய்

மோட்சமுடைய வாசலுமாயிருக்கிற நித்திய கன்னிகையே! சகல ஆபத்துக்களிலேயும் நின்று எங்களைக் தற்காத்துக் கொள்ளும்.

முதல் : சேசுகிறீஸ்து நாதருடைய திருவாக்குத் தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமாயிருக்கத்தக்கதாக.

எல் : சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

ஜெபிப்போமாக

சுவாமி! முழு மனதோடே தெண்டனாக விழுந்து கிடக்கிற இந்தக் குடும்பத்தைப் பார்த்து எப்பொழுதும் பரிசுத்த கன்னிகையான முத்திப் பேறுபெற்ற மரியாயுடைய வேண்டுதலினாலே, சகல சத்துருக்களின் சற்பனையிலே நின்று பிரசன்னராய்த் தயை செய்து இரட்சியும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுகிறீஸ்து நாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

மிகவும் இரக்கமுள்ள தாயே!

முதல் : மிகவும் இரக்கமுள்ள தாயே!

எல் : உமது அடைக்கலமாக ஓடிவந்தோம். உம்முடைய உபகார சகாயங்களை இரந்து, உம்முடைய மன்றாட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவனாகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகத்தில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை யென்று நினைத்தருளும். கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே, தயையுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உம்முடைய திருப்பாதத்தை அண்டி வருகிறோம். பெருமூச்செறிந்து அழுது பாவிகளாயிருக்கிற நாங்கள் உமது தயாளத்துக்குக் காத்துக்கொண்டு உமது சமுகத்திலே நிற்கிறோம். அவதரித்த வார்த்தையின் தாயே, எங்கள் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க் கேட்டுத் தந்தருளும். ஆமென்.

பாவிகளுக்கு அடைக்கல ஜெபம்

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே, பாவிகளுக்கு அடைக்கலமே, இதோ உம்முடைய அடைக்கலமாய் ஓடி வந்தோம். எங்கள் பேரில் இரக்கமாயிருந்து எங்களுக்காக உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ளும். அருள் நிறைந்த மந்திரம். (மூன்று முறை சொல்லவும்)

சேசுநாதருடைய திரு இருதயத்தின் ஜெபமாலை

கிறீஸ்துவினுடைய ஆத்துமமானதே, I என்னை அர்ச்சிஷ்டவனாகச் செய்தருளும், I கிறீஸ்துவின் திருச்சரீரமே, I என்னை இரட்சித்துக் கொள்ளும்.I

கிறீஸ்துவின் திரு இரத்தமே, | எனக்குத் திருப்தி உண்டாகப் பண்ணியருளும். | கிறீஸ்துவின் விலாவில் நின்று ஓடிவந்த திருத்தண்ணீரே, | என்னைக் கழுவியருளும். | கிறீஸ்துவினுடைய திருப்பாடுகளே, | எனக்குத் தேற்றரவு உண்டாகப் பண்ணியருளுங்கள். | ஓ நல்ல சேசுவே! | நான் கேட்கிறதைத் தந்தருளும். | உம்முடைய திருக்காயங்களுக்குள்ளே | என்னை மறைத்துக் கொள்ளும். | என்னை உம்மைவிட்டுப் பிரியவிடாதேயும். | துஷ்ட சத்துருக்களிடத்தில் நின்று | என்னை இரட்சித்துக் கொள்ளும். | என் மரண தருவாயில் | நீர் என்னை அழைத்து | உம்முடைய சந்நிதியில் உட்பட்ட | சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு கூட | நான் உம்மை வாழ்த்துகின்ற காலம் | தோத்திரம் பண்ணும்படிக்கு | அடியேன் உம்முடைய சந்நிதியில் வரக்கற்பித்தருளும். | - ஆமென்.

பெரிய மணியில் : முதல் : இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே
எல் : எங்கள் இருதயம் உம்முடைய திரு இருதயத்தைப் போலாகும்படிக் கிருபை செய்தருளும்.

சிறு மணியில் : முதல் : சேசுவின் மதுரமான திரு இருதயமே
எல் : என் சிநேகமாயிரும்.

பத்துமணி முடிந்த பின் முதல் : மரியாயின் மதுரமான இருதயமே
எல் : என் இரட்சணியமாயிரும்.

(பலன்: இச்செபமாலையைச் செபிக்கிறவர்கள் ஒவ்வொருமுறையும் 300 நாள் பலனுண்டு)

ஒவ்வொரு பத்துமணியின் பொருளும், சொல்லப்பட வேண்டிய கருத்து:

1-ம் பத்துமணி - அஞ்ஞானிகள், பதிதர் முதலிய வேத விரோதிகளால் அவருக்குண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

2-ம் பத்துமணி - பொல்லாத கிறீஸ்தவர்களால் அவருக்குண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

3-ம் பத்துமணி - நாம்தாமே அவருக்கு உண்டாக்கும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக.

4-ம் பத்துமணி - சகல மனிதராலும் அவருக்கு உண்டாகும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக, பரிசுத்த தேவமாதா, சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய சிநேகப் பற்றுதலோடு, நாமும் நம்முடைய இருதயத்தை ஒப்புக் கொடுப்போம்.

5-ம் பத்துமணி - சேசுவின் திரு இருதயமே நாங்களும் மற்றவர்களும், உம்மை அறிந்து அதிகமதிகமாய்ச் சிநேகிக்கும்படிக்கு அநுக்கிரகம் செய்தருளும்.

ஐம்து மணி முழந்த பின்

சேசுவின் திரு இருதயமே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்.

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயின் மாசற்ற இருதயமே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

திரு இருதயத்தின் மாதாவே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
சேசுநாதருடைய திரு இருதயமானது, எங்கும் சிநேகிக்கப் படுவதாக.
என் சேசுவே! இரக்கமாயிரும்.

திரு இருதயத்தின் சிநேகிதராகிய அர்ச். சூசையப்பரே!
எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

சேசுநாதருடைய திரு இருதயத்திற்கு குடும்பங்களை ஒப்புக் கொடுக்கும் ஜெபம்

சேசுவின் திரு இருதயமே! கிறிஸ்தவக் குடும்பங்களுக்குத் தேவரீர் செய்து வரும் சகல உபகாரங்களையும், சொல்ல முடியாத உமது நன்மைத் தனத்தையும் நினைத்து நன்றியறிந்த பட்சத்தோடு உமது திருபாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து கிடக்கிறோம்.

நேசமுள்ள சேசுவே! எங்கள் குடும்பங்களிலுள்ள சகலரையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். தேவரீர் எங்களை ஆசீர்வதித்து, இப்போதும் எப்போதும் உமது திருஇருதய நிழலில் நாங்கள் இளைப்பாறச் செய்தருளும்.

தவறி எங்களில் எவனாவது உமது திரு இருதயத்தை நோகச் செய்திருந்தால் அவன் குற்றத்துக்கு நாங்களே நிந்தைப் பரிகாரம் செய்கிறோம். உமது திரு இருதயத்தைப் பார்த்து எங்கள் பரிகாரத்தை ஏற்றுக் கொண்டு அவனுக்குக் கிருபை செய்தருளும்.

இதுவுமின்றி உலகத்திலிருக்கும் சகல குடும்பங்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். பலவீனர்களுக்குப் பலமும் விருத்தாப்பியருக்கு ஊன்றுகோலும், விதவைகளுக்கு ஆதரவும், அனாதைப் பிள்ளைகளுக்குத் தஞ்சமுமாயிருக்க தயை புரியும். ஒவ்வொரு வீட்டிலும் நோயாளிகள், அவஸ்தைப்படுகிறவர்கள் தலைமாட்டில் தேவரீர் தாமே விழித்துக் காத்திருப்பீராக.

சேசுவின் இரக்கமுள்ள திரு இருதயமே! சிறு பிள்ளைகளை நீர் எவ்வளவோ பட்சத்தோடு நேசித்தீரே. இந்த விசாரணையிலுள்ள சகல பிள்ளைகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களை ஆசீர்வதியும். அவர்களுடைய இருதயத்தில் விசுவாசத்தையும் தெய்வ பயத்தையும் வளரச் செய்யும். ஜீவிய காலத்தில் அவர்களுக்கு அடைக்கலமாகவும் மரண சமயத்தில் ஆறுதலாகவும் இருக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.

திவ்விய சேசுவே! முறை முறையாய் உமது திருசிநேகத்தில் ஜீவித்து மரித்து நித்திய காலமும் எங்கள் குடும்பம் முழுவதும் உம்மோடு இளைப்பாறக் கிருபை புரிந்தருளும். -ஆமென்

சேசுவின் திரு இருதயத்தின் பிரார்த்தனை

(வெள்ளிக் கிழமைகளில்)

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்
பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா
- எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா
- எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா
- எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
அர்ச். தமத்திரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா
- எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி

1-நித்திய பிதாவின் சுதனாகிய சேசுவின் திவ்விய இருதயமே * எங்களைத்......

2-அர்ச். கன்னித் தாயின் உதரத்திலே இஸ்பிரீத்து சாந்துவினால் உருவான சேசுவின் திவ்விய இருதயமே * எங்களைத்......

3-தேவ வார்த்தையான சுதனோடு ஒரே பொருளாய் ஒன்றித்திருக்கும் சேசுவின் திவ்விய இருதயமே * எங்களைத்......

4-அளவற்ற மகத்துவப் பிரதாபம் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே *

5-சர்வேசுரனுடைய அர்ச்சிக்கப்பட்ட ஆலயமாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

6-அதி உந்நத ஆண்டவரின் வாசஸ்தலமான சேசுவின் திவ்விய இருதயமே *

7-சர்வேசுரனுடைய வீடும் மோட்சத்தின் வாசலுமான சேசுவின் திவ்விய இருதயமே *

8-சிநேக அக்கினி சுவாலித்தெரியும் சூளையான சேசுவின் திவ்விய இருதயமே *

9-நீதியும் சிநேகமும் தங்கியிருக்கும் இல்லிடமாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

10-தயாளமும் சிநேகமும் நிறைந்த சேசுவின் திவ்விய இருதயமே *

11-சகல புண்ணியங்களும் சம்பூரணமாய் நிறையப் பெற்ற சேசுவின் திவ்விய இருதயமே *

12-எவ்வித ஸ்துதி புகழ்ச்சிக்கும் முற்றும் உரிய சேசுவின் திவ்விய இருதயமே *

13-இருதயங்களுக்கெல்லாம் அரசும் அவைகளின் மத்திய ஸ்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

14-ஞானமும் அறிவும் நிறைந்த பூரண பொக்கிஷமாகிய சேசுவின் திவ்விய இருதயமே*

15-தெய்வத்துவ சம்பூரணம் தங்கி வாசம் செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே *

16-உமது பிதாவுக்கு உகந்த பிரிய நேசமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே *

17-உம்மிடத்தில் நிறைந்திருக்கும் நன்மைகளை நாங்கள் அனைவரும் பெற்று மகிழச் செய்யும் சேசுவின் திவ்விய இருதயமே *

18-நித்திய சிகரங்களின் ஆசையாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

19-பொறுமையும் மிகுந்த தயாளமுமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே *

20-உம்மை மன்றாடிப் பிரார்த்திக்கும் சகலருக்கும் சம்பூரணங் கொடுக்கும் தாராளமுள்ள சேசுவின் திவ்விய இருதயமே *

21-ஜீவியத்திற்கும் அர்ச்சிஷ்டதனத்திற்கும் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

22-எங்கள் பாவங்களின் மன்னிப்புக் கேற்ற பரிகாரமான சேசுவின் திவ்விய இருதயமே*

23-நிந்தை அவமானங்களால் நிறைந்து மிகுந்த சேசுவின் திவ்விய இருதயமே *

24-எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நொந்து வருந்தின சேசுவின் திவ்விய இருதயமே*

25-மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்த சேசுவின் திவ்விய இருதயமே *

26-ஈட்டியால் குத்தி ஊடுருவப்பட்ட சேசுவின் திவ்விய இருதயமே *

27-சர்வ ஆறுதலின் ஊற்றாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

28-எங்கள் ஜீவனும் உத்தானமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

29-எங்கள் சமாதானமும் ஒற்றுமைப் பந்தனமுமாகிய சேசுவின் திவ்விய இருதயமே*

30-பாவங்களின் பலியான சேசுவின் திவ்விய இருதயமே *

31-உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்களுடைய இரட்சணியமாகிய சேசுவின் திவ்விய இருதயமே *

32-உம்மிடத்தில் மரிக்கிறவர்களின் நம்பிக்கையாகிய சேசுவின் திவ்விய இருதயமே*

33-சகல அர்ச்சிஷ்டவர்களின் ஆனந்தமாகிய சேசுவின் திவ்விய இருதயமே*

* எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே -எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே -எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே -எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

முதல் : இருதயத்தில் தாழ்ச்சியும் சாந்தமுமுள்ள சேசுவே!

எல் : எங்கள் இருதயம் உம்முடைய திரு இருதயத்தைப் போலாகும்படிக் கிருபை செய்தருளும்.

செபிப்போமாக

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா, உமக்கு மிகவும் பிரிய குமாரனுடைய இருதயத்தையும், அவர் பாவிகள் பேரால் உமக்குச் செலுத்தின பரிகாரத்தையும் ஸ்துதி புகழ்ச்சியையும் கிருபையாய்ப் பார்த்தருளும் சுவாமி. உமது இரக்கத்தை மன்றாடிக் கேட்பவர்களுக்குத் தேவரீர் இரங்கி மன்னிப்புக் கொடுத்தருளும். இந்த மன்றாட்டுகளை எல்லாம் தேவரீரோடும் பரிசுத்த ஆவியோடும் சுயஞ்சீவியராய் சதாகாலமும் இராச்சிய பரிபாலனஞ் செய்யும் உமது திவ்ய குமாரன் சேசு கிறிஸ்துநாதர் பெயரால் எங்களுக்குத் தந்தருளும் சுவாமி. ஆமென்

அர்ச். சூசையப்பரைக் குறித்து ஜெபம்

மகா பாக்கியம் பெற்ற அர்ச்சிஷ்ட சூசையப்பரே! எங்களுடைய துன்பவேளையில் உமது பரிசுத்த பத்தினியின் உதவியை இரந்து மன்றாடின பின்பு, உமது பாதுகாவலையும், நம்பிக்கையோடு தேடி வருகிறோம். தேவதாயாரான ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்த அர்ச்சிஷ்ட கன்னி மரியாயிடத்தில் உமக்குள்ள சிநேகத்தின் பேராலும், திவ்விய குழந்தை சேசுநாதருக்கு நீர் காண்பித்த தந்தையின் அன்பைக் குறித்தும், உம்மிடத்தில் நாங்கள் கேட்கும் மன்றாட்டு ஏதென்றால் ...... சேசு கிறிஸ்துநாதர் தமது விலைமதியாத இரத்தத்தால் சம்பாதித்த சுதந்திரத்தைத் தேவரீர் கிருபையாய் பார்க்கவும் எங்கள் இக்கட்டிலே உமது பலமுள்ள ஒத்தாசையால் துணையாயிருக்கவும் மன்றாடுகிறோம்.

ஓ! திவ்விய குடும்பத்தை உத்தம ஞானத்தோடு நடத்தி வந்த கைத்தாதையே! சேசு கிறிஸ்துநாதர் தம்முடையவர்களாகத் தெரிந்துகொண்ட சனங்களைப் பராமரித்தருளும். ஓ! மிகவும் அன்பு நிறைந்த எங்கள் தகப்பனே! நாங்கள் எவ்வித தப்பிதத்திலும், கேட்டிலும் விழாதபடி எங்களைக்

காப்பாற்றும். ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே! நரக சத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்திலே! நீர் மோட்ச சிம்மாசனத்திலிருந்து கிருபையாய் எங்களைப் பார்த்துத் துணையாய் வருவீராக.

திவ்விய பாலகன் முன்னாள் சாவின் ஆபத்துக்குத் தப்பித்துக் கொள்ளும்படி தேவரீர் எவ்விதம் ஏதுவாயிருந்தீரோ, அவ்விதமே சர்வேசுரனுடைய திருச்சபையையும், பசாசின் வலையிலும் எவ்வித ஆபத்திலும் இருந்து பாதுகாத்தருளும். உமது பாதுகாவல் இடைவிடாமல் என்றும் இருக்கக்கடவது. உமது புண்ணிய மாதிரிகையாலும், உம்முடைய உதவியின் துணையாலும், நாங்கள் எல்லோரும் பரிசுத்தமாய் ஜீவித்து, பக்தியாய் மரித்துப் பரகதியின் முடிவில்லாப் பாக்கியம் பெற்று வாழும்படிக் கிருபை செய்ய மன்றாடுகிறோம். -ஆமென்

அர்ச். சூசையப்பர் பிரார்த்தனை

(புதன் கிழமைகளில்)

சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்
கிறிஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்
பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா!
-எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா !
-எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா
-எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா
-எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி
அர்ச். மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
அர்ச். சூசையப்பரே
தாவீது இராஜாவின் கீர்த்தி பெற்ற புத்திரரே
பிதா பிதாக்களின் மகிமையே
தேவ தாயாரின் பத்தாவே
கன்னிமரியாயின் கற்புள்ள காவலரே
தேவகுமாரனை வளர்த்த தகப்பனாரே
கிறிஸ்துநாதரை உற்சாகப் பற்றுதலுடன் காப்பாற்றினவரே
திருக்குடும்பத்தின் தலைமையானவரே

உத்தம நீதிமானான அர்ச். சூசையப்பரே
உத்தம விரத்தரான அர்ச். சூசையப்பரே
உத்தம விவேகமுடைத்தான அர்ச். சூசையப்பரே
உத்தம தைரியசாலியான அர்ச். சூசையப்பரே
உத்தம கீழ்ப்படிதலுள்ளவரான அர்ச். சூசையப்பரே
உத்தம பிரமாணிக்கமுள்ளவரான அர்ச். சூசையப்பரே
பொறுமையின் கண்ணாடியே
தரித்திரத்தின் அன்பரே
தொழிலாளிகளுக்கு மாதிரிகையே
குடும்ப வாழ்க்கையின் ஆபரணமே
கன்னிகைகளின் காவலரே
குடும்பங்களுக்கு ஆதாரமே
கஷ்டப்படுகிறவர்களுக்கு ஆறுதலே
வியாதிக்காரர்களுக்கு நம்பிக்கையே
மரிக்கிறவர்களுக்குப் பாதுகாவலே
பேய்களை நடுநடுங்கச் செய்பவரே
பரிசுத்த திருச்சபையின் பரிபாலகரே
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற . . . மற்றதும்

முதல் : கர்த்தர் அவரைத் தமது வீட்டின் எஜமானாக ஏற்படுத்தினார்
துணை: அவருடைய உடமைகளை எல்லாம் நடப்பிக்கவும் ஏற்படுத்தினார்.

ஜெபிப்போமாக

சர்வேசுர சுவாமி உம்முடைய மகா அர்ச்சிஷ்ட திருமாதாவின் பரிசுத்த பத்தாவாக முத்தரான சூசையப்பரை மனோவாக்குக் கெட்டாத பராமரிக்கையால் தெரிந்துகொள்ளத் திருவுளமானீரே! பூலோகத்தில் அடியோர்களை ஆதரிக்கிறவரென்று எங்களால் வணங்கப்படுகிற அவர் பரலோகத்தில் எங்களுக்காக மனுப் பேசுகிறவராய் இருக்கும்படிக்கு நாங்கள் பாத்திரவான்கள் ஆகத்தக்கதாக தேவரீர் அநுக்கிரகம் செய்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம். பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் சதா காலம் சீவியருமாய் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே. ஆமென்

ஜெபத்தை முடிக்கும் வகை

முதல் : உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் நித்திய இளைப்பாற்றி யடையும்படியாக வேண்டிக் கொள்வோம்.

எல் : 1 பர. 1 அரு. 1 திரி.

முடிவு ஜெபம்

முதல் : தேவ வரப்பிரசாதத்தின் தாயே! இரக்கத்துக்கு மாதாவே! அர்ச். மரியாயே! எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும், மரண நேரத்திலேயும், உமது திருக்குமாரனை வேண்டி, எங்களைக் காக்கவும், ஆளவும் கைக்கொண்டு நடத்தவும் வேண்டுமென்று உமது திருப்பாதம் முத்தி செய்து உம்மை மன்றாடுகிறோம். – ஆமென்.

எல் : நித்திய ஸ்துதிக்குரிய ....

முதல் : அர்ச். சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக்களிடமிருந்து எங்களை இரட்சித்தருளும் எங்கள் சர்வேசுரா.

எல் : பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென்
கிறிஸ்து இராஜா வாழ்க! அவருடைய இராச்சியம் வருக!

இரவு ஜெபம்

(நித்திரைக்குச் செல்லும் போது சொல்லத் தகும் ஜெபம்)

அர்ச். சிலுவை .... மற்றதும்

என் சர்வேசுரா சுவாமி! உம்மை நான் ஆராதிக்கிறேன். என் முழு இருதயத்தோடு உம்மை நான் சிநேகிக்கிறேன். என்னை சிருஷ்டித்து, கிறீஸ்தவனாக்கி இந்த நாளில் என்னைக் காப்பாற்றினதற்காக நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். என் கிரியைகளை எல்லாம் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இந்த இராத்திரியிலே என்னைப் பாவமில்லாமல் காப்பாற்றி, சகல தின்மையிலே நின்று என்னை இரட்சித்துக் கொள்ள வேண்டுமென்று உம்மைப் பிரார்த்திக்கிறேன். ஆமென்.

பரலோக மந்திரம்
அருள் நிறைந்த மந்திரம்
விசுவாச மந்திரம். (பக்கம் 46)

ஜெபிப்போமாக

சர்வ சக்தியுடையவரும் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா! முத்திப்பேறுபெற்ற கன்னித்தாயான மரியாயினுடைய ஆத்துமமும், சரீரமும் இஸ்பிரீத்து சாந்துவின் அனுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்கு யோக்கியமான பீடமாயிருக்க ஏற்கனவே நியமித்தருளினீரே, அந்த திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவருடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே இம்மையின் சகல பொல்லாப்புக்களிலேயும் நின்று இரட்சிக்கும் படிக்குக் கிருபை கூர்ந்தருளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய

திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.
காவல் சம்மனசானவருக்கு செபம் . . . . (41-ம் பக்கம் பார்க்கவும்)

தேவ மாதாவைப் பார்த்து மன்றாட்டு

என் நேசத் தாயாரே! நான் உம்மை வாழ்த்தக் கிருபை செய்தருளும். (மூன்று தரம்)

பரிசுத்த கன்னிகையான என் நேசத் தாயாரே என் ஆத்துமத்தை இரட்சித்துக் கொள்ள எனக்கு உதவி செய்தருளும். அருள் நிறைந்த மந்திரம்.

(கடைசியில் பிதாவுக்கும் சுதனுக்கும் . . . . . .)

நமது சிரேஷ்டர்களுக்காகவும், அன்னிய தேச வேத போதகர்களுக்காகவும், ஒரு பர. அரு. திரி. வேண்டிக் கொள்ளுதல்.

என் சேசுவே! இரக்கமாயிரும்.

அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

அர்ச். தோமையாரே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

எங்கள் பெயர் கொண்ட அர்ச்சிஷ்டவர்களே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

ஆத்தும சோதனை ஆயத்த செபம்

நான் இன்று கட்டிக்கொண்ட பாவங்களை எல்லாம், என் நினைவிலே வரவும், அவைகளுக்காக நான் மெய்யான மனஸ்தாபப்படவும், உம்முடைய ஒத்தாசையைக் கட்டளை பண்ணியருளும் சுவாமி.

(சிறிது நேரம் ஆத்தும சோதனை செய்தல்)

(உத்தம மனஸ்தாப மந்திரம் பக்கம் 47)

சேசு மரிய சூசையே, என் ஆத்துமத்தையும், சரீரத்தையும், உங்கள் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்.

சேசு மரிய சூசையே, என் கடைசி மரண நேரத்தில், எனக்கு உதவி செய்தருளுங்கள்.

சேசு மரிய சூசையே, என் ஆத்துமம், சமாதான ஐக்கியமாய் என் உடலைவிட்டுப் பிரியக்கடவது.

அர்ச். சிலுவை . . . மற்றதும்.

❖❖❖❖❖

பரிகார முழு இரவு ஆராதனை

முதல் சனி பக்தி முயற்சியின் வழிபாட்டுச் சடங்குகள்

முதல் பாகம்

(முதல் சனி பக்தி அனுசரிக்க வரும் பக்தர்கள் தங்களுக்கு வசதியான நேரத்தில் தேவாலயத்தில் வந்து ஜெபம் ஆரம்பித்து, மாதா சுருபத்துடன் பரிகார கெபிக்குப் பவனியாகச் சென்று முதல் சனி நிகழ்ச்சியின் முதல் பாகத்தை நடத்துவார்கள்)

நிகழ்ச்சி : 1

பவனியும் ஆன்மீகத் தயாரிப்பும்

தேவாலயத்தில் : பரிசுத்த ஆவிக்குப் பாடல். (Veni Creator Spiritus)

வாரும் சிருஷ்டிகர்	**வேனி, க்ரேயாத்தோர்**
வாரும் சிருஷ்டிகர் ஸ்பிரித்துஸ் வந்தெம் முள்ளம் வீற்றிருந்து தாரும் பேரின்ப வரங்கள் உந்தன் சிருஷ்டியாம் எங்கட்கு	வேனி, க்ரோயாத்தோர் ஸ்பீரீத்துஸ், மெந்தெஸ் தூவோரும் விஸித்தா, இம்ப்ளே சூப்பெர்னா கிராத்ஸியா க்வே தூ க்ரேயாஸ்தி பெக்தோரா
தேற்றரவாளர் ஆனவர் தேவனின் கொடை, நீரன்றோ தேவஸ்நேக ஊற்றாகிய தேவாபிஷேக நாயகர்,	க்யி தீச்செரிஸ் பாராக்ளித்துஸ் ஆல்த்திஸ்ஸிமி தோனும் தேயி, fவோன்ஸ் வீவுஸ், இஞ்ஞிஸ், காரித்தாஸ் எத் ஸ்பீரீத்தாலீஸ் உங்க்ஸியோ
நல்ல தேவனின் கைவிரல் நல்கிய கொடை, ஏழினால் வல்ல பிதா வாக்குத்தத்தம் சொல்ல எம் நாவுக்கருள்வீர்.	தூ செப்த்தி fபோர்மிஸ் மூனெரே, திக்(ஜி)த்துஸ் பாத்தெர்னே தெக்ஸ்தேரே, தூ ரீத்தே ப்ரோமிஸ்ஸும் பாத்ரிஸ், செர்மோனே தீத்தான்ஸ் குத்துரா.
உள்ளொளி ஆன்மா கண்டிட உள்ளத்தில் அன்பை மூட்டுவீர் ஊன் பலவீனம் வென்றிட உம்மருள் பலம் ஊட்டுவீர்	அச்செந்தே லூமென் சென்சிபுஸ், இன்fவுந்தே (அ)மோரெம் கோர்திபுஸ், இன்fவிர்மா நோஸ்திரி கோர்ப்போரிஸ், விர்தூத்தே fவிர்மான்ஸ் பெர்ப்பெத்தி,
தின்மை செய்வோனை விரட்டும் உண்மை சமாதானம் தாரும் நன்மை வழி யாம் சென்றிட நண்பராய் எமை நடத்தும்	ஹோஸ்தெம் ரெப்பெல்லாஸ் லோஞ்ஜியுஸ், பாச்செம் க்வே தொனெஸ் ப்ரோத்தினுஸ், துக்த்தோரே சிக் தே ப்ரேவீயோ வீத்தேமுஸ் ஓம்னெ நோக்சியும்.
உம்மால் தேவ தந்தையையும் திருச் சுதன் சேசுவையும் எம்மான்மாவில் நேசிப்பதால் ஸ்பிரித்துவாம் உம்மை வாழ்த்துவோம்	பெர் தே ஷியாமுஸ் தா பாத்ரெம் நோஸ்காமுஸ் ஆத்க்வே fவீலியும் தேக்(வே) உத்ரீயுஸ் க்வே ஸ்பீரீத்தும், க்ரே தாமுஸ் ஓம்னி தெம்ப்போரே.

பிதாவுக் கென்றும் மகிமை
உயிர்த்த சுதன் அவர்க்கும்
சதாகாலம் ஸ்தோத்திரமே
உரியதாம் ஸ்பிரித்துவுக்கும்-ஆமென்.

தேயோ பாத்ரி சித் க்ளோரியா
எத் fவீலியோ க்யி ஆமோர்த்துயிஸ்
சுர் ரெக்ஸித், ஆக் பாராக்ளித்தோ
இன் சேக்குலோரும் சேக்குலா-ஆமென்.

சுருக்கமான மாலை ஜெபம்

(அர்ச். சிலுவை..... நித்திய ஸ்துதிக்குரிய.... மாலை ஜெபம் பக். 62)

பரிகாரத் திருத்தலத்திற்குப் பவனி:

பரிகாரப் பவனிப் பாடல்

மரியாயின் மாசற்ற இருதயமே
பரிகாரம் செய்ய வந்தோமே
மரியாயின் மாசற்ற இருதயமே

1. அமலோற்பவமாய் இருக்கின்றீர்
ஆதாம் வினையற உதிக்கின்றீர்
பாவ மானிடருள் ஒருத்தியென
பரிகசிக்கின்றார் பாவிகளே.

2. கடவுளைப் பயின்ற மாதா நீர்
படைப்புகட்கெல்லாம் தாயானீர்
இடருறு மாந்தர் இதை மறுத்தார்
இனிய உம் அன்பை வெறுத்தாரே

3. முதல்வனின் தூய அன்னை என
முப்பொழுதும் நிறைக் கன்னியென
மூவுலகும் துதித்தே மகிழ
மூர்க்கர்களோ இதை மறுத்தனரே.

4. மாதா உந்தன் மகிமைகளை
மறுத்தே சிலர் பழி தீர்க்கின்றார்
மாசறியாத பாலகரின்
மனதில் உம் நினைவகற்றுகின்றார்

5. பரகதி சேர்க்கும் உத்தரியம்
பசாசை வெல்லும் ஜெபமாலை
திரு உருவங்களை மதியாமல்
தினமும் துரோகம் புரிகின்றார்.

(பவனி கெபியை அடைந்ததும் மாதா சுருபத்தை பீடத்தில் வைத்துவிட்டு, பக்தர்களை வரவேற்று, முதல் சனி பக்தி பற்றியும் அன்றைய பரிகாரக் கருத்து பற்றியும் ஒரு சிறு உரைக்குப்பின், விரும்பினால், பாத்திமா செய்திகளை அறியவும் தியானிக்கவும் உதவியாக, கீழ்வரும் பிரார்த்தனையை வாசிக்கலாம்)

பாத்திமா ஜெபமாலை மாதா பிரார்த்தனை

சுவாமி, கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, கிருபையாயிரும்.

சுவாமி, கிருபையாயிரும்.

கிறீஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறிஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

-பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

-உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா, எங்களை......

-இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா, எங்களை........

-அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா, எங்களை......

1. அர்ச். மரியாயே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
2. அர்ச். பாத்திமா ஜெபமாலை மாதாவே - எங்களுக்.......
3. பாத்திமா என்னும் சிற்றூரிலே மூன்று ஆடு மேய்க்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு ஆறு விசை தரிசனையான பாத்திமா ஜெபமாலை மாதாவே -
4. சிறு பிள்ளைகளைப்போல் ஆவது மோட்சத்தை அடைவதற்கு அவசியம் என்று காண்பிக்க, மூன்று சிறு பிள்ளைகளுக்குக் காட்சியளித்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -
5. அமைதியான ஆத்துமத்திலேயே ஆண்டவர் பேசுகிறார் என்பதைக் காண்பிக்க, அமைதியான மலைச்சாரலிலே வந்து தோன்றிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -
6. தம்மைத்தேடும் மக்களை தேவனும் தேடுகிறார் எனக் காண்பிக்க, ஜெபமாலை பக்தியில் சிறந்து விளங்கி "மரியாயின் நிலம்" என்று அழைக்கப்படும் போர்த்துக்கல் நாட்டில் தரிசனை கொடுக்கத் திருவுளமான பாத்திமா ஜெபமாலை மாதாவே -
7. ஜெபமும் தவமும் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அத்தியாவசியம் என்பதைக் காண்பிக்க, பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களிடம் ஜெப தவம் செய்யும்படிக் கேட்ட பாத்திமா ஜெபமாலை மாதாவே -
8. ஆத்தும இரட்சணியத்திற்காகவும் உலக சமாதானத்திற்காகவும் ஜெபமாலை ஜெபிப்பது மிகவும் முக்கியமென்று காண்பிக்க, காட்சிதந்த ஆறு தடவையும் அனுதின ஜெபமாலை சொல்லக் கேட்டுக் கொண்ட பாத்திமா ஜெபமாலை மாதாவே -
9. பூலோகக் கவலைகளில் சிக்குண்டிருக்கிற நாங்கள் பரலோகத்துடன் எவ்வித தொடர்பு கொள்ள வேண்டுமானாலும் அதற்குத் தகுந்த ஆயத்தம்

அவசியம் என்று காண்பிக்க, ஒரு தேவ தூதனை அனுப்பி ஒரு வருட காலமாய் அவர்களைத் தயாரித்து வந்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

10. மனிதர்கள் சர்வேசுரனை ஆராதிப்பதும், அவரை விசுவாசித்து, நம்பி, நேசிப்பதும் முக்கியம் என்று காண்பிக்க, சம்மனசின் முதல் காட்சியிலேயே "என் தேவனே" என்ற ஜெபத்தைக் கற்றுத் தந்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

11. கடவுளின் திருச்சந்நிதியில் மனிதன் மிகுந்த தாழ்ச்சியுடன் பணிந்து ஆராதனை செய்ய வேண்டும் என்று காண்பிக்க, நெற்றி தரையில்பட அச்செபத்தை சம்மனசானவர் சொல்லும்படி கட்டளையிட்ட பாத்திமா ஜெபமாலை மாதாவே -

12. பாவத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் காப்பாற்றும்படி ஆண்டவரிடம் மன்றாடுவது அவசியம் என்று காண்பிக்க, ஜெபமாலையின் ஒவ்வொரு பத்துமணி முடிவிலும் "ஓ என் சேசுவே" என்னும் செபத்தைச் சொல்லும்படி கற்பித்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

13. ஒறுத்தல் முயற்சி செய்வது அவசியம் என்றும், எங்களுக்கு இவ்வுலகில் நேரிடும் யாவற்றையும் பாவப்பரிகாரமாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்றும் சம்மனசின் வாயிலாக போதித்தருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

14. சுவிசேஷப் போதனைகளையும் வேத சத்தியங்களையும் நாங்கள் மறந்துவிடாதிருக்கும் படியாக, உங்கள் காட்சிகளில் ஞானஉபதேசத்தை முறைமையாகப் போதித்தருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

15. சேசுகிறிஸ்து நாதர் திவ்விய நற்கருணையில் உண்மையாகவே பிரசன்னமாய் இருக்கிறார் என்ற சத்தியத்தைக் காண்பிக்க, நற்கருணையை ஏந்திய சம்மனசானவரை அனுப்பி, சேசுவை அம்மூன்று சிறுவர்களும் ஆராதித்து உட்கொள்ளும்படிச் செய்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

16. தேவநற்கருணையில் சேசுநாதருடைய சரீரம், இரத்தம், ஆத்துமம், தேவசுபாவம் எல்லாம் அடங்கியிருப்பதையும் உலகிலுள்ள எல்லா தேவ நற்கருணைப் பேழைகளிலும் சேசுநாதர் இருக்கிறார் என்பதையும் ஒரு தனி செபத்தால் எங்களுக்குப் படிப்பித்தருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

17. திவ்விய நற்கருணையில் பிதா, சுதன், பரிசுத்த ஆவியாகிய கடவுள் ஆராதிக்கப்பட வேண்டும் என்று காண்பிக்க, "மகா பரிசுத்த திரித்துவமே" என்ற செபத்தைக் கற்பித்தருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

18. நன்றியற்ற மனிதரால் சகிக்ககூடாத விதமாய் நிந்தைப்படும் நற்கருணை ஆண்டவருக்கு நிந்தைப்பரிகாரமாக, மிக அன்புடனும் பக்தியுடனும்

பரிகார நன்மை உட்கொள்ளும்படி தூண்டியருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

19. சேசுவின் திரு இருதயத்துடன் உமது மாசற்ற இருதயமும் ஒன்றாக நேசிக்கப்பட்டு நிந்தைப்பரிகாரம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக முதல் சனி பக்தியை ஏற்படுத்தியருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

20. மரியாயின் மாசற்ற இருதயத்துக்குப் பரிகாரம் செய்யும் கருத்தோடு முதல் சனிக்கிழமைகளில் பாவசங்கீர்த்தனம் செய்து தேவ நற்கருணை உட்கொண்டு 53 மணி ஜெபமாலை சொல்லி ஜெபமாலை தேவரசியங்களை தியானித்தபடி மாதாவுடன் தங்கியிருப்பதே முதல்சனி பக்தி என்று விளக்கிக் கூறிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

21. உமது அமலோற்பவம், தெய்வீகத் தாய்மை, முப்பொழுதும் கன்னிமை, உமது மேல் பக்தி, திரு உருவங்கள் ஆகியவற்றுக்கு எதிராகச் செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவே 5 முதல் சனிப் பக்தி என்று விளக்கிக் கூறிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

22. முதல் சனி பக்தியை பிரமாணிக்கமுடன் அனுசரிப்பவர்களின் மரண சமயத்தில் ஈடேற்றத்துக்கு அவசியமான சகல உதவிகளையும் செய்வதாக வாக்களித்துள்ள பாத்திமா ஜெபமாலை மாதாவே -

23. பாவத்தின் பலனாகவே நேருகின்ற யுத்தம், பஞ்சம் ஆகிய துன்பங்களைத் தடுக்க ஜெபமாலையும் ஒறுத்தல் முயற்சிகளும் செய்து, உமது மாசற்ற இருதயப் பக்தியைக் கைக்கொள்ளும்படி தூண்டி, இதுவே பாத்திமா செய்தி என உலகுக்கு உணர்த்திய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

24. பாத்திமா காட்சிகள் கடவுளால் ஆனவை என்று நம்பும்படியாக, 1917 அக்டோபர் மாதம் 13-ம் நாளில் 6-ம் காட்சியின் போது சூரியனில் மாபெரும் அற்புதத்தை நிகழ்த்திய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

25. உமது விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டால் ரஷ்யா மனந்திரும்பும், உலக சமாதானம் வரும், இல்லாவிடில் ரஷ்யா தன் தப்பறைகளை உலகமெங்கும் பரப்பும் என்று எச்சரித்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

26. ரஷ்யா மனந்திரும்புவதற்கு ஏதுவாக அந்நாட்டை மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு பாப்பரசர் உலக மேற்றிராணிமார்களுடன் சேர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற சேசுவின் நிபந்தனையை அறிவித்த பாத்திமா ஜெபமாலை மாதாவே -

27. நாங்கள் நம்பிக்கை இழந்து போகாவண்ணம் "இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றி பெறும், பாப்பரசர் ரஷ்யாவை என் இருதயத்துக்கு ஒப்புக்கொடுப்பார், உலக சமாதானம் வரும்" என்று கூறியருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

28. பாவிகளுக்காக ஜெபித்து, பரித்தியாகம் செய்ய ஆள் இல்லாததால் அநேகர் நரகத்திற்குப் போகிறார்கள் என்று வேதனையுடன் கூறி பாவங்களுக்குப் பரிகாரமாகவும், பாவிகள் மனந்திரும்பவும் எங்களை மன்றாடத் தூண்டிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

29. நரகத்திற்குச் செல்லும் பாவிகளில் பெரும்பாலனவர்கள் கற்புக்கெதிரான பாவங்களுக்காகவே அங்கு செல்கிறார்கள் என்று ஜெசிந்தா வழியாகக் கூறி, பரிசுத்த தனத்தின் மட்டில் எங்கள் கடமையை உணர்த்தியருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

30. பாப்பரசரும் திருச்சபையும் கொடுமையாக அலைக்கழிக்கப்படுவதை முன் கூட்டியே அறிவித்து, அதிலிருந்து காப்பாற்றும்படி அதிக ஜெபம், அதிக பரித்தியாகம் செய்யத் தூண்டி, ஜெபமாலையை பக்தியுடன் தியானித்துச் சொல்லும்படி கற்பித்தருளிய பாத்திமா ஜெபமாலை மாதாவே -

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

-எங்கள் பாவங்களைப் போக்கியருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

-எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய திவ்விய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

-எங்களை தயைபண்ணி இரட்சியும் சுவாமி!

சேசுவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

சேசுவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

முதல் : சேசுகிறிஸ்து நாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரமா யிருக்கத்தக்கதாக.

எல் : பாத்திமா ஜெபமாலைக் கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

ஜெபிப்போமாக

சர்வேசுரா, தேவரீருடைய ஏக பேறானத் திருக்குமாரன் தமது ஜீவியத்தினாலும் மரணத்தினாலும் உத்தானத்தினாலும் எங்களுக்கு நித்திய இரட்சணியத்தின் சம்பாவனையை அடைந்து தந்தருளினாரே; இந்த பரம இரகசியங்களை முத்திப்பேறு பெற்ற கன்னிமரியாயினுடைய மகா பரிசுத்த ஜெபமாலையைக் கொண்டு தியானிக்கிற நாங்கள் அவைகள் கற்பிக்கிற முன்மாதிரிகையைப் பின்பற்றவும், அவைகள் வாக்களிக்கிற ஞான நன்மைகளை அடைந்து கொள்ளவும் எங்களுக்கு அனுகிரகம் செய்தருள

வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய அதே சேசுகிறிஸ்துவின் பெயரால் தேவரீரை மன்றாடுகிறோம் – ஆமென்.

பாடல்

பாத்திமா ஜெபமாலை மாதாவே!
எங்களுக்காகவே வேண்டிக்கொள்ளும் } 3 முறை

பாத்திமா திருத்தலப் பரிகார ஜெபம்

ஆண்டவராகிய சேசுவே! நன்றியற்ற மனிதர்கள் கட்டிக்கொள்ளும் பாவமென்னும் முட்களால் குத்தி ஊடுருவப்பட்டிருக்கிற உம்முடைய திரு மாதாவின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்ய வேண்டுமென்றும், அத்தாயின் இருதயத்தை உமது திரு இருதயத்துடன் இணையாக வைத்து நேசித்து அதற்கு சங்கையும் ஆறுதலும் வருவிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிற எங்கள் நேச இரட்சகரே! மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரமாக நாங்கள், எங்கள் நினைவு, வார்த்தை, கிரிகை யாவற்றையும் ஒப்புக் கொடுக்கிறோம். மேலும் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவதில் எங்களுக்கு ஏற்படும் துன்பங்கள் யாவற்றையும், மனமுவந்து ஏற்றுத் தாங்கிக் கொள்ளவும் அவற்றைப் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் பாவிகள் மனந்திரும்பவும் ஒப்புக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்.

திருச்சபையெங்கும் மரியாயின் மாசற்ற இருதய பரிகாரப் பக்தி பரம்பி வளரவும் அதன் வழியாக திருச்சபை தம் பாரம்பரிய போதனைக்கும் வழிபாட்டிற்கும் மீண்டும் கொண்டு வரப்பட்டு, மரியாயின் மாசற்ற இருதயம் வெற்றி பெறவும் உலகம் சமாதானத்தைக் கண்டடையவும் ஆன்மாக்கள் நரகத்தில் விழாதபடி காப்பாற்றப்படவும் தேவரீர் இரங்கி அருள் புரியுமாறு உம்மைத் தாழ்மையுடன் கெஞ்சி மன்றாடுகிறோம். பிதாவோடும் இஸ்பிரித்து சாந்துவோடும் ஒரே சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற ஆண்டவரே! -ஆமென்

பாடல் : **எழுந்தீர் எம் நேசத்தாயே (On a tree O Loving Mother)**

1. எழுந்தீர் எம் நேசத்தாயே எழிலாய் ஓர் மரத்தே
விழுந்தோம் உம் பாதம் எங்கள் வேண்டுதற்க் கிரங்குவீர் – 2
பாத்திமா தாயே! பார்த்திரங்குவீரே
பாத்திமா தாயே! பார்த்திரங்குவீரே

2. உச்சி வேளை காட்சி தந்தீர் உம்மை வேண்டும் மக்கட்காய்
பட்சமாய் எம் பாதுகாவல் பாரில் ஆவீர் அன்னையே – 2
பாத்திமா தாயே! பாத்திரங்குவீரே – 2

3. அன்பின் மைந்தர் எமக்குந்தன் அங்கியே அடைக்கலம்
துன்ப வாழ்வின் துயர் நீக்கி தூய மைந்தர் பதம் சேர் - 2
பாத்திமா தாயே! பாத்திரங்குவீரே - 2

4. சூரியன் தன் நிலை நீங்கி சூழலும் அற்புதத்தால்
பாரின் மாந்தர் பாவம் போக்கி பக்தராகத் தூண்டினீர் - 2
பாத்திமா தாயே! பாத்திரங்குவீரே - 2

5. ஜெகமெங்கும் சமாதானம் ஜெயம் தாரும் விரைந்தே
ஜெபமாலை அன்னை என்றே திரு நாமம் தெரிந்தே - 2
பாத்திமா தாயே! பாத்திரங்குவீரே - 2

ரஷ்யாவை அர்ப்பணிக்கும் ஜெபம்

திருஜெபமாலையின் இராக்கினியே! உம்முடைய வரப்பிரசாத அரியாசனத்தின் முன்பாக தெண்டனிட்டு, பாத்திமாவில் நீர் கேட்டுக் கொண்ட விண்ணப்பங்களை எங்களால் கூடுமான அளவு நிறைவேற்ற ஆசிக்கிறோம்.

உலகின் அருவருக்கத்தக்க பாவங்களாலும், சேசு கிறிஸ்துநாதரின் திருச்சபைக்கு எதிரான கலாபனைகளாலும், கிறிஸ்தவ ஆன்மாக்களும் நாடுகளும், விசுவாசத்தை மறுதலிப்பதாலும், தாயான உமது கொடைகளை மறப்பதாலும், சேசுவின் திரு இருதயத்துடன் வியாகுலத்தால் ஐக்கியப்பட்டிருக்கும் உமது துயரம் நிறைந்த மாசற்ற இருதயம் நொந்து போயிருக்கின்றதே!

இத்தனை பழிபாவங்களுக்காகவும் பரிகாரம் செய்வதற்காக நீர் கடவுளின் தூதனாக உலகிற்கு வந்து, உமது மாசற்ற இருதய பக்தியை ஏற்படுத்தவும், பாப்பரசர் உலக மேற்றிராணிமாருடன் சேர்ந்து ரஷ்யாவை உமது மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் கேட்டருளினீரே.

இந்த உமது வேண்டுகோளை இதுவரை சட்டை பண்ணாத நாங்கள், உமது விண்ணப்பத்திற்கு பாப்பரசரும் உலக மேற்றிராணிமாரும் இணங்கும் அந்த பாக்கியமான நாளை எதிர்பார்த்தபடி சகல குருக்கள், விசுவாசிகளுடன் இப்பரலோக விண்ணப்பங்களை நிறைவேற்றத் தீர்மானிக்கிறோம்.

ரஷ்யாவில் தொடங்கி, நவீன உலகில் எங்கும் பரவிவரும் நாஸ்திகத் (atheistic communism) தப்பறைகளாலும், அதனால் திருச்சபையில் ஊடுருவி வரும் உலகநய - மனிதமயக் (secular-humanism) கொள்கைகளாலும், பாவிகளின் தீய குணத்தாலும் அவபக்தியாலும் மிகவும் நொந்துபோயிருக்கும் உமது மாசற்ற இருதயத்திற்கும் சேசுவின் திரு இருதயத்திற்கும் நாங்கள் செய்யும் இப்பகிரங்க பரிகார முயற்சியை ஏற்றுக் கொள்ளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

மேலும் எங்களால் கூடிய வரை ரஷ்ய நாட்டை உமது மாசற்ற இருதயத்திடம் ஒப்படைத்து அர்ப்பணிக்கிறோம். ஓ இரக்கத்தின் தாயே! உமது வல்லமை மிக்க பாதுகாவலின்கீழ் அந்நாட்டை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகிறோம். இதனால் நீரே அதன் இராக்கினியாக ஆட்சி செய்யும் இராச்சியமாக அது மனந்திரும்பக் கடவது. அதாவது அந்நாடு, தன் சட்டப்படியான அவபக்தியை விட்டுவிட்டு, நமதாண்டவரின் சாந்தமான செங்கோலுக்குள், சேசு கிறிஸ்துநாதருக்கு ஒரு புதிய இராச்சியமாகும்படி அதை உமது வல்லமைக்குள் கொண்டு வருவீராக.

ஓ சமாதானத்தின் இராக்கினியே! உமது அற்புதமான மன்றாட்டினால், நீர் சகல வரப்பிரசாதங்களுக்கும் மத்தியஸ்தி என்னும் சத்தியத்தை உலகிற்கு எண்பிக்கும்படி வேண்டுகிறோம். உமது மாசற்ற இருதய அரசாட்சியின் வழியாக உலகம் தர இயலாத சமாதானத்தை உலகிற்கு அருளி, உமது மாசற்ற இருதய வெற்றியின் அடையாளமான கிறிஸ்து இராஜாவின் ஓரே மந்தையும் அரசாட்சியும் உலகமெங்கிலும் ஏற்படும்படி, ரஷ்ய நாட்டையே உமது அப்போஸ்தலக் கருவியாக ஆக்கியருளும் தாயே - ஆமென்.

மாதாவே சரணம்

மாதாவே சரணம் உந்தன்
பாதாரம் புவிக்காதாரம் கன்னி
மாதாவே சரணம்

அனுபல்லவி

மா பாவம் எமை மேவாமல் - 2
காவீரே அருள் ஈவீரே - கன்னி - மாதாவே

சரணங்கள்

1. மாசில் உம் மனமும் சேசுவின் உள்ளமும்
மாந்தரின் தவறால் நோவுறக் கண்டோம்
ஜெபம் செய்வோம் தினம் ஜெபமாலை சொல்வோம்
பாவத்திற்காக பரிகாரம் புரிவோம் -மாதாவே

2. நானிலத்தில் சமாதானமே நிலவ
நாஸ்திக ரஷ்யா ஆஸ்திகம் அடைய
உடல் உயிர் அனைத்தும் உவப்புடன் அளிப்போம்
உம் இருதயத்தில் இன்றெமை வைப்போம் -மாதாவே

நிகழ்ச்சி : 2

தியானித்து ஜெபமாலை ஜெபித்தல்

(ஜெபமாலை தொடங்குதல் - பக்கம் 64)

சுருக்கமான ஜெபமாலை தியானம்

சந்தோஷ தேவ இரகசியங்கள்

1. கபிரியேல் சம்மனசு தேவ மாதாவுக்கு மங்கள வார்த்தை சொன்னதைத் தியானித்து, மிகுந்த தாழ்ச்சியென்னும் வரத்தைக் கேட்டு ஜெபிப்போமாக.

கடவுளின் சித்தத்திற்குப் பணிந்து தேவமாதா கொடுத்த சம்மதத்தின் விளைவாகவே மனுக்குல மீட்பின் வரலாறு உலகில் தொடங்கியது. இத்திரு நிகழ்ச்சியினைக் கண்முன் நிறுத்தி, வார்த்தையானவர் மனுவுருவானதையும், கன்னி மரியாயின் தெய்வீகத் தாய்மைப் பேற்றின் மேன்மையையும் தியானிப்போம்.

(1 பர. 10 அருள்., திரி., ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

ஜெபமாலை தேவ இரகசியப் பாடல்

அலைகடல் ஒளிர் மீனே - செல்வ
ஆண்டவர் தாயாரே - 2
நிலை பெயராக் கன்னி - மோட்ச
நெறி கதவே வாழி

வானவன் கபிரியேலின் - ஸ்துத்ய
மங்கள மொழி ஏற்பீர் - 2
ஞான சமாதான - வழி நாம்
நடந்திடத் துணை செய்வீர்.

தூயவராய் நடக்கச் - செய்வீர்
சோர்வில்லா வழி சேர்ப்பீர் -2
சேயன் உம் சேசுவை நாம் - நித்யம்
சிநேகிக்க வரம் செய்வீர்.

* திவ்விய பிதாவுக்கும் - அவரின்
திருச்சுதன் சேசுவுக்கும் - 2
இவ்விருவரின் நேச - ஸ்பிரித்துஸ்
என்பவர்க்கே ஸ்தோத்திரம்.

2. தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவினதைத் தியானித்து உத்தமமான பிறர் சிநேகம் என்னும் வரத்தைக்கேட்டு ஜெபிப்போமாக.

நித்தியந்தொட்டே தேவ தாயாக நியமிக்கப்பட்டவராயிருந்தும், ஒரு சாதாரண ஸ்திரியான எலிசபெத்தம்மாளுக்கு பணிவிடை புரியும்படி

விரைந்து செல்லுமளவுக்கு மாமரி தாழ்ச்சியோடிருந்தார்கள். மாதாவைக் கண்டு பாவித்து, தேவ சிநேகத்தால் தூண்டப்படுகிற பிறர் சிநேகத்தைப் பயிற்சி செய்யும் வரத்தைக் கேட்டு மன்றாடுவோம்.

(1 பர. 10 அருள்., திரி., ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

தேவனின் ஏவுதலால் - புனித
எலிசபெத் இல்லம் சென்று-2
மேவிய கருணையினால் - ஆண்டவர்
தாய் என அறியச் செய்தீர்

உம்திரு வயிற்றின் கனி - சேசுவின்
வல்லப கிருபையினால் -2
எம்மையும் ஸ்நாபகர் போல் - பாவ
அல்லல் நின்றகற்றிடுவீர்
. திவ்ய ....

3. கர்த்தர் பிறந்ததை தியானித்து வறுமை மீது விருப்பம் என்னும் வரத்தைக் கேட்டு செபிப்போமாக.

தேவ வார்த்தையானவர், பலவீன மனுவுருக் கொண்டு, ஒரு குழந்தையாய்ப் பிறந்தார். எல்லாவற்றிற்கும் மாமரியைச் சார்ந்திருந்தார். வறுமையையும் உலக தரித்திரத்தையும் தமதாக்கிக் கொண்டார். இரட்சணியத்தாலும் பரலோகக் கொடைகளாலும் நம்மைச் செல்வராக்கும் படி தரித்திரத்தைத் தமதாக்கிக் கொண்ட அவரை ஆச்சரியத்தோடே தியானித்து, சுய ஒறுத்தலையும் வறுமையையும் நேசிக்கும் வரம் கேட்போம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

மனிதரை மீட்பதற்காய் - கடவுள்
உம்திரு மடி மீது -2
கனிமொழி மகவாக - தவழ்ந்தார்
என்பதால் மகிழ்ந்தீரே

எளிமையும் தரித்திரமும் - நிறைந்த
மாடடைக் குடிலினிலே -2
ஒளிநிகர் தேவசுதன் - பிறந்தார்
நாடெல்லாம் வணங்கிடவே

* திவ்ய ....

4. சேசு கோவிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்டதை தியானித்து ஆத்தும சரீரத் தூய்மை என்னும் வரத்தைக் கேட்டு ஜெபிப்போமாக.

அர்ச்சிஷ்டதனம் அடைவதற்கு சேசுவுக்கும் மாதாவுக்கும் நாம் சொந்தமாயிருப்பதும் நிபந்தனையின்றி நம்மை முழு அர்ப்பணம் செய்வதும் அவசியம் என்பதை இந்நிகழ்ச்சி கற்பிக்கிறது. உலக பாவங்களுக்குப் பரிகாரமாக சேசுவை மாதா உன்னத பலிப் பொருளாக பிதாவுக்குக் காணிக்கையாக்கும் இந்த நிகழ்ச்சியின் தியானம் நம் ஆத்துமத்தை சுத்திகரித்து கடவுளுக்குக் காணிக்கையாக்குவதாக.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

பெருசலேம் ஆலயத்தில் - சேசு
குழந்தையைக் காணிக்கையாய் -2
இருகரம் ஏந்தி நின்று - பலியாய்
விளங்கிட அர்ப்பணித்தீர்.

சிமியோன் வசனமதால் - உந்தன்
இருதயம் ஊடுருவ-2
தமியோர் பாவங்கட்காய் - தாய், மகன்
இருவரும் பலியானீர்.
* திவ்ய ......

5. பன்னிரண்டு வயதில் காணாமற் போன கர்த்தரைத் தேவாலயத்தில் கண்டு களிகூர்ந்ததைத் தியானித்து. தேவ ஊழியத்தில் விருப்பத்தையும் பாவிகள் மனந்திரும்பும் வரத்தையும் கேட்டு ஜெபிப்போமாக.

பிதாவின் சித்தத்திற்குப் பணிந்து தம்மையே பலியாக்கி மனுமக்களை மீட்க சிறுவயதிலேயே பாலன் சேசு கொண்டிருந்த தாகத்தை தியானித்து, கடவுளை நேசித்து அவருக்கு ஊழியம் செய்யப் போதுமான வரப்பிரசாதத்தை நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் தரும்படி மன்றாடுவோம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

பன்னிரு வயதினிலே - சேசுவை
தேடிய துயர் நீங்கி - 2
உம்மிருதயம் மகிழச் - செய்தார்
தேவனின் ஊழியத்தால்.

எம்மிலும் என்றென்றும் - தேவனின்
திருச்சித்தம் நிறைவேற - 2
உம்மருட்கரம் பிடித்து - நடப்போம்
இரட்சகர் வழியினிலே
* திவ்ய ......

6. சேசுநாதர் சுவாமி பூங்காவனத்தில் இரத்த வேர்வை வியர்த்ததைத் தியானித்து நம் பாவங்களுக்கு உத்தம மனஸ்தாபத்தையும் தேவ சித்தத்துக்கு உத்தம கீழ்ப்படிதலையும் தந்தருளும் படி ஜெபிப்போமாக.

கொடிய பாடுகளின் பயத்தாலும் சகல மனிதரின் அவலட்சணப் பாவங்களாலும் அவஸ்தைப்படுகிறார் சேசு. தமது பாடுகள், திருமரணம் இவற்றின் இரட்சணிய பேறுபலன்களை அநேகர் அலட்சியம் செய்து நரகத்துக்குச் செல்லும் பரிதாபத்துக்குரிய பாவிகளைப் பற்றிய மனவேதனை, மனுமக்கள் மேல் தாம் கொண்ட பற்றியெரியும் சிநேகம் இவற்றிற்கிடையே நிகழ்ந்த போராட்டமே சேசுவின் இரத்த வேர்வைக்குக் காரணமாயிற்று. சேசுவுடன் நாம் விழித்திருந்து உத்தம மனஸ்தாபத்திற்கு மன்றாடுவோம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

இரத்தமும் வியர்வையுமாய் - பூங்கா
வேதனை, அவஸ்தைப்பட்டு - 2
அத்தனை பாவங்கட்காய் - ஆண்டவர்
சாவினை ஏற்றாரே.

உத்தம மனஸ்தாபம் - ஒன்றே
ஆறுதல் ஈவதனால் - 2
எத்துணை வேதனையும் - ஏற்றிடத்
தேறுதல் தாருமம்மா.
* திவ்ய ....

7. சேசுநாதர் சுவாமி கற்றூணில் கட்டுண்டு அடிக்கப்பட்டதை தியானித்து சரீர ஆசைகளை அடக்கும் வரத்தைக் கேட்டு ஜெபிப்போமாக.

கொடூரமாய் அடிக்கப்பட்டு சதை கிழிக்கப்படுவதால் நம் அசுத்த மோகபாவங்களுக்குப் பரிகாரம் செய்கிறார் சேசுநாதர் பரலோக மணம் வீசும் கன்னிமையையும் தூய கற்பையும் விரும்பும் அவருடைய நேசத்தின் ஆழத்தைத் தியானித்து சரீரப் பாவத்தை வெறுத்துப் பகைக்கும் வரம் கேட்போம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

சேசுவைக் கற்றூணில் - கட்டி
கசைகளினால் அடிக்க -2
மாசறு மேனி, முகம் - கை, கால்
தசையெல்லாம் நொறுங்கியதே

நீசர் எம் தேக சுகம் - இன்ப
ஆசையெல்லாம் ஒறுக்க-2
நேசமுடன் இசைந்தே - வருவோம்
மாசின்றி வாழச் செய்வீர்

* திவ்ய ....

8. சேசுநாதர் சுவாமி திருச்சிரசில் முள்முடி சூட்டப்பட்டதை தியானித்து இவ்வுலகத்தின் மீது பெரும் வெறுப்பைத் தந்தருளும்படி கேட்போமாக.

அண்ட சராசரங்களையும் ஒரே வார்த்தையால் படைத்தவரும், கெருபிம்கள் என்னும் சம்மனசுக்கள் மேல் தம் ஆசனத்தை அமைத்துக் கொண்டவருமான தேவ சுதன் ஒரு பரிகாச இராஜாவாக நிந்திக்கவும் பரிகசிக்கவும் பட்டு, முள்முடி சூட்டப்பட்டதில் அவர் காட்டிய தாழ்ச்சியின் சிகரத்தைத் தியானித்து, இவ்வுலக மகிமையை வெறுக்கச் செய்யும் வரப்பிரசாதத்தைத் தரும்படி ஜெபிப்போமாக.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

முள்முடியால் அவர்தம் - சிரசில்
ஆழமாய் அடித்தனரே - 2
எள்ளியே நகையாடி - சேசுவை
ஏளனம் செய்தனரே

உலகின் மகிமைகளும் - உடலின்
வலிமை, அழகு, சுகம் - 2
அலகையின் மாயமெல்லாம் - வெறுத்திட
வல்லமை அருளுமம்மா

* திவ்விய ....

9. சேசுநாதர் சுவாமி சிலுவை சுமந்து கொண்டு போனதை தியானித்து, நமது சிலுவைகளைப் பொறுமையுடன் சுமக்கும் வரம் கேட்டு ஜெபிப்போமாக.

உலகின் கண்களுக்கு அவமானச் சின்னமாகிய சிலுவையானது தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு கடவுள் தரும் வல்லமையாக இருப்பதை தியானிப்போம். துன்பங்களும், அவமானங்களும், கைவிடப்படுதலும் உத்தமதனம் அடையத் தேவையான படிகள் என்பதை உணர்ந்து, அர்ச். பிரான்சிஸ்குவைப் போல நாமும் சிலுவையை நேசிக்கும் வரம் கேட்போம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

சிலுவைச் சுமந்து சென்றார் - அதுவே
மீட்பின் பாதை என்றார் - 2
சிலுவையைச் சுமந்து சென்றால் - நித்திய
மோட்சம் நமக் கென்றார்.

வறுமை, நோய், மரணம் - எல்லாம்
பாவத்தின் பாரமென்றே - 2
பொறுமையுடன் சுமக்க - மரியே
மாவரம் தாருமம்மா.

* திவ்விய ....

10. சேசுநாதர் சுவாமி சிலுவையில் அறையப்பட்டு மரித்ததை தியானித்து, பாவத்தின் மீது வெறுப்பையும் நல்ல மரண வரத்தையும் தந்தருளும்படி ஜெபிப்போமாக.

ஜீவியத்தின் ஊற்றானவர் மரித்ததைத் தியானிப்போம். சகலராலும் கைவிடப்பட்டு, பாவிகளில் ஒருவராகக் கருதப்பட்டு, மனிதத் தோற்றத்தை இழந்தவராக மரித்த சேசுவின் எல்லையற்ற சிநேகத்தையும் தியானித்து, பாவத்திற்கு மரிக்கவும் பரிசுத்ததனத்தில் உயரவும் தேவையான வரத்தைக் கேட்போம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

பாவியர் நமக்காக - சேசுவை
சிலுவையில் அறைந்தனரே - 2
ஜீவியம் தருபவரை - ஜீவிய
பலியாய்க் கொன்றனரே.

நித்தியம் நாம் வாழ - ரட்சகர்
மரித்தார் மாமரியே - 2
உத்தமராய் வளர - யாமும்
மரிப்போம் பாவத்திற்கே.

* திவ்விய ....

மகிமைத் தேவ இரகசியங்கள்

11. சேசுநாதர் சுவாமி மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததைத் தியானித்து உயிருள்ள விசுவாசத்தைத் தந்தருளும்படி ஜெபிப்போமாக.

சேசுநாதரின் தேவத்துவத்தை நிரூபிக்கும்படியாக அவர் உயிர்த்தெழுந்தார். நமது விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் ஆகிய புண்ணியங்களில் அதிக உறுதி பெறவும் நமது ஆன்மீக ஜீவியத்தைப் புதுப்பிக்கவும், பாவிகளின் ஆத்துமங்கள் பாவ சங்கீர்த்தனத்தால் மீண்டும் உயிர் பெறவும் மன்றாடுவோம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே.... என்ற ஜெபம்)

மூன்றாம் நாளினிலே - கல்லறை
நின்றே உயிர்தெழுந்தார் - 2
முன்பே உரைத்தபடி - கடவுள்
என்றே காட்டி நின்றார்

சத்திய விசுவாசம் - தாயே
எம்மிடம் தழைக்கச் செய்வீர் - 2
நித்திய ஜீவியத்தில் - சேசுவை
என்றும் காணச் செய்வீர்.

* திவ்விய ....

12. சேசுநாதர் சுவாமி பரலோகத்திற்கு ஆரோகணமானதைத் தியானித்து, திடமான நம்பிக்கையையும் மோட்சத்தின் மீது பெரும் விருப்பத்தையும் கேட்டு ஜெபிப்போமாக.

மரணத்தையும் பாவத்தையும் வென்று பரலோகத்துக்கு எழுந்தருளிச் சென்ற சேசு நாதருடைய மீட்பின் பேறுபலன்களில் திடமான நம்பிக்கை கொண்டு, அவரால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையின் தேவத்திரவிய அனுமானங்களைப் பிரமாணிக்கமாய் அனுசரிக்கிற யாவரும் நிச்சயமாய் இரட்சணியமடைவார்கள். இத்திரு நிகழ்ச்சியின் திருவருள் நம்மைப் பரலோகத்திற்குத் தயாரிப்பதாக.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே.... என்ற ஜெபம்)

பாவம் மரணமெல்லாம் - வென்றே
பரலோகம் எழுந்து சென்றார் - 2
தேவனின் இராச்சியத்தில் - எமக்கோர்
உறைவிடம் தேடித் தந்தார்

முடிவில்லா ஜீவியமும் - அதன்மேல்
திடமுள்ள நம்பிக்கையும் - 2
விடிவெள்ளி போல் என்றும் - ஒளிர்ந்திட
அடியோர்க் கருளுமம்மா

* திவ்விய ....

13. பரிசுத்த ஆவியானவர் தேவமாதா பேரிலும் அப்போஸ்தலர்கள் பேரிலும் இறங்கி வந்ததைத் தியானித்து, ஆழ்ந்த தேவ சிநேக வரத்தைக் கேட்டு ஜெபிப்போமாக.

பெந்தேகோஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியின் வல்லமையால் தேவமாதா திருச்சபை என்னும் சேசுவின் ஞான சரீரத்தை ஈன்றெடுத்த மகிமையைத் தியானிப்போம். திருச்சபையின் ஞான அதிகாரிகளும் விசுவாசிகளும் அதே பரிசுத்த ஆவியால் மாதாவுக்குள் அர்ச்சிக்கப்படுகிறார்கள். அவர்கள் மாதாவை சார்ந்திருந்தே பரிசுத்த ஆவியானவரின் கொடைகளைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போமாக.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே.... என்ற ஜெபம்)

திவ்விய ஸ்பிரித்து வெனும் - பரிசுத்த
தேற்றர வானரவர் - 2
செவ்வொளி ரூபமதாய் - திருச்சபைத்
தோற்றுவித் திறங்கினராம்

சேசுவை ஈன்றெடுத்த - தாயே
எம்மையும், ஈறெடுக்க - 2
நேச அக்கினியான - ஸ்பிரித்துவை
எம்மில் காணச் செய்யும்

* திவ்விய ....

14. தேவமாதா ஆத்தும சரீரத்தோடு மோட்சத்துக்கு ஆரோபணமானதைத் தியானித்து மரியாயின் மீது உண்மைப் பக்தியைத் தந்தருளும்படி ஜெபிப்போம்.

பாவ மாசின்றி உற்பவித்து, பரிசுத்தமாய் ஜீவித்த மாமரி பாவத்தின் சட்டத்திற்கு உட்படாததால் சரீர அழிவின் கேட்டிற்கு உட்படாமல், தமது திருக்குமாரன் மீது சாய்ந்தவண்ணம், மோட்சத்திற்கு ஆரோபணமாகிச் சென்ற மகிமையைத் தியானிப்போம். நமது மரண வேளையின்போதும் நம்மை மோட்சத்திற்கு அழைத்துச் செல்ல மாதா வரும்படியாக, அவர் மீது உண்மையான பக்தியை வளர்த்துக் கொள்வோம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே.... என்ற ஜெபம்)

வானவர் புடை சூழ - மிக்க
மகத்வ சிங்காரமுட - 2
தான் மகன்மேல் சாய்ந்து - எழுந்தருள்
தாய் மரியே வாழி.

மாசில்லா மாமரியே - உம்மை
இத்தரை மாந்தரெல்லாம் - 2
நேசித்து வணங்கிடவே உண்மை
பக்தியை தந்தருள்வீர்.

* திவ்விய ....

15. தேவமாதா பரலோக, பூலோக இராக்கினியாய் அர்ச். தமதிரித்துவத்தினால் முடி சூட்டப்பட்டதைத் தியானித்து, நாம் முழுவதும் மாதாவுக்குச் சொந்தமாகும் வரம் கேட்டு ஜெபிப்போமாக.

பரிசுத்த தமதிரித்துவ குடும்பத்தோடு மாதா கொண்டிருந்த தெய்வீக உறவின் காரணமாகவும், பாவங்களுக்குப் பரிகாரமாக இரட்சகர் அனுபவித்த கொடிய வேதனைகளில் இணை இரட்சகியாய்ப் பங்கு பெற்றதாலும், ஆண்டவருடைய நித்திய மகிமையிலும் தேவமாதா பங்கு பெற்றார்கள். பரலோக மகிமைக்கு நம்மையும் தகுதியாக்கும்படியாக மாதாவுக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிப்போம்.

(1 பர. 10 அருள். திரி. ஓ என் சேசுவே... என்ற ஜெபம்)

ஆதிபிதா தமது - செல்வ
அன்புள்ள மகளிவர்க்கு - 2
ஜோதி ப்ரதாப முடி - தலையில்
சூட்டினார் ஜெயம் ஜெயமே!

தூதர்க்கெல்லாம் உயர்ந்து - அரசியாய்
துலங்கி விளங்கும் தாயே - 2

ஆதரையோர் எம்மை நீர் - என்றும்
ஆதரித் தாள் வீரம்மா.

* திவ்விய ....

பிரசங்கம்

(குருவானவர் இல்லாத இடங்களில் ஞான வாசகம், இந்நூலின் முதல் 28 பக்கங்களில் ஏதாவது ஒரு பகுதியை வாசிக்கலாம்.)

பாடல்: பாத்திமா பதி ராணி
("மாசற்ற கன்னியே" என்ற மெட்டு)
பாத்திமா பதி ராணி பாரில் எங்களையே
நேத்ரக் கிருபை கூரும் நித்திய கன்னிகையே

1. பாரெல்லாம் உம் நாமம் பரிமளிக்குதே
சீர் நிறை உம் நாமம் சிறப்புற்றோங்குதே - பாத்திமா பதி....
2. நறு மலர் நல் மாலை நாங்கள் சூடுவோம்
திரு ஜெபமாலை ஆரம் தினம் எம் காணிக்கை - பாத்திமா பதி....
3. எவ்வகை தின்மை நின்று எம்மைக் காப்பது
வையத் தும் ஜெப மாலை அன்றி வேறில்லையே - பாத்திமா பதி....

சகலத்திற்கும் இராஜாவாகிய சேசு கிறிஸ்து நாதருக்கு தன்னை முழுவதும் ஒப்புக்கொடுக்கும் ஜெபம்

ஓ தேவனாகிய சேசுவே, / தேவரீரை சகலத்திற்கும் / இராஜாவாக ஏற்றுக் கொள்கிறேன். / படைக்கப்பட்ட சகல வஸ்துக்களும் / உமக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. / என் பேரில் உமக்குள்ள / சர்வ அதிகாரத்தையும் பிரயோகித்து / என்னை ஆண்டு நடத்தியருளும்.

பசாசையும் / அதன் கிரியைகளையும் / அதன் ஆரவாரங்களையும் / விட்டு விடுகிறதாக / நான் ஞானஸ்நானத்தில் கொடுத்த / வார்த்தைப் பாட்டைப் புதுப்பித்து, / இனிமேல் நான் / உத்தம கிறிஸ்தவனாக / ஜீவிப்பேனென்று உறுதி கூறுகிறேன். / இன்னும் விசேஷமாய், / சர்வேசுரனுடைய / தெய்வீக இராஜரீகமும் / திருச்சபையினுடைய உரிமைகளும் / நிலை பெற்றோங்கும்படிக்கு / என்னால் இயன்றமட்டும் / பிரையாசைப் படுவதாக / நேர்ந்து கொள்ளுகிறேன்.

எங்கள் அரசரும் ஆண்டவருமாகிய / சேசுவின் திரு இருதயமே, / சகல இருதயங்களும் / உமது அர்ச்சிக்கப்பட்ட இராஜரீகத்தை / ஏற்றுக்கொள்ளும் படிக்கும் / அதன் வழியாய் / உலகம் அடங்கலும் / உமது சமாதானத்தின் ஆளுகை / ஸ்தாபிக்கப்படும்படிக்கும் / அற்பமாகிய என் கிரிகைகளையெல்லாம் / உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். / ஆமென்.

(வழக்கமான நிபந்தனைகளை அனுசரித்தால், தினமும் ஒரு பரிபூரண பலனை அடையாளம்)

கிறிஸ்து இராஜாவின் கீதம்

பல்லவி

இராஜாதி இராஜா இராஜாதி இராஜா
இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே

சரணம்

1

இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே
தேவாதி தேவா திவ்வ மைந்தரே
மூவாதி லோகம் ஆளும் இராஜா
மோட்ச மன்னாவே சேசு இராஜாவே
இராஜாதி இராஜா இராஜாதி இராஜா
இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே

2

இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே
தீதுறு பேயை வென்ற இராஜாவே
நீதி சமாதானம் சேர் இராஜா
நித்திய நித்ய நேச இராஜாவே
இராஜாதி இராஜா இராஜாதி இராஜா
இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே

3

இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே
பூபதியோர்கள் போற்றும் இராஜாவே
பொற்குண அன்பால் ஆளும் இராஜா
போதக ஞான இராஜ இராஜாவே
இராஜாதி இராஜா இராஜாதி இராஜா
இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே

4

இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே
தேசமெல்லாம் உம் ஆட்சி ஓங்கவே
ஆசையோடென்றும் வேண்டுவோமே
ஆண்டவரே எம் தேவ இராஜாவே
இராஜாதி இராஜா இராஜாதி இராஜா
இராஜாதி இராஜா கிறிஸ்து இராஜாவே

பரிசுத்த பாத்திமா ஜெபமாலை மாதா நவநாள் ஜெபம்

மிகவும் பரிசுத்த கன்னிகையே / ஜெபமாலை பக்தியில் நிறைந்திருக்கும் / வரப்பிரசாதங்களை / உலக மக்களுக்கெல்லாம் / வெளிப்படுத்தும்படியாக / பாத்திமாவில் காட்சியருளிய எங்கள் நேசத்தாயே / நித்திய இரட்சணியமருளும் / தேவ இரகசியங்களை / மனமுருகி தியானித்து / ஜெபமாலை ஜெபிக்கும் நற்பழக்கத்தையும் / அதன்மீது ஆழ்ந்த பக்தியையும் / எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று / உம்மை மன்றாடுகிறோம்.

ஜெபமாலை பக்தியின் பயனாக / பாவிகள் மனந்திரும்புவார்களாக / ரஷ்யா மனந்திரும்பி / தேவ விசுவாசம் கொள்வதாக. / மேலும் விசேஷமாய் / இந்த நவநாள் ஜெபத்தில் / நாங்கள் மன்றாடிக் கேட்கும் கருத்துக்கள் / (அவரவர் சொந்த கருத்துக்களை நினைவு கூரவும்.... பொதுவான கருத்துக்களைக் குறிப்பிடவும்.....) எல்லாம் தவறாமல் நிறைவேறுவனவாக.

இவைகளையெல்லாம் / சர்வேசுரனின் அதிமிக மகிமைக்காகவும் / உமது புகழ்ச்சிக்காகவும் / ஆன்மாக்களின் இரட்சிப்புக்காகவும் / எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று / நேசமிகுந்த மாதாவே / உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். / ஆமென்.

பாத்திமா கோவா தா ஈரியாவில்

பாத்திமா ஆவே (In Fatima Cove)

1. பாத்திமா கோவா தா ஈரியாவில்
   காட்சியாய் வந்த எம் மாமரியே
   வாழ்க, வாழ்க, வாழ்க, மரியே - 2
2. போர், பஞ்சம், நோய், துன்பம் பூவில் வாட்ட
   போர்த்துக்கல் நாடெங்கும் சாவில் ஏங்க.
3. மின்னிய தேவனின் பேரொளியில்
   கன்னி மரியம்மாள் காட்சி தந்தார்.
4. மூன்று சிறுவர்க்கு செய்தி சொல்லி
   தோன்றும் சமாதானம் பாரில் என்றார்.
5. தூய தவம், ஜெபமாலை சொல்வீர்
   தீய ஒழுக்கம் விடுவீர் என்றார்.
6. ஆர்வமாய் மாதா சொல் கேட்டு நின்றே
   போர்த்துக்கல் மக்கள் தம் நாட்டை வென்றார்.
7. மாதாவின் பாத்திமா செய்தியெல்லாம்
   பாதம் பணிந்தே நாம் கேட்டிடுவோம்.

8. பொல்லாத பாணிகள் தொல்லை நின்று
சொல், செயல், நினைவைக் காத்திடுவோம்.

9. சேஸலை இனிமேலும் வருத்தாவண்ணம்
மாசின்றி வாழ நல் வாக்களிப்போம்.

10. பாவிகள் எல்லாம் மனந்திரும்ப
பாவப்பரிகாரம் செய்திடுவோம்.
வாழ்க, வாழ்க, வாழ்க மரியே - 2

வெளியில் மாதா ஆசீர்வாதம்

தேவாலயத்திற்குப் பவனி

ஆவே மாரீஸ் ஸ்தெல்லா	**ஆழியின் தாரகையே,**
1. ஆவே மாரிஸ் ஸ்தெல்லா, தேயி மாத்தெர் ஆல்மா, ஆத்க்வே சேம்பெர் வீர்கோ, fபெலிக்ஸ் சேலி போர்த்தா. *	ஆழியின் தாரகையே, ஆண்டவர் தாயாரே, மாட்சி நிறை கன்னி, மோட்ச வாசலே *
2. ஸுமென்ஸ் இல்லுத் ஆவே, காப்ரியேலிஸ் ஒரே, fபூந்தா நோஸ் இன் பாச்சே, மூத்தான்ஸ் ஏவே நோமென்.	தேவ தூதன் சொன்ன தேவ வாழ்த்தை ஏற்று ஏவை பேரை மாற்றும் ஜீவ இன்பம் ஊற்றும் *
3. சோல்வே விங்க்லா ரேயிஸ், ப்ரோfப்பெர் லூமென் சேச்சிஸ்: மாலா நோஸ்த்ரா பெல்லே, போனா குங்க்தா போஸ்ஸே".	பாவ இருள் போக்கி தேவ ஒளி யாக்கி ஆவியின் நோய் தீரும் ஜீவ வரந்தாரும் *
4. மோன்ஸ்த்ரா தே (எ)ஸ்ஸே மாத்ரேம் : ஸுமாத் பெர் தே ப்ரேச்செஸ், குயி ப்ரோ நோபிஸ் நாத்துஸ், தூலித் எஸ்ஸே துவுஸ்.	தாயாய் உம்மைக் காட்டும் சேயாய் நீரே ஈந்த சேசு எம் மன்றாட்டை நேசமாக ஏற்க *
5. வீர்கோ சிங்குலாரிஸ், இந்தெர் ஓம்னெஸ் மீத்திஸ், நோஸ் குல்ப்பிஸ் சொலூத்தொஸ், மீத்தெஸ் fபாக் எத் காஸ்த்தோஸ்.	தன்ம நிறை கன்னி சாந்தகுணத் தாயே தின்மைபோக்கிச் சாந்த நன்மை கற்பு நல்கும்
6. வீத்தாம் ப்ரேஸ்தா பூராம், ஈத்தெர் பாரா தூத்தும்:	நித்தம் சேசு பாதம் நேசித்தே நாம் காண

உத் விதெந்தெஸ் யேசும்,	அந்த வாழ்வு தாரும்
செம்பெர் கொல்லெத்தேமுர்.	மெய்ப் பாதையிற் சேரும்
7. சித் லவ்ஸ் தேயோ பாத்ரி,	தந்தை தேவனார்க்கும்
சும்மோ கிறிஸ்தோ தெக்குஸ்,	மைந்தன் சேசுவுக்கும்
ஸ்பிரித்துயி சாங்க்தோ,	சுந்த ஸ்பிரீத்தோடு
திரிபுஸ் ஓனோர் வுனுஸ். ஆமென்	சந்ததம் வாழ்த்தாமே
* ஆவே, ஆவே, ஆவே மரியா (2)	* வாழ்க வாழ்க வாழ்க மரியே (2)

(பின்னர் கோவிலுக்குள் வந்தவுடன் மாதா சுரூபத்தை பீடத்தில் வைத்து விட்டு அனைவரும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு தன்னை முழுவதும் அர்ப்பணிக்கும் ஜெபத்தைச் சொல்லுவார்கள்.)

மரியாயின் மாசற்ற இருதயத்துக்குத் தன்னை முழுதும் அர்ப்பணிக்கும் ஜெபம்

(புனித லூயிஸ் மரிய மோன்போர்ட்)

ஓ அமலோற்பவத் தாயே! / இதோ பாவியாகிய நான்...... / ஞானஸ்நானத்தில் கொடுத்த வார்த்தைப் பாட்டை / உமது கரங்களில் புதுப்பித்து / உறுதிப்படுத்துகிறேன். / பசாசையும், / அதன் கிரியைகளையும் / ஆடம்பரங்களையும் / நான் விட்டுவிடுகிறேன். / நித்திய ஞானமாகிய / சேசுகிறிஸ்து நாதருக்கு / என்னை முழுவதும் கையளித்து / என் ஜீவிய கால முழுவதும் / எனக்கு நேரிடும் துன்பங்களையும் / அவருடைய பாடுகளோடு ஒன்றித்து / முன்னைவிட இன்னும் அவருக்கு / அதிக பிரமாணிக்கமாய் இருப்பதாக / வாக்களிக்கிறேன்.

சகல மோட்சவாசிகளுக்கு முன் / உம்மை என் தாயாராகவும் / மாதாவாகவும் / தெரிந்து கொள்ளுகிறேன். / உமது அடிமையாக / என் சரீரத்தையும், / ஆத்துமத்தையும், / என் எல்லாவற்றையும், / என் உள்ளிந்திரியங் களையும், / ஐம்புலன்களையும், / என் ஜீவிய கால முழுவதும் / நான் செய்யும் நற்கிரியைகளையும் / பலன்களையும் / உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். / என்னையும் / எனக்குச் சொந்தமான யாவற்றையும் / இப்பொழுதும் எப்பொழுதும் / கடவுளின் அதிமிக தோத்திரத்திற்காக / உமது பிரியப்படி / நீரே முழு உரிமையுடன் / ஆண்டு நடத்தக் கையளிக்கிறேன். / ஆமென்.

பாடல்

- மரியாயின் மாசற்ற இருதயமே / எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
- மரியாயின் மாசற்ற இருதயமே / பாவிகளுக்காக வேண்டிக்கொள்ளும்
- மரியாயின் மாசற்ற இருதயமே / இந்தியாவுக்காக வேண்டிக்கொள்ளும்

இரண்டாம் பாகம்

பாவ சங்கீர்த்தனம்

(குருவானவர் பாவ சங்கீர்த்தனம் கேட்கும் போது பக்தர்கள் சிறு சிறு குழுக்களாக அல்லது தனித் தனியாக தேவாலய வளாகத்தில் உசிதமான இடங்களில் சென்று கீழ்க்காணும் பக்தி முயற்சிகளில் ஏதாவது ஒன்றை நடத்தலாம்.)

நிகழ்ச்சி : 3

மரியாயின் ஜெபக் கிரீடம்

(மாதாவுக்கு கடவுள் அருளியுள்ள 12 வரப்பிரசாத சலுகைகளும், அவற்றை தியானித்து சொல்லப்படும் ஜெபக் கிரீட பக்தி முயற்சியும் இங்கு தரப்படுகிறது. தேவதாயின் பன்னிரு வரப்பிரசாத சலுகைகளைக் குறிப்பிட்டே காட்சியாகமத்தில் "அவருடைய சிரசின் மேல் பன்னிரு நட்சத்திரங்களுள்ள ஓர் கிரீடமும் இருந்தது"- (12:1) என்று கூறப்பட்டுள்ளது. இச்செபத்தைத் தவறாமல் சொல்லி தியானிப்பவர்கள் நிச்சயமாக மாதாவை நேசிக்கும் வரத்தை அடைவார்கள்.)

- அர்ச். சிலுவை மந்திரம் சொல்லவும்.
- ஆசீர்வதிக்கப்பட்ட கன்னிகையே, உம்மை வாழ்த்தி ஸ்துதிக்க உமது கிருபையுடைத்தான உதவியைத் தந்தருளும்.
- சகல சத்துருக்களுக்கு எதிராக எனக்கு சத்துவமளித்தருளும்.
- பிதாவுக்கும் சுதனுக்கும்....... மற்றதும்.
- விசுவாசப் பிரமாணம்.

முதற்பாகம் : பிதாவாகிய சர்வேசுரனுக்கு மகிமையாக

- ஒரு பரலோக மந்திரம்

1-வது சலுகை:

கடவுளின் நித்திய திட்டத்திற்கென மாதா நித்தியத்திலிருந்தே தெரிந்து கொள்ளப்பட்ட மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்....... மாதா கடவுளுக்காக அத்திட்டத்தை நிறைவேற்ற நம்பிக்கையுடன் மன்றாடுவோம்...... ஒரு அருள் நிறைந்த மந்திரம்.

(............. இப்புள்ளியிட்ட இடங்களில் சற்று நிறுத்தி மனதில் தியானிக்கவும்)

2-வது சலுகை:

மாதா ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்..... தன் பிள்ளைகளை ஜென்மப் பாவ தோஷத்திலிருந்து விடுவிக்கும்படி மாதாவிடம் நம்பிக்கையுடன் மன்றாடுவோம்.......ஒரு அருள்.

3-வது சலுகை:

சர்வேசுரனுடைய சகல வரப்பிரசாதங்களும் வந்து குவியும் பாத்திரமாக மாதா இருக்கிற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும்

நன்றியுடனும் தியானிப்போம்..... தன் பிள்ளைகளாகிய நமக்குத் தேவையான சகல வரப்பிரசாதங்களையும் தேவையான சமயத்தில் தந்து ஆதரிக்கும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்..... ஒரு அருள்.

4-வது சலுகை:

சர்வேசுரனுடைய தாயாராக மாதா இருக்கிற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்......... கடவுளின் தேவைகளை தாயென்ற முறையில் மாதா அறிந்திருப்பதால் நம்மிடமிருந்து கடவுள் எதிர்பார்ப்பதையெல்லாம் கொடுக்க நமக்கு உதவும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்........ ஒரு அருள்.

பிதாவுக்கும் சுதனுக்கும்.............. மற்றதும்.

இரண்டாவது பாகம்: சுதனாகிய சர்வேசுரனுக்கு மகிமையாக

- ஒரு பரலோக மந்திரம்

5-வது சலுகை:

பிதாவாகிய சர்வேசுரனின் குமாரத்தியாக மாதா இருக்கிற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்....... இப்படி கடவுளின் பிதாத்துவ வல்லமையில் பங்கு பெறும் நம் தாய், சாத்தானை எதிர்த்து வெற்றி பெறும் வல்லமையை நமக்குத் தரும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்..... ஒரு அருள்.

6-வது சலுகை:

சுதனாகிய சர்வேசுரனின் கன்னித்தாயாராக மாதா இருக்கும் மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்...... சிருஷ்டிக்கபடாத ஞானமாகிய அவரை மாதா நமக்குத் தந்து அந்த ஞானத்தின்படி நம்மை வழி நடத்தும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்...... ஒரு அருள்.

7-வது சலுகை:

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனின் பிரிய நேசமாக மாதா இருக்கிற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்.......... அவரிடமிருந்து பிரிக்க முடியாத மணவாளியாக இருக்கும் நம் தாய்க்கு அவர் தம் சிநேகம் முழுவதையும் கொடுத்துள்ளதால், உத்தமமாய்க் கடவுளை சிநேகிக்கிற அன்பை மாதா நமக்குத் தரும்படியாக நம்பிக்கையுடன் மன்றாடுவோம்........ ஒரு அருள்.

8-வது சலுகை:

மாதா, சகல மனிதருக்கும் தாயாக இருக்கும் மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்........ நம் மாதாவுக்கு எல்லா மனிதரும் பிள்ளைகளாயிருப்பதால், நம் ஒவ்வொருவருடைய தேவைகளிலும்

சொந்த தாய் போல் வந்து உதவும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்...... ஒரு அருள்.

பிதாவுக்கும் சுதனுக்கும்.............. மற்றதும்.

மூன்றாவது பாகம்: இஸ்பிரீத்து சாந்துவுக்கு மகிமையாக

- ஒரு பரலோக மந்திரம்

9-வது சலுகை:

சேசுவுடன் மாதா இணை இரட்சகியாய் இருக்கிற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்...... சேசுவின் பாடுகள் அனைத்தையும் மாதாவும் அனுபவித்து அவருடன் சேர்ந்து சம்பாதித்த பேறுபலன்களால் சாத்தானின் சகல ஏமாற்ற தந்திரங்களிலும் நின்று நம்மைக் காப்பாற்றும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்...... ஒரு அருள்.

10-வது சலுகை:

மாதா, சகல வரப்பிரசாதங்களுக்கும் மத்தியஸ்தியாயிருக்கும் மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்..... மாதாவே நமக்கு எல்லாமாக இருந்து சகல தேவ வரங்களையும் தந்து, இவ்வுலக வாழ்விலும் மறுவுலகிலும் நம்மைப் பராமரிக்கும்படி நம்பிக்கையுடன் மன்றாடுவோம்.........ஒரு அருள்

11-வது சலுகை:

மாதா ஆத்தும சரீரத்துடன் மோட்சம் சென்ற மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்........ மாதாவுக்கு நம் அர்ப்பணத்தின் அடையாளமான உத்தரியத்தை அணிந்திருக்கவும். அதற்கு மாதா வாக்களித்துள்ளபடி நம் மரண வேளையில் மாதா நமக்குத் துணையாக இருக்கும்படியும் நம்பிக்கையுடன் மன்றாடுவோம்.......... ஒரு அருள்.

12-வது சலுகை:

மாதா பரலோக பூலோக இராக்கினியாக மோட்சத்தில் முடி சூட்டப்பட்ட மகிமையை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் தியானிப்போம்....... நம் அன்னையும் அரசியுமான மாதாவுக்கு நாம் சொந்தமாகி விடும் வரத்தைக் கேட்டு நம்பிக்கையுடன் மன்றாடுவோம்........ ஒரு அருள்.

பிதாவுக்கும் சுதனுக்கும்.............. மற்றதும்.

முடிவு ஜெபம்

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,............. (பக். 68)

நிகழ்ச்சி : 4

தேவமாதாவின் எழு சந்தோஷ மகிமைகளும் ஏழு துயர வியாகுலங்களும்

1. தேவமாதாவின் ஏழு சந்தோஷ மகிமைகள்

முதலாவது சந்தோஷம்

மாதா சர்வேசுரனுக்குத் தாயாகத் தெரிந்துகொள்ளப்பட்டது

வரப்பிரசாதத்தினால் பூரணமான அர்ச். மரியாயே! நீர் தேவனுக்குத் தாயாராய் இருக்கும் முதல் சந்தோஷ மகிமையைக் குறித்து தியானிக்கிறேன். எங்கள் திவ்விய இரட்சராகிய பரம தேவனுக்குத் தேவரீர் உண்மையான திவ்விய மாதாவாகத் தெரிந்து கொள்ளப்பட்டதை அறிந்து இவ்வுலகத்தில் நீர் அத்தியந்த சந்தோஷம் அடைந்ததும் அல்லாமல், மோட்ச ராஜ்ஜியத்தில் சம்மனசுக்களுக்கும் மேலான உமது பரிசுத்த தன்மையால் மோட்சவாசிகள் எல்லோருடைய மகிமைக்கும் மேலாக உயர்த்தப்பட்டு, எப்போதும் நீர் அனுபவித்து வருகிற பூரண சந்தோஷ மகிமையைத் தியானிப்பதில் அடியேன் ஆறுதலைடைந்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க!..........)

இரண்டாவது சந்தோஷம்

மாதா தேவசுதனைப் பெற்றெடுத்தது

ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்த அர்ச். மரியாயே! நீர் தேவ பாலனைப் பெற்றெடுத்த இரண்டாவது சந்தோஷத்தைக் குறித்து தியானிக்கிறேன். தேவரீர் இப்பூலோகத்தில் யாதொரு வருத்தமில்லாமல் தேவசுதனைப் பெற்றெடுத்த பொழுது ஆனந்த சந்தோஷ மகிமையை அடைந்ததுமல்லாமல், எப்பொழுதும் பரலோகத்தில் உம்முடைய மகிமைப் பிரதாபங்களால் மோட்ச ராஜ்ஜிய பாரத்தைப் பூரிப்பிக்கிறதில் நீர் அனுபவித்து வருகிற பரிபூரண சந்தோஷ மகிமையைத் தியானித்து அடியேன் மகிழ்ந்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள் நிறைந்த மரியே வாழ்க............)

மூன்றாவது சந்தோஷம்

மூன்று இராஜாக்கள் தேவபாலனை ஆராதித்தது

மகா பரிசுத்த கன்னிகையான அர்ச். மரியாயே! கீழ்த்திசை அரசர்கள் திவ்விய குழந்தையை ஆராதித்த போது நீர் அடைந்த மூன்றாவது சந்தோஷ மகிமையை தியானிக்கிறேன். இவ்வுலகத்தில் உம்முடைய திவ்விய பாலகனாகிய சேசுவைச் சந்திப்பதற்காக கீழ்த்திசையினின்று வந்த அரசர்கள் அவரை ஆராதித்து அவர் சகல லோகத்திற்கும் உண்மையான கர்த்தர் என்று

ஸ்துதித்து, உம்மை அவருடைய பரிசுத்த மாதாவாக வணங்கின பொழுது நீர் அடைந்த சந்தோஷ மகிழ்ச்சியை இப்பொழுதும் பரலோகத்தில் அனுபவித்து வருகிறீர் அல்லவோ? பக்திசுவாலகர், ஞானதிக்கர் முதலிய நவவிலாச சம்மனசுகளும் சகல மோட்சவாசிகளும் உம்மைத் தங்கள் திவ்விய இரட்சகரின் உண்மையான மாதாவாக அங்கீகரித்து உம்முடைய கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிந்து வணங்கி உம்மை ஸ்தோத்தரித்துக் கொண்டு வருகிறார்கள் என்று தியானித்து அடியேனும் உம்மை மிகுந்த தாழ்ச்சியோடு வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க!............)

நான்காவது சந்தோஷம்

சேசுநாதர் சுவாமி கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது

வரப்பிரசாதத்தின் மத்தியஸ்தியான அர்ச். மரியாயே! உம்முடைய நான்காவது சந்தோஷ மகிமையைக் குறித்து தியானிக்கிறேன். நித்திய பிதவினால் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் பாதாளலோகத்திற்கும் அதிபதி கர்த்தத்துவம் கொண்டிருக்கிறவராகிய உம்முடைய நேசமுள்ள திருக்குமாரன் மரித்தவர்களிடத் திலிருந்து உத்தானமாயினதைப் பார்த்து, நீர் இவ்வுலகில் அடைந்த சந்தோஷத்தையும் உம்மை நம்பினவர்களுக்கு வேண்டிய தேவ இஷ்டப்பிரசாதங்கள் எல்லாவற்றையும் உமது திவ்விய குமாரனிடத்தில் மன்றாடிப் பெற்றுப் பரிமாறுகிற செல்வநாயகியாக நீர் சர்வேசுரனால் குறிக்கப்பட்டு, பரலோகத்தில் எப்பொழுதும் நீர் அனுபவித்து வருகிற உன்னத பரமானந்த சந்தோஷ மகிமையையும் அடியேன் தியானித்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள்நிறைந்த மரியாயே வாழ்க.........)

ஐந்தாவது சந்தோஷம்

சேசுநாதர் சுவாமி பரலோகத்திற்கு ஆரோகணமானது

மகா பாக்கியவதியான அர்ச். மரியாயே! உம்முடைய திவ்விய குமாரன் பரலோகத்துக்கு ஆரோகணமானதைப் பார்த்து நீர் அடைந்த ஐந்தாவது சந்தோஷ மகிமையைக் குறித்து தியானிக்கிறேன். உம்முடைய திவ்விய திருச்சுதன் தமது நித்திய பிதாவின் வலது பாரிசத்தில் மகிமை பிரதாப இராஜாவாக வீற்றிருக்கத் தக்கதாக இவ்வுலகத்திலிருந்து பரலோகத்திற்கு ஆரோகணமான போது நீர் அடைந்த மகிழ்ச்சியையும், பரலோகத்தில் மகா பரிசுத்தமாக நீர் உமது திருச்சுதன் சேசுநாதருடைய வலதுபுற சிங்காசனத்தில் இராக்கினியாக நியமிக்கப்பட்டு, எப்போதும் நீர் அனுபவித்து வருகிற பரமானந்த சந்தோஷ மகிமையையும் அடியேன் தியானித்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள்நிறைந்த மரியாயே வாழ்க..............)

ஆறாவது சந்தோஷம்

தேவ மாதா பேரில் திவ்விய இஸ்பிரீத்து சாந்து இறங்கி வந்தது

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனின் நேசமாயிருக்கிற அர்ச். மரியாயே! உம்மீது திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவர் இறங்கிவந்த போது நீர் அடைந்த ஆறாவது சந்தோஷ மகிமையை தியானிக்கிறேன். அப்போஸ்தலர்களுக்கு மேலாக நீர் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதங்களால் நிறைந்து அலங்கரிக்கப்பட்டிருக்கிறதுமன்றி மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனிதனும் ஒன்றான உமது நேசமுள்ள திருக்குமாரனாகிய சேசு கிறிஸ்துநாதருக்குப்பின் சகல சிருஷ்டிகளிலும் நீர் மேன்மையானவருமாய், எல்லோரிலும் அதிக நிர்மல பரிசுத்தமானவருமாய். இருக்கிறீர். மேலும், பாவிகள் எல்லோரையும் உமது அடைக்கலத்தில் வைத்திருப்பதாலும், விசேஷமாய் நித்திய சர்வேசுரனும் நீரும் இவ்வுலகத்தில் அனேகம் நன்மைகளையும் உன்னதமான வரப்பிரசாதங்களையும் தந்தருளக் கிருபை புரிகிறதில் உமக்குண்டாகிய சந்தோஷ மகிமையை அடியேன் தியானித்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க..........)

ஏழாவது சந்தோஷம்

தேவமாதா ஆத்தும சரீரத்தோடு ஆரோபணமாகி பரலோக பூலோக இராக்கினியாக முடி சூட்டப்பட்டது

சகல லோகத்திற்கும் இராக்கினியான அர்ச் மரியாயே! நீர் பரலோக பூலோக இராக்கினியாக முடி சூட்டப்பட்ட ஏழாவது சந்தோஷ மகிமையை தியானிக்கிறேன். நீர் திவ்விய சுகந்த பரிமள காந்தி உடைத்தான உமது திரு சரீரத்தோடும் ஆத்துமத்தோடும் பரலோகத்துக்கு ஆரோபணமான உடனே, அர்ச். தமதிரித்துவத்தினால் வானோர்களுக்கெல்லாம் மகிமைப்பிரதாபம் மிகுந்த இராக்கினியாகக் கிரீடம் தரிக்கப்பட்டு சிருஷ்டிகளுக்கெல்லாம் அளிக்கக் கூடுமான சகல சுகிர்தங்களாலே நீர் நிறைந்து அலங்கரிக்கப் பட்டிருப்பதையும், உமது மாசற்ற உற்பவத்தின் க்ஷணமுதற்கொண்டு நீர் அனுபவித்து வந்த நன்மைகளும் சுகிர்தங்களும் சர்வேசுரன் உமக்களித்த மேலான வரங்களும் எந்நாளும் மாறாமல் நித்திய காலமும் நீடித்திருக்கிறதைக் காண்பதில் உமக்கு உண்டாகிய அத்தியந்த சந்தோஷ மகிமையை அடியேன் தியானித்து உம்மை வாழ்த்தி ஸ்துதித்து வணங்குகிறேன். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க..........)

பாடல் : இரட்சகர் திரு மாதாவை (பக். 183)

2. தேவமாதாவின் ஏழு துயர வியாகுலங்கள்

முதலாவது துயரம்

சிமியோன் சொன்ன தீர்க்கத்தரிசனத்தால் மாதா வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது ஆத்துமத்தில் வியாகுல வாள் ஊடுருவப்படும் என்று சிமியோன் தீர்க்கத்தரிசனம் சொன்னதைக்கேட்டு, உமது திருக்குமாரனுடைய மரணத்தையும் மனுஷருடைய சேதத்தையும் அறிந்து மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் இவ்வுலக ஜீவியத்தைச் சட்டை பண்ணாமல் பரலோக ஜீவியத்தை நாடி அடையும்படி உம்முடைய திருக்குமாரனை வேண்டிக்கொள்ள உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க..........)

இரண்டாவது துயரம்

குழந்தை சேசுவை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போனதை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரனை ஏரோது என்பவன் கொல்லத் தேடுகிறதை அறிந்து, திவ்விய குழந்தையை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்திற்கு ஓடிப்போய் ஏழு வருஷமளவும் மிகுந்த வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் பசாசின் தந்திரங்களுக்குத் தப்பிப் பரலோக வழி தவறாமல் நடக்க உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க..........)

மூன்றாவது துயரம்

பன்னிரண்டு வயதில் சேசு காணாமல் போனதை தியானிப்போமாக.

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரன் பன்னிரண்டு வயதில் தேவாலயத்திற்குப் போனவிடத்தில் மூன்று நாள் அவரைத் தேடியும் காணாதே போனபடியினாலே மிகுந்த வியாகுலப் பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் சாவான பாவத்தினால் அவரை இழந்து போகாதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க..........)

நான்காவது துயரம்

சேசுநாதர் சிலுவை சுமந்து போன போது மாதா அவரை எதிர்கொண்டு மினவினதை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரன் பாரமான சிலுவை சுமந்து கொண்டு போகையில் அவரை எதிர் கொண்டு மினவினபோது நீர் மிகுந்த

வியாகுலப்பட்டீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து பாவத்தினால் எனக்கு வருகிற கஸ்திகளை இம்மையில் நான் பொறுமையோடு சகிக்கவும் மறுமையில் ஈடேற்றமடையவும் உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க______)

ஐந்தாவது துயரம்

சேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு மரித்ததை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரன் எண்ணிக்கையில்லாத கஸ்தி வேதனைப்பட்டு சிலுவையில் அறையுண்டு, சகலராலும் கைவிடப்பட்டு ஓர் ஆறுதலும் இல்லாமல் மரணமடைகிறதைக் கண்டு துக்க சாகரத்தில் அமிழ்ந்து மிகுந்த வியாகுலம் அனுபவித்தீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து அவருடைய திருப்பாடுகளையும் வேதனைகளையும் நான் நினைத்து நல்ல மரணமடைய உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க______)

ஆறாவது துயரம்

மரித்த சுவாமியை மாதாவின் மடியில் வளர்த்தியதை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தைச் சிலுவையினின்று இறக்கி உமது திருக்கரங்களில் வளர்த்தி அதை கட்டி தழுவிக் கொண்டபோது அதிலுள்ள காயங்களை உற்றுப்பார்த்து சொல்ல இயலாத வியாகுலம் அனுபவித்தீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து அவருடைய மரண நினைவு என் இருதயத்தில் பதிந்திருக்கவும், நான் என் பாவங்களுக்காக மறவாது கண்ணீர் சொரிந்து அழவும் உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க______)

ஏழாவது துயரம்

சேசுநாதர் சுவாமி கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டதை தியானிப்போமாக

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரனுடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் செய்த பின்பு அவருடைய திருப்பாடுகளையும் மரணத்தையும் உமது தனிமையையும் நினைத்து மட்டில்லாத வியாகுலம் அனுபவித்தீரே. அந்த வியாகுலத்தைப் பார்த்து நான் ஒரு போதும் சர்வேசுரனை விட்டுப்பிரிந்து தனிமையாய் இராதபடிக்கு உம்மை மன்றாடுகிறேன். ஆமென். (அருள் நிறைந்த மரியாயே வாழ்க______)

நிகழ்ச்சி : 5

வியாகுல மாதா ஜெபமாலை

முதல் : சர்வேசுரா! எங்களுக்கு உதவியாக வாரும்.

எல் : கர்த்தாவே! எங்களுக்கு ஒத்தாசை செய்ய தீவிரியும்.

முதல் : தாயே உமது வியாகுலங்களை ஆழ்ந்து தியானிக்க எங்களுக்கு உதவி புரிந்தருளும்.

எல் : உம்முடைய புண்ணியங்களைக் கண்டுபாவிக்க எங்களுக்கு கிருபை புரிந்தருளும்.

முதலாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் சிமியோனின் தீர்க்கத்தரிசன வார்த்தைகளை விசுவாசத்துடன் ஏற்பதை தியானிப்போமாக.

ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

இரண்டாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் ஏரோதுக்குப் பயந்து சேசு பாலனைப் புனித சூசையப்பருடன் எகிப்துக்குக் கொண்டு போகிறதை தியானிப்போமாக.

ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

மூன்றாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் காணாமல் போன சேசுவைத் தேடி அலைகிறதை தியானிப்போமாக. ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

நான்காம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் கல்வாரிக்குச் செல்லும் வழியில் தம் திருமகனை சந்திக்கிறதை தியானிப்போமாக. ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

ஐந்தாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் தம் திருமகனின் சிலுவையடியில் நிற்கிறதை தியானிப்போமாக. ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

ஆறாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் மடியில் சேசுநாதருடைய திருச்சரீரம் வளர்த்தப்பட்டிருக்கிறதை தியானிப்போமாக. ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

ஏழாம் வியாகுல தேவ இரகசியம்

பரிசுத்த கன்னிமரியம்மாள் சேசுநாதருடைய திருச்சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் செய்கிறதை தியானிப்போமாக.

ஒரு பர. 7 அருள். ஒரு திரி.

முதல் : சேசு கிறிஸ்து நாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாய் இருக்கத்தக்கதாக.

எல் : மிகவும் வியாகுலமுள்ள கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

ஜெபிப்போமாக

கருணை சமுத்திரமாகிய திவ்விய சேசுவே, தேவரீர் அடியோர்களுக்காகப்பட்ட கணக்கில்லாத கொடூர கஸ்தி நிர்ப்பந்த வேதனைகளுக்கும், மோட்ச இராச்சியத்தில் சுதந்தரித்துக்கொண்ட அளவில்லாத பேரின்ப மகிமை வல்லபத்திற்கும், உம்முடைய நேச திரு மாதாவைப் பங்காளியாக்கத் திருவுளமானீரே சுவாமி! தேவரீர் உம்முடைய திருப்பாடுகளையும் நேச மாதாவின் வியாகுலத்தையும் பார்த்து, உமது திரு இரத்தத்தின் புண்ணிய பேறுபலன்களுக்கு அடியோர்களையும் பங்காளிகளாக்கி உமது பேரின்ப இராச்சியத்தின் ஆனந்த மகிமைக்கும் எங்களைப் பாத்திரவான்களாகச் செய்தருளும். ஆமென்.

பாடல்:
வியாகுல மாமரியே

வியாகுல மாமரியே
தியாகத்தின் மாதாவே
சிலுவை அடியினிலே
சிந்தை நொந்தழுதீரோ
பன்னிரு வயதினில் ஆலயத்தில் - அன்று
பண்புடன் புகழ்ந்தவரை
கரங்களை விரித்தே கள்வனைப்போல் - கழு
மரத்தினில் கண்டதினால் - வியாகுல......

திருமணப் பந்தியில் கனி ரசமே - அன்று
அருளிய திரு மகனை
குருதி சிந்தி கடற் காடியினை - இன்று
பருகிடக் கண்டதினால் - வியாகுல.....

கண்ணீரே சிந்திய மனிதருக்கே – அருள்
பண்ணிய செம்மறியை
மண்ணவர்க்காகத் தம்முயிரைத் – தரக்
கண்ணெதிர்க் கண்டதினால் – வியாகுல......

மாதாவின் துயரப்பாதை
(VIA MARTIS)

(சேசுநாதரின் சிலுவைப்பதை போல் மாதாவின் துயரப்பாதையையும் தியானிக்க மரியாயின் ஊழியர் சபை ஏற்படுத்திய துயரப்பாதை ஜெபம் இங்கு கொடுக்கப்படுகிறது)

தொடக்க ஜெபம்

ஓ மிகவும் துயரம் நிறைந்த மாதாவே, வேதசாட்சிகளின் இராக்கினியே, சிலுவை சுமந்து சென்ற உம் திருமகனின் வேதனைகளைக் கண்ணால் கண்ட உம்முடைய துயர வேதனைகளைக் குறித்து என்மேல் கருணைக் கண்ணோக்கியருளும். உமது துயரப் பாடுகளின் பேறுபலன்களால் என் பாவங்களை மன்னித்து உம் திருமகனிடம் மன்றாடி எனக்கு இரட்சணிய வரங்களைப் பெற்றுத் தரும்படி உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

துயர் நிறைந்த மந்திரம்

துயர் நிறைந்த மரியாயே வாழ்க. சிலுவையில் அறைப்பட்ட கர்த்தர் உம்முடனே. பெண்களுக்குள் மிகவும் கண்ணீர் சிந்தியவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய சேசுவும் கண்ணீர் சிந்தியவரே.

அர்ச். மரியாயே, சிலுவையில் உயிர்விட்ட சுதனாகிய சர்வேசுனுடைய மாதாவே, அவரைச் சிலுவையில் அறைந்த எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் மனஸ்தாபக் கண்ணீர் சிந்த வேண்டிக்கொள்ளும். ஆமென்.

பிதாவுக்கும்.......................

தேவமாதா துயரப்பட்ட முதலாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் பண்ணுகிறோம்.

அதேனென்றால், உமது வியாகுல வாளைக் கொண்டு சேசுநாதருடன் சேர்ந்து உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

சிமியோனின் தீர்க்கத்தரிசனத்தை கேட்டவுடன் மாதாவின் இருதயத்தை ஓர் வாள் ஊடுருவுகிறது

வியாகுல மாதாவே, நீர் தேவ பாலனை ஜெருசலேம் தேவாலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தபோது, சிமியோன் சொன்ன தீர்க்கத்தரிசனத்தால் உமது மாசற்ற இருதயம் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டதை நாங்கள் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

நாங்கள் சர்வேசுரனின் இரக்கத்தை ஒரு போதும் புறக்கணியாமல், சேசுகிறிஸ்து நாதருடைய துயரப் பாடுகளால் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தரோடு பரகதியில் என்றும் வாழ வரம் பெற்றுத்தர உம்மை மன்றாடுகிறோம்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க.............. பிதாவுக்கும்

- எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.

- மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக் கடவது. ஆமென்.

தேவமாதா துயரப்பட்ட இரண்டாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே.................... அதேனென்றால்................

தேவ மாதாவும் சூசையப்பரும் தேவ குழந்தையை எடுத்துக் கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போகிறார்கள்.

வியாகுல மாதாவே! உமது திருக்குமாரனை ஏரோது என்பவன் கொல்லத் தேடுகிறதை அறிந்து, நீர் திவ்விய குழந்தையை எடுத்துக்கொண்டு எஜிப்து தேசத்திற்கு ஓடிப்போய், ஏழு வருஷமளவும் மிகுந்த வியாகுலப் பட்டதை நாங்கள் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

கணக்கில்லாத பாவங்களால் உம் திரு மகனை எங்கள் இருதயங்களிலிருந்து விரட்டியுள்ளோம். இனிமேல் நாங்கள் சேசுவையும் உம்மையும் எப்போதும் எங்கள் இருதயத்தில் வைத்திருக்க வரம் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க,....... பிதாவுக்கும்............ மற்றதும்.

- எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.

- மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ,...............

தேவமாதா துயரப்பட்ட மூன்றாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே.................... அதேனென்றால்...............

பன்னிரண்டு வயதில் காணாமல் போன சேசுநாதரை துயரத்துடன் மாதா தேடுகிறார்கள்.

வியாகுல மாதாவே! நீர் தேவ பாலனைக் காணாமல் மூன்று நாட்கள் கண்ணீருடன் தேடி அலைந்ததை நாங்கள் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

சாத்தானின் கவர்ச்சியால் ஆசாபாசங்களுக்கு இணங்கி, நாங்கள் சாவான பாவத்தால் இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாதத்தைக் கண்டடைந்து, மீண்டும் ஒருபோதும் அதை இழந்துவிடாதிருக்க உம்மை மன்றாடுகிறோம்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க,....... பிதாவுக்கும்............ மற்றதும்.

– எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.

– மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ....

தேவமாதா துயரப்பட்ட நான்காம் ஸ்தலம்

திவ்விய மாதாவே.................... அதேனென்றால்................

கல்வாரிப் பாதையிலே சிலுவை சுமந்து செல்லும் சேசுநாதரை தேவமாதா சந்தித்து மினவுகிறார்கள்.

வியாகுல மாதாவே! கல்வாரிக்குச் சிலுவை சுமந்து செல்லும் பாதையில் உம் திருக்குமாரன் சேசுநாதரை நீர் கண்ணீருடன் சந்தித்ததைத் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

நன்றியற்ற நாங்கள் கட்டிக்கொண்ட பாவ அக்கிரமங்களால் உம்மையும் உம் திருமகன் சேசுநாதரையும் இவ்வளவு துயரத்துக்குள்ளாக்கிய எங்கள் மேல் இரக்கமாயிருந்து, இனிமேல் நாங்கள் எங்கள் இரட்சகருக்குப் பிரமாணிக்கமாயிருக்க அருள் புரியும். ஆமென்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க,....... பிதாவுக்கும்............ மற்றதும்.

– எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.

– மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ....

தேவமாதா துயரப்பட்ட ஐந்தாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே.................... அதேனென்றால்................

சேசுநாதர் சுவாமி சிலுவையில் அறையுண்டு உயிர் விட்டதைப் பார்த்து தேவமாதா துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிறார்கள்.

வியாகுல மாதாவே, உமது நேச குமாரன் சிலுவையில் தொங்கி மரண அவஸ்தைப் படும்போது நீர் சொல்லமுடியாத துயரம் அனுபவித்ததைத் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

தேவ சித்தத்தை நிறைவேற்றும்படி ஆண்டவர் எங்களுக்கு வரவிடும் சகல துன்ப துரித வருத்தங்களையும் நாங்கள் பொறுமையோடு ஏற்றுத் தாங்கிக் கொள்ள வலிமையருளும்படி, உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க____பிதாவுக்கும்____மற்றதும்
- எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.
- மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ________

தேவ மாதா துயரப்பட்ட ஆறாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே________அதேனென்றால்________

சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட சேசுநாதருடைய திருச்சரீரத்தை தேவமாதா தமது மடியிலே வளர்த்தியிருக்கிறார்கள்.

வியாகுல மாதாவே, உமது திருக்குமாரனுடைய திருச்சரீரத்தை உமது திருக்கரங்களில் ஏந்தி, அதிலுள்ள காயங்களைப் பார்த்து நீர் அனுபவித்த சொல்லலியலாத வியாகுலத்தை தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

அவருடைய திருக்காயங்கள் எங்கள் இருதயங்களில் பதிந்திருக்கவும், நாங்கள் எங்கள் பாவங்களுக்காக அழுது புலம்பவும் வரமருளும்படி உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க____பிதாவுக்கும்____ மற்றதும்.
- எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.
- மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் ________

தேவ மாதா துயரப்பட்ட ஏழாம் ஸ்தலம்

திவ்விய மாதாவே________அதேனென்றால்________

சேசுநாதருடைய திருச்சரீரத்தை தேவ மாதா கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

வியாகுல மாதாவே உமது திருக்குமாரனைக் கல்லறையில் அடக்கம் செய்தபின்பு உமது தனிமையை நினைத்து நீர் மட்டில்லாத வியாகுலம் அனுபவித்ததைத் தியானித்து உமக்கு ஆறுதலளிக்கிறோம்.

எங்கள் இருதயங்களில் உமது வியாகுலங்கள் பதியவும் அவைகள் தேவ சிநேகத்தால் பற்றி எரியவும், நாங்கள் உமது மாசற்ற இருதயத்தையும் சேசுவின் திரு இருதயத்தையும் விட்டுப்பிரிந்து ஒருபோதும் தனிமையாய் இராதபடிக்கு உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

துயர் நிறைந்த மரியாயே வாழ்க____பிதாவுக்கும்____மற்றதும்.
- எங்கள் பேரில் தயவாயிரும் தாயே, எங்கள் பேரில் தயவாயிரும்.
- மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள்________

முதல் : மகா வியாகுலம் நிறைந்த கன்னிகையே,
எல் : எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

செபிப்போமாக

ஆண்டவராகிய சேசுவே, சிமியோனின் தீர்க்கதரிசனத்தின்படி, நீர் பாடுபட்டபோது உமது நேச கன்னித்தாயாருடைய மகா மதுரமான இருதயம் வியாகுலவாட்களால் ஊடுருவப்படும்படித் திருவுளமானீரே, உம்முடைய திரு மாதாவின் துயர வியாகுலங்களை வணங்கிப் போற்றுகிற நாங்கள், அர்ச். வியாகுல மாதாவைப் பக்தியோடு நேசித்த சகல புண்ணியவான்களின் மகிமையுள்ள பேறுபலன்களினாலும் மன்றாட்டுக்களினாலும் உமது திருப்பாடுகளின் இரட்சணியப் பலன்களை அடைந்து கொள்ள தயை புரிந்தருளும். ஆமென்.

மரியாயின் மாசற்ற இருதயத்தின் பேரில் பாடல்

("சேசுவின் மதுர" என்ற மெட்டில் பாடலாம்)

1. தேவனின் தாயே, மாமரியாயே, மாசில்லா இருதயமே,
மைந்தர்கள் வந்தோம் தாயுந்தன் பாதம், தாபரித்தாள்வீரம்மா.
2. தேவ பிதாவின் திவ்விய மகளே, தேவனின் வல்லபமே,
ஏதுமில்லாத ஏழையைப் போல, எங்களுக்காய் வாழ்ந்தீர்.
3. திரித்துவ இரண்டாம் ஆளெனும் தேவ, திருச்சுதன் தாயாரே,
ஞானத்தின் ஊற்றே, ஞாலத்தில் மறைந்து, தாழ்மையின் உருவானீர்.
4. பரிசுத்த ஆவி ஆன சர்வேசுரன், பத்தினியானவரே,
பற்றியே எரியும் தேவனின் சிநேகம், பாவிகள் எமக்கருளும்.
5. தாவீது அரச குல மணி விளக்கே, தாரணியில் உமது
தனையனை மாட்டுத் தொழுவத்தில் ஏனோ, தாசருக்காய்ப் பயின்றீர்.
6. ஏரோதுக் கஞ்சி எஜிப்தினை நோக்கி, ஏகிய தேனோ அம்மா?
எதிரிகள் பயமோ தூதர்கள் இல்லையோ, எங்களுக்காக வன்றோ?
7. பன்னிரு வயதில் பாலகன் சேசை, காணாது கலங்கிய தேன்?
பிள்ளைகளான எங்களையன்றோ, தேடிக் கண்ணீர் வடித்தீர்?
8. கைதியைப் போலே கயிறுகளாலே, கட்டியே இழுத்தனரே,
கனத்த வெஞ்சிலுவை சுமத்திய மகனை, கண்டென்னவோ நினைத்தீர்.
9. கசையடியாலும் முள்முடியாலும், கான்ற செவ்வீருடனே
காறிய உமிழால் கறைப்பட்ட முகத்தை, கண்டு கண்ணீர் வடித்தீர்.
10. கண்ணெதிராக கண்மணி மகனை, கயவர்கள் சிலுவையிலே
அறைந்தனரே எம் அன்னையே அதனால், அழுது மனம் பதைத்தீர்.
11. மகனுயிர் பிரிய அருகினில் நின்று, மறுகிய மாதாவே,
அவர் உயிர் தெழுந்த ஆறுதலடைந்த, அன்னையே, நீர் வாழ்க!

மூன்றாம் பாகம்

திவ்விய பலிபூசை, பரிகார நன்மை

(இப்பகுதியில் முதல் சனிபக்தியின் முக்கிய நிபந்தனைகளாகிய பாவ சங்கீர்த்தனம், பரிகார நன்மை, ஞாயிறு கடன் பூசை ஆகியவை நிறைவேற்றப்படும். பாவ சங்கீர்த்தனம் செய்பவர்களுக்காக கொடுக்கப்படும் இந்த இடைவெளி நேரத்தில், பக்தர்கள் இந்நூலில் காணப்படும் பல்வேறு ஜெபங்களையோ அல்லது பக்தி முயற்சிகளையோ, தனிமையில் அல்லது சிறு குழுக்களில் அனுசரிக்கலாம். பூசையில் நன்மை வாங்குபவர்கள் உபவாசம் அனுசரிக்க வேண்டும்.)

பலி பூசைக்கு முன் நேரமிருந்தால், அல்லது நிறைய பேர் பாவ சங்கீர்த்தனத்திற்குக் காத்திருந்தால் சிலுவைப்பாதை (பக். 45) சொல்லலாம். அதிகாலை 12:30 மணிக்கு பலி பூசை ஆரம்பமாகும்.

பலி பூசை முடிந்தபின் இடைவெளி

(இந்த இடைவெளியின் போது நான்காம் பாகத்தில் உற்சாகமுடன் கலந்து கொள்வதற்கு ஏதுவாக சூடான பானம், சிற்றுண்டி ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.)

நான்காம் பாகம்

பரிகாரத் திருமணிகள்

(திவ்விய நற்கருணை ஸ்தாபகம் செய்யப்பட்டு பரிகாரத் திருமணிகள் நடைபெறும் இப்பகுதியில் அதிக ஜெபம். அதிகப் பரித்தியாகம் செய்ய முன் வருகிறவர்கள் கலந்து கொள்வார்கள். திவ்விய நற்கருணை சன்னிதானத்தில் உட்காருவதும் படுப்பதும் கூடாது. குழந்தைகள், வனமுற்றவர்கள், வியாதியஸ்தர்களுக்கு விதிவிலக்கு உண்டு.)

திவ்விய நற்கருணை ஸ்தாபகம்

பாடல்: ஓ சாலுத்தாரிஸ் ஓஸ்தியா (ஞான ஜீவிய கையேடு பக். 293)

ஆராதனைப் பிரகரணங்கள்:

பின்வரும் திருமணிகளின் தொடக்கத்தில் 5 ஆராதனைப் பிரகரணங்கள் (திருக்குடும்ப பக்தி மாலையிலிருந்து) வாசிக்கலாம். திருமணிகளின் முடிவில் நெற்றி தரையில்பட பாத்திமா சம்மனசின் ஜெபங்கள் சொல்லலாம்.

பாடல்: (எழுந்து நின்று) **சேசுவே எழுந்தருளுவீர்**

சேசுவே எழுந்தருளுவீர்
எனது நீச இருதயத்தில்
நேசிப்பேன் உம்மை மாத்திரமே
நித்திய நித்திய காலமுமே

1. சேசுவே அப்பக் குணங்களுள்
எனக்காக மறைந்திருக்கிறீர்
ஆசையாய் விசுவசிக்கிறேன்
அதை நீர்தாமே சொன்னபடியால்

2. ஈதோ நமது சரீரமே
இதை நீங்கள் எடுத்துப் புசிப்பீர்
யாதொருவன் இதைப் புசித்தால்
எப்போதுமே பிழைப்பான் என்றீரே

3. நீங்களும் அப்பத்தை எடுத்து
நேரே நமது சரீரமாக்கி
வாங்கிப் புசிக்கக் கொடுமென்று
வசனித்தீர் குருமார்களுக்கே

4. தேவ நற்கருணை விருந்தில்
திவ்விய சேசு நாதரல்லாமல்
மாவினால் செய்த அப்பம் ஒரு
மணலளவென்றாலும் இல்லையே

5. அப்பம் போல் வெளியே தோன்றிட
ஆண்டவர் அதனுள் இருக்கிறார்
எப்படி இது நடக்குமோ
எனது புத்திக்குள் அடங்காதே

6. கண்கள் தவறிப் போய்விடினும்
கர்த்தர் சொன்ன சொல்லுத் தவறுமோ
என் முழுமன ஆவலோடே
இதை எப்போதும் விசுவசிப்பேன்

7. பக்தியோடிதைப் புசிப்பவன்
பாக்கியவந்தனாக இருப்பான்
சுத்தமின்றிப் புசிப்பவனோ
யூதாசைப் போல் நாசமாகுவானே

திருமணி : 1

தவ ஜெபமாலைத் திருமணி

(திவ்விய நற்கருணை சந்நிதியில் பக்தியுடன் முழந்தாளிட்டு)

முகவுரை

"தேவ நீதியின் பாத்திரம் நிரம்பி நிற்கிறது" (மாதா செய்தி). ஏனென்றால் அளவில்லாதவரும் இரக்கமுள்ளவருமான கடவுளுக்கு எதிராக கணக்கில்லாத பாவங்கள் கட்டிக்கொள்ளப் படுகின்றன இப்பாவங்கள்

ஜெபத்தாலும் பரித்தியாகங்களாலும் தபசு முயற்சிகளாலும் பரிகரிக்கப்பட வேண்டிய அவசியம் இன்று அதிகம் உள்ளது. இதற்கு ஒரு உத்தம கருவியாக நமதாண்டவரே இந்த "தவ ஜெபமாலை" யை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

"என் வார்த்தைகளைக் கேட்டு நடங்கள். பிரமாணிக்கம் உள்ளவர்களைக் கொண்டு, அவர்கள் கொஞ்சப் பேராயிருந்தாலும், என் இராச்சியத்தை ஸ்தாபிப்பேன்........ அவர்கள் உண்மையான பாவப் பரிகாரம் செய்யட்டும், தவ ஜெபமாலை சொல்லட்டும்.... துறவற இல்லங்களில் தவ ஜெபமாலை சொல்லப்பட வேண்டும்.... விசுவாசிகளும் அதை அன்புடனும் என்னுடையப் பாடுகளை நினைத்துக்கொண்டும் சொல்லி வருவார்களாக" என்று நமதாண்டவர் விரும்பிக் கேட்டுள்ளார் (மெக்சிக்கொ தூதன்).

தவ ஜெபமாலையில், "பரிசுத்த ஆவியின் மந்திர மாலை" யும் இணைந்து பின்னப்பட்டுள்ளது. எனவே இது ஒரு மிக அழகிய, தவம் கலந்த ஜெபமாக விளங்குகிறது.

நம்முடைய சொந்த பாவங்களுக்குப் பரிகாரமாகவும் உலகத்தின் பாவங்களுக்காகவும் இத்தவ ஜெபமாலையைப் பக்தியுடன் அடிக்கடி சொல்லி வருவோமாக.

- அர்ச். சிலுவை................
- உத்தம மனஸ்தாப மந்திரம்.............
- சர்வேசுரா எங்களுக்கு உதவியாக வாரும்.........
- அளவில்லாத சகல நன்மையும் சுரூபியாயிருக்கிற சர்வேசுரா சுவாமி....
- விசுவாசப் பிரமாணம்..........(ஜெபமாலையின் பாடுபட்ட சிலுவையில்)
- பரலோக மந்திரம்........(பெரிய மணியில்)
- 3 அருள் நிறைந்த மந்திரம்..... (சிறிய மணிகளில்) பிதாவுக்கும்..................

தொடக்க ஜெபம்

ஆண்டவரே! உமது திரு நாமத்தையும், உமது மாதாவின் திரு நாமத்தையும் வாழ்த்தி ஸ்துதிக்க என் நாவைத் திறந்தருளும். சகலமான பொல்லாத வீண் புறத்தி விசாரங்களினின்று என் இதயத்தைப் பரிசுத்தப்படுத்தும். நான் இந்த தவ ஜெபமாலையைச் சரியான கவனத்தோடும் பக்தியோடும் ஜெபிக்கும்படியாகவும், தேவரீருடைய திருச்சமூகத்தில் நான் கேட்கும் மன்றாட்டை அடையும்படியாகவும், என் புத்திக்குப் பிரகாசத்தையும் என் நேசத்திற்கு அக்கினியையும் கொடுத்தருளும் சுவாமி.

ஆண்டவரே! நீர் பூமியில் இருக்கும்போது எந்தக் கருத்தோடு சர்வேசுரனுக்குப் புகழ் புரிந்திரோ அந்தக் கருத்தோடு இத் தவ ஜெபமாலையை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

அர்ச். மரியாயே! எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்துவின் தாயே, உம்முடைய தயை விழியால் என்னை நோக்கி, இத் தவ ஜெபமாலையில் என்னோடிருந்து, என் பாவங்களுக்கெல்லாம் நான் தகுந்த பரிகாரம் செய்யும்படி உம்முடைய நேச குமாரனிடத்தில் மன்றாடும். ஆமென்.

முதலாவது துக்க தேவ இரகசியம்

சேசுநாதர் சுவாமி பூங்காவனத்தில் இரத்த வேர்வை வேர்த்ததை தியானித்து சர்வேசுரனுடைய சித்தத்துக்கு அமைந்து நடக்கும் வரத்தைக் கேட்போமாக.

ஒரு பர., 10 அரு. சொல்லும்போது கைகளை சிலுவை அடையாளமாய் விரிக்கவும். திரித்துவ தோத்திரம் சொல்லும்போது கைகளை இறக்கவும். பத்து மணி முடிவில் ஓ என் சேசுவே ......

பாடல்

முன்னாள் வனத்தினில் நீர் மன்னா தந்தீர்
இன்னாள் எம் அன்னமாய் உம்மை ஈந்தீர்

நேசாதி நேசமே ஆசார தேவனே
ராஜாதி ராஜாவே நாளும் ஸ்தோத்திரம்

2. ஓர் திரைமேகத்தே ஜோதிமறைத்
தோதினீர் கற்பனை மோயீசற்கே (நேசாதி)

3. நாதா நும் ஜோதியை மா அப்பத்தே
ஏதுக்காய் மறைத்தீர் மீள இப்போ (நேசாதி)

4. தாபோர் மலையில் நும் நேர் உருவம்
பார்க்கொண்ணா துன்னியோ நீர் ஒளித்தீர் (நேசாதி)

5. எம்பால் நீர் காட்டும் மா அன்பிற்கீடாய்
எம்பணி ஆற்றிலோம் அன்பில்லார் யாம் (நேசாதி)

6. பூங்காவில் நீர் மிக ஏங்கி வாட
பாங்காய் ஓர் ஆறுதல் தந்தோமில்லை (நேசாதி)

7. ஓங்கும் சிலுவையில் ஏங்கும் போதும்
ஆங்கோர் ஆறுதல் யாம் ஆற்றவில்லை (நேசாதி)

வாக். : தாயே நீர் எப்பொழுதும் எங்கள் உதவியாயிருக்கிறீர்.

ப. வா. : ஆகையால் உம்மை மன்றாடுகிறேன் எழுந்தருளி வாரும்.

வாக். : இனிமையும் கருணையுமுள்ள எங்கள் தாயே.

ப.வா. : எனக்கு உதவி செய்யத் தீவிரியும்.

வாக். : கடவுளின் தாயான கன்னி மரியாயே,

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

பரிசுத்த ஆவியின் மந்திரமாலை

(அதிகாலைச் செபமும் திருப்புகழ்மாலையும்)

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல். : ஆமென்

வாக். : ஆண்டவரே என் நாவைத் திறந்தருளும்

ப. வா. : என் வாயும் உமது புகழை எடுத்துரைக்கும்.

வாக். : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்.

ப. வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்

வாக். : பிதாவுக்கும் சுதனுக்கும் ....

ப. வா. : ஆதியிலே .... அல்லேலூயா

(தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக் கடவது)

புகழ் கீதம்

1. கிறிஸ்துநாதரின் உற்பவத்தையும் அவருடைய மானிடப் பிறப்பையும் அறிவிக்க மோட்சத்திலிருந்து சம்மனசானவர் பூமிக்கு அனுப்பப்பட்ட போது கன்னிகையான அமலோற்பவ மரியாயை அவ்வுன்னத அந்தஸ்துக்குத் தயாரித்த பரிசுத்த ஆவியான சர்வேசுரனுடைய உரு மாற்றியமைக்கும் வரப்பிரசாதம், மனுக்குலத்தை சுத்திகரித்துப் பலப்படுத்துவதாக!

2. வளமும் செயலாற்றலும் பொருந்திய பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம்மேல் ஒளிர்வதாக.

   அவருடைய பிரகாசமுள்ள தெய்வீகக் கதிர்கள் இருளிலே உழலும்
   மனுக்குலத்தின் ஒவ்வொரு இனத்தாருடையவும்
   மனத்தையும் இருதயத்தையும் ஆத்துமத்தையும் ஊடுருவக்கடவனவாக!

முன்னுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே, தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.
அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக் : உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடும்.

ப. வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.
வாக் : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.
ப. வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

செபிப்போமாக

முதல் : சர்வேசுரா உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணைபுரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திகரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதரின் பெயராலே.
எல். : ஆமென்.
வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.
ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.
வாக். : ஆண்டவரை வாழ்த்துவோம்.
ப.வா. : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.
முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.
எல். : ஆமென்.

இரண்டாவது துக்க தேவ இரகசியம்

சேசுநாதர் சுவாமி கற்றூணில் கட்டுண்டு அடிக்கப்பட்டதை தியானித்து சரீர சுகத்தைப் பரித்தியாகம் செய்யும் வரத்தைக் கேட்போமாக. (கைகளை விரித்து, ஒரு பர. 10 அரு. ஓ என் சேசுவே)

பாடல்

1. பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய ரத்தம்
கோடி பாவந் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

கெட்டுப் போனோம் பாவியானோம்
கிருபை செய்யும் நாதரே
மட்டில்லா கருணை எம்மேல்
வைத்திரங்கும் சேசுவே

2. துஷ்ட யூதர் தூணினோடு
தூய கைகள் கட்டியே

கஷ்டமா யடித்த போது
கான்ற செந்நீர் எந்துணை (கெட்டுப் போனோம்)

3. சென்னி மேற் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த ரத்தத்தால்
சர்வ பாவம் நீங்குமே (கெட்டுப் போனோம்)

4. நீண்ட இருப்பாணி கொண்டு
நிஷ்டூரர் கை கால்களை
தோண்டிய போது சொரிந்த
தூய ரத்தம் எந்துணை (கெட்டுப் போனோம்)

5. மெத்த குரோ தத்தினாலே
விலாவையும் ஓர் சேவகன்
குத்தவே சொரிந்த ரத்தம்
கொண்டு எம்மை மீட்பீரே (கெட்டுப் போனோம்)

6. ஐந்து காயத்தால் வடிந்த
அரிய ரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவந்தீர்க்க
வேண்டு கின்றோம் சேசுவே (கெட்டுப் போனோம்)

வாக் : தாயே நீர் எப்பொழுதும் எங்கள் உதவியாய் இருக்கீறீர்.

ப.வா. : ஆகையால் உம்மை மன்றாடுகிறேன் எழுந்தருளி வாரும்.

வாக் : இனிமையும் கருணையுமுள்ள எங்கள் தாயே

ப.வா. : எனக்கு உதவி செய்யத் தீவிரியும்.

வாக் : கடவுளின் தாயான கன்னி மரியாயே

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

முதல் கணித ஜெபம்

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக் : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக் : பிதாவுக்கும் சுதனுக்கும் ....

ப.வா : ஆதியிலே.........அல்லேலூயா (தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக்கடவது)

புகழ் கீதம்

1. பிரகாசமுள்ள கன்னிகையிடமிருந்து பிறந்த சேசுகிறிஸ்துநாதர் கல்வாரி மலையிலே

சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். ஆனால் மூன்றாம் நாள் மகிமையோடு ஜெயசீலராய் உயிர்த்தெழுந்தார்.

2. சிலநாட்கள் சென்ற பின்பு அவர் தம் சொந்த வல்லமையால் மோட்சத்திற் கெழுந்தருளிச் சென்றதைக் கண்ட அந்நேரத்தில் அவருடைய மெய்யான சீஷர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

முன்னுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளி வாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.

அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக். : உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடும்.

ப.வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா, உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணை புரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய சேசு கிறிஸ்துநாதரின் பெயராலே.

எல். : ஆமென்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக். : ஆண்டவரை வாழ்த்த கடவோம்.

ப.வா : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல் : ஆமென்.

மூன்றாவது துக்க தேவ இரகசியம்

சேசுநாதர் சுவாமி முள்முடி சூட்டப்பட்டதை தியானித்து நிந்தை அவமானங்களைப் பொறுமையுடன் சகிக்கும் வரத்தைக் கேட்போமாக. (கைகளை விரித்து, ஒரு பர. 10 அரு. ஓ என் சேசுவே..)

பாடல்

1. ஜீவிய நாள் முழுதும் ஆவி சோரும் பொழுதும்
தேவனே சேசுவே எம் ஜீவ ஒளியாயிரும்

ஆசீர் தந்தருள்வீர் திவ்ய சேசுவே
அன்பால் எம் இதயம் தகனமாக்கும்
ஆண்டவரே தேவனே எம் தஞ்சமாயிரும் (2)

2. தீங்குசூழ் பூவின்மைந்தர் ஓங்கு வினையகல
பூங்காவில் ரத்தம் வேர்த்து ஏங்குறார் தேவ மைந்தர் (ஆசீர்)

3. யூதாஸ் என்னும் சீஷனால் யூதர் கைச் சிறைப்பட்டு
அன்னாஸ் கைப்பாஸின் முன்னால் அநேக நிந்தைப் பட்டீர் (ஆசீர்)

4. கோரமாய் அடிபட்டு மரணத் தீர்வை பெற்று
பாரச்சிலுவை தாங்கி தூரவழி நடந்தீர் (ஆசீர்)

5. கள்வரிருவரிடை கல்வாரி மலைமீதே
சிலுவையில் அறைபட்டீர் நல்லதாய் நொந்தழுதார் (ஆசீர்)

6. தேவதாய் நெஞ்சம் நோக பாவிகள் எம்மை மீட்க
தேவ சுதனே நீவிர் ஆவிதனைத் துறந்தீர். (ஆசீர்)

வாக். : தாயே நீர் எப்பொழுதும் எங்கள் உதவியாயிருக்கிறீர்.

ப.வா. : ஆகையால் உம்மை மன்றாடுகிறேன் எழுந்தருளி வாரும்.

வாக். : இனிமையும் கருணையுமுள்ள எங்கள் தாயே.

ப.வா. : எனக்கு உதவி செய்யத் தீவிரியும்.

வாக். : கடவுளின் தாயான கன்னி மரியாயே

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

மூன்றாம் கணித ஜெபம்

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக். : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக். : பிதாவுக்கும சுதனுக்கு ....

ப.வா. : ஆதியிலே .... அல்லேலூயா
(தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக் கடவது)

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

புகழ் கீதம்

1. பரம பிதாவின் பரிசுத்த ஆவியானவர்
பயத்தால் பீடிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் மீது
மோட்சத்திலிருந்து இறங்கி வந்து
தைரியமும் ஒளியும் திடமும் வல்லமையும் தந்து
ஆறுதலையும் சிநேகத்தின் அக்கினியையும் அளித்தார்.

2. கடவுளுடைய ஆறுதலானவரின் வருகையால்
அவர்களுடைய அச்சம், பற்றியெறியும் அன்பாக மாற
அதனால் அவர்கள் கடவுளின் கனிந்த அன்பு
தங்களை அனாதைகளாக பூமியில் விடவில்லை
என்று உணர்ந்து கொண்டார்கள்.

முன்னுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.
அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக். : உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடும்.

ப.வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணைபுரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திகரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவராகிய சேசு கிறிஸ்து நாதரின் பெயராலே.

எல். : ஆமென்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக். : ஆண்டவரை வாழ்த்தக்கடவோம்.

ப.வா. : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல். : ஆமென்.

ஆறாம் கணித ஜெபம்

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக். : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்.

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக். : பிதாவுக்கும் சுதனுக்கும்....

ப.வா. : ஆதியிலே .... அல்லேலூயா (தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக் கடவது)

புகழ் கீதம்

1. அப்போஸ்தலர்களும் அவர்களுடன் ஜெபத்தில் ஈடுபட்டிருந்தவர்களும்
பரிசுத்த ஆவியின் ஏழு வரங்களையும் பெற்றார்கள்.
தேவ வார்த்தையின் மீது ஆவலால் தூண்டப்பட்டு
ஆண்டவருடைய கட்டளையை ஏற்று
முற்றிலும் மாற்றம் அடைந்தவர்களாய்
உலகமெங்கும் போதிக்கப் புறப்பட்டார்கள்.

2. குரூர சித்திர வதைகளுக்கும் அஞ்சாமல்
வேதசாட்சி நிந்தைக்கும் பயப்படாமல்
அப்போஸ்தலர்கள் எங்கும் பயணஞ் செய்து
சத்தியத்தின் விதையை விதைத்தார்கள்.
அந்த விதை முளைத்து ஆன்மாக்களில்
புண்ணிய பேறுபலன்களை விளைவித்தன.

முன்னுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும். அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக். : உம்முடைய ஞானக்கதிர்களை வரவிடும்.

ப.வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணைபுரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திகரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவராகிய சேசு கிறிஸ்து நாதரின் பெயராலே.

எல். : ஆமென்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக். : ஆண்டவரை வாழ்த்தக் கடவோம்.

ப.வா. : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல். : ஆமென்.

ஒன்பதாம் கணித ஜெபம்

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக். : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்.

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக். : பிதாவுக்கும் சுதனுக்கும்....

ப.வா. : ஆதியிலே .... அல்லேலூயா (தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக் கடவது)

புகழ் கீதம்

1. தெய்வீகக் கொடையானவரே! வியப்புக்குரிய நாமங்களைக் கொண்டவரே!
உன்னத சர்வேசுரனின் சிநேகமாயிருக்கிறீர். ஜீவிய ஊற்றே!
தேவனின் அன்பே! பெருமூச்செறிகிறவர்களின் ஆறுதலே!

அப்போஸ்தலர்களில் அக்கினியாய் சாந்தமாய் தெள்ளொளியாய்
மேல்மாடத்தில் அனைவரிலும் மகிழ்ச்சியாயிருக்கிறீர்.
இவ்வுலகில் எங்கள் போராட்டம் முடிந்தபின்
நித்திய வீட்டில் உம்மை வாழ்த்துவதே
எங்கள் அன்பின் கீதமாயிருக்கக்கடவது.

சுச்ருஷை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல் : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.
அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக் : உம்முடைய ஞானக்கதிர்களை வாரவிடும்.

ப.வா : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக் : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணைபுரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திகரிக்கப்பட்டு
மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதரின் பெயராலே.

எல் : ஆமென்.

வாக் : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக் : ஆண்டவரை வாழ்த்தக் கடவோம்.

ப.வா : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல் : ஆமென்.

நான்காவது துக்க தேவ இரகசியம்

சேசுநாதர் சுவாமி சிலுவை சுமந்து கொண்டு போனதை தியானித்து நீடித்த பொறுமை என்கிற வரத்தைக் கேட்போமாக. (கைகளை விரித்து, ஒரு பர. 10 அரு. ஓ என் சேசுவே.)

பாடல்

இரக்க மென்றுஞ் சுரக்கும் திவ்ய சேசு நாதரே சுவாமி
எளியோர் செய்த பாவம் யாவையும் இரங்கி பொறுப்பீரே

சரணங்கள்

1. திவ்ய பிதா முனிவின் கனம் தீர்த்து மனுவோர்க்கு
தேவுலகின் வழிகாட்டவே திவ்ய பலி ஆனீர்

2. யூதாஸ் என்ற கொடுந் துரோகி உம் நேசம் தயை பாரா
ஆசாரியர் தம்கை உம்மை ஐயோ காட்டிக் கொடுத்தான்

3. கைப்பாஸென்போன் அரண்மனையில் கள்ளனைப் போல் நிற்க
கசடன் ஒரு சேவகன் உம் கன்னத் தடித் தறைந்தான்

4. ஐயோ ஐயோ நானே, உம்மை அறிந்தும் அறியாமல்
ஆசாபாசம் எனும் யூதர் கை அளித்தேன் பெரும்பாவி

5. கற்றூணிலே உம்மை யான் சேர்த்துக் கட்டி பவமென்னும்
கசையால் ஐயாயிரச் சில்வானம் கன்னெஞ்சுடன் அடித்தேன்

6. நீண்ட முள்ளின் முடியானதை நின் தலையில் வைத்து
நினைவால் செய்த பாவத்தால் உந்தன் நெற்றிவர அடித்தேன்

7. பாரமுள்ள சிலுவை மரம் பாவிகள் உம் தோள்மேல்
பரமண்டலம் அஞ்ச வைத்தார் பார்த்தீரோ வானவரே

8. அந்தோ பாவி நீயே உந்தன் ஆண்டவரைச் சிலுவை
அறைந்தாய் பாவம் எனும் ஆணியால் ஐயோ பெருந்துரோகம்

9. திருக் காயங்கள் தனில் நின்றோடும் திரு ரத்தமே உனக்காய்
திவ்ய பிதா தமை வேண்டலால் திரும்பாய் மனம் கல்லோ

10. மனுவோர் எல்லாம் கரையேற்றவே வந்த தேவ சுதனே
வலியத்தம துயிரைத் தந்து மரித்தார் சிலுவையிலே

11. வானம் பூமி அதிரப் பெரும் மலைகள் பிளந்தசைய
வன் மனனாம் பாவி நீயே மனந்திரும்பா தேனோ!

12. சுவாமி உந்தன் தயையால் மனந் திரும்பிக் கண்ணீர் சிந்தி
தூய உந்தன் பதம் அண்டினேன் துஷ்டன் பெரும்பாவி

13. தந்தை என்றறிந்தும் உம்மை சற்றும் மதியாமல்
நிந்தை செய்து பழித்தேனேயான் நீசன் பெரும் பாவி

14. உடலில் உயிர் இருக்குமட்டும் உம்மை மறவேன் நான்
உம்பாதமே என் தஞ்சமே ஊழியன் நான் சுவாமி

வாக். : தாயே நீர் எப்பொழுதும் எங்கள் உதவியாயிருக்கிறீர்.

ப.வா. : ஆகையால் உம்மை மன்றாடுகிறேன் எழுந்தருளி வாரும்.

வாக். : இனிமையும் கருணையுமுள்ள எங்கள் தாயே.

ப.வா. : எனக்கு உதவி செய்யத் தீவிரியும்.

வாக். : கடவுளின் தாயான கன்னி மரியாயே.

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

வெஸ்வெர் என்னும் மாலைச் செபம்

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக். : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்.

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக். : பிதாவுக்கும் சுதனுக்கும்....

ப.வா. : ஆதியிலே .... அல்லேலூயா (தபசு காலத்தில் : நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திரமுண்டாகக் கடவது)

புகழ் கீதம்

1. நித்திய பிதாவின் வல்லப கரமே! வலிமையே! திடமே!
எங்களுக்கு இத்தருணம் உதவிட வாரும்.
எல்லா ஆசீரும் எங்களுக்குத் தாரும்.
சாத்தானையும் அவன் படைகளையும் பாதாள இருளில் தள்ளுவீராக.
உமது வல்லமையால் பாதுகாக்கப்பட்டு
மோட்ச பேரின்பத்தில் நாங்கள் வந்து சேருவோமாக.

2. ஓ இனிய அபிஷேகமானவரே! ஞானமே!
அத்தனையும் அறியும் பிரகாச கடவுளே!
உமது சமுகத்தில் நாங்கள் ஒப்புக்கொடுக்கிற
புகழ்ச்சிக் கீதத்தை ஏற்றருள்வீராக.
சர்வேசுரனின் வல்லப கரமே!
எல்லாத் தீமையிலிருந்தும் எங்களைக் காத்தருளும்.
எங்கள் நம்பிக்கையெல்லாம் உம்மீது வைக்கிறோம்.
நம்பிக்கையுடனே உம்மை வாழ்த்துகிறோம்.

மூன்றுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும். அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக். : உம்முடைய ஞானக் கதிர்களை வரவிடும்.

ப.வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணைபுரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திகரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கிற எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்து நாதரின் பெயராலே.

எல். : ஆமென்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக். : ஆண்டவரை வாழ்த்தக் கடவோம்.

ப.வா. : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல். : ஆமென்.

ஐந்தாவது துக்க தேவ இரகசியம்

சேசுநாதர் சுவாமி சிலுவையில் அறையப்பட்டு மரித்ததை தியானித்து உத்தம மனஸ்தாப வரத்தைக் கேட்போமாக. (கைகளை விரித்து. ஒரு பர. 10 அரு. ஓ என் சேசுவே..)

ஆண்டவரின் ஐந்து திருக்காயங்களும் மாதாவின் மறைந்த காயங்களும்

பாடல்

ஆணி கொண்ட உம் காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன்
பாவத்தால் உம்மைக் கொன்றேனே-2
ஆயரே என்னை மன்னியும்-2

1. வலது கரத்தின் காயமே

மாதாவின் மறைந்த காயங்களை
அன்புடன் முத்தி செய்கின்றேன்
பாவத்தால் நிந்தை செய்தேனே-2
தாயாரே என்னை மன்னியும்-2

1. வலது கரத்தின் காயமே

அழகு நிறைந்த ரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

2. இடது கரத்தின் காயமே
கடவுளின் திரு அன்புருவே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

3. வலது பாதக் காயமே
பலன் மிகத்தரும் நற்கனியே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

4. இடது பாதக் காயமே
இதம் மிகத் தரும் பொக்கிஷமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

5. திருவிலாவின் காயமே
அருள் சொரிந்திடும் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

வரப்ரசாதத்தின் வாய்க்காலே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

2. இடது கரத்தின் காயமே
இரக்கம் சுரக்கும் நீர்ச்சுனையே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

3. வலது பாதக் காயமே
வானகம் நுழையும் வாசலே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

4. இடது பாதக் காயமே
இரட்சண்யக் கன்னியின் உதரமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

5. திருவிலாவின் காயமே
திரியேக தேவனின் ஆலயமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

வாக். : தாயே நீர் எப்பொழுதும் எங்கள் உதவியாயிருக்கிறீர்.

ப.வா. : ஆகையால் உம்மை மன்றாடுகிறேன் எழுந்தருளி வாரும்.

வாக். : இனிமையும் கருணையுமுள்ள எங்கள் தாயே.

ப.வா. : எனக்கு உதவி செய்யத் தீவிரியும்.

வாக். : கடவுளின் தாயான கன்னிமரியாயே.

ப.வா. : உம்முடைய பரிசுத்த அமலோற்பவம் வாழ்த்தப்படுவதாக.

இரவு சயன ஆராதனை

முதல் : பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதம் நம் மனதையும் இருதயத்தையும் பிரகாசிக்கச் செய்வதாக.

எல் : ஆமென்.

வாக். : எங்கள் இரட்சகரே எங்களுக்குத் தயவு காட்டும்.

ப.வா. : எங்கள் பாவங்களால் மூட்டப்படும் உமது நீதியான கோபத்தை அமர்த்தியருளும்.

வாக் : சர்வேசுரா எனக்கு உதவியாக வாரும்.

ப.வா. : கர்த்தாவே எனக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியும்.

வாக். : பிதாவுக்கும் சுதனுக்கும் .... அல்லேலூயா

(தபசு காலத்தில்: நித்திய மகிமைக்கு இராஜாவாகிய ஆண்டவரே உமக்கே ஸ்தோத்திர முண்டாகக்கடவது)

புகழ் கீதம்

1. பிதாவுடையவும் சுதனுடையவும் சிநேகமாயிருப்பவரே வாரும்
எப்பொழுதும் எங்கள் உதவியாயிரும்
தவறும் எங்கள் பாதையைச் சீர்படுத்தும்
எங்கள் மனதை உம் தெய்வீக ஒளியால் பிரகாசிப்பீராக

2. விரைவாய் வந்து எங்கள் மனங்களை ஒளிர்வித்து
எங்கள் ஆத்துமங்களில் மோட்ச வரங்களைப் பொழிந்து
நீதிபரரின் முன் நாங்கள் வரும்போது
வலது பக்கத்தில் எங்களை நிறுத்தியருளும்.

முன்னுரை வாக்கியம்

முதல் : பரிசுத்த ஆவியே தேவரீர் எழுந்தருளிவாரும்.

எல். : உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பும்.
அவைகளில் உம்முடைய சிநேக அக்கினியை மூட்டியருளும்.

வாக். : உம்முடைய ஞானக் கதிர்களை வரவிடும்.

ப.வா. : அதனால் உலகத்தின் முகத்தைப் புதுப்பிப்பீர்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா. : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

ஜெபிப்போமாக

முதல் : சர்வேசுரா, உம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் எங்களுக்கு இடைவிடாமல் துணை புரிந்தருளும். இதனால் எங்கள் இருதயங்கள் உம்முடைய இரக்கத்தால் சுத்திரிக்கப்பட்டு மீட்படையச் செய்வீராக. உம்மோடு பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் சர்வேசுரனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய சேசு கிறிஸ்துநாதரின் பெயராலே.

எல். : ஆமென்.

வாக். : ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும்.

ப.வா : என் கூக்குரல் உம்மிடம் வருவதாக.

வாக். : ஆண்டவரை வாழ்த்தக் கடவோம்.

ப.வா : சர்வேசுரனுக்கு நன்றியுண்டாவதாக.

முதல் : மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவது.

எல் : ஆமென்.

இறுதி ஜெபம்

முதல் : ஓ பரிசுத்த ஆவியான தேவனே! உம்முடைய மகிமைக்காக நாங்கள் ஜெபித்த இந்த மந்திர மாலை முடிவடையும் இவ்வேளையில் உம்மை மன்றாடுகிறோம். தேவரீர் உமது பரலோக ஏவுதல்களால் எங்களைச் சந்தித்து நாங்கள் என்றும் மோட்சத்தில் வாழும் வரத்தை எங்களுக்கு அருள்வீராக.

எல் : ஆமென்.

முதல் : ஓ பரிசுத்த ஆவியே! என் ஆத்துமத்தின் ஆத்துமமாயிருப்பவரே! உம்மை ஆராதிக்கிறேன். எனக்கு வெளிச்சம் அருளி என்னை வழிநடத்தி திடப்படுத்தித் தேற்றுவீராக. நான் செய்ய வேண்டியது என்னவென்று எனக்குக் கூறும். அதை எனக்குக் கட்டளையிடும். தேவரீர் என்னிடம் விரும்புகிற அனைத்திற்கும் நான் முற்றிலும் பணிவதாகவும் எனக்கு அனுமதிக்கும் அனைத்தையும் நான் ஏற்றுக் கொள்வதாகவும் வாக்களிக்கிறேன். உமது திருச்சித்தத்தை மட்டும் எனக்குக் காண்பித்தருளும்.

எல் : ஆமென்.

பாடல் : சோகமதோ அம்மா மரி
உன்றன் நெஞ்சம் ஊடுருவுதே
வாள் பாயுதைய்யோ!
மாதாவே உன்றன் துயர்
யாரறி வாரோ பூவில்

1. சீஷன் யூதாஸ் முத்தமிட்டு
செய்த துரோகத்தால் விளைந்த மா வேதனைகள்! (மாதாவே உன்றன்)

2. திருச் சிரம் முள்ளின் முடி
செங்கரத்தில் மூங்கிற்றடி சேய் என் பாவமே! (மாதாவே உன்றன்)

3. வெண் துகிலை மேலிற் போர்த்தி
வீணர் பரிகாசஞ் செய்ய என் பாவமல்லோ (மாதாவே உன்றன்)

4. தோளின் மீது மூவைந்தடி
பாரமான சிலுவையைத் தாய் காணத் துயர்! (மாதாவே உன்றன்)

5. கல்வாரியில் தொங்கும் மகன்
வேதனைகள் கண்டு உள்ளம் வாள் பாயுதைய்யோ! (மாதாவே உன்றன்)

சேசு மரிய திரு இருதயங்களுக்கு நிந்தைப் பரிகாரத் திருமணி

முன்னுரை

சேசுவின் திரு இருதய, மரியாயின் மாசற்ற இருதய பக்திமுயற்சிகள்

1675-ம் வருடத்தில் சேசுவின் திருஇருதய பக்தி அர்ச். மார்கரீத் மரியம்மாள் வழியாகவும் 1925-ம் வருடத்தில் மரியாயின் மாசற்ற இருதய பக்தி பாத்திமா காட்சி பெற்ற லூசியா வழியாகவும் பரலோக அத்தாட்சிகளோடு உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டன. சேசுநாதர் சுவாமியையும் அவருடைய மாதாவையும் பிரிக்க முடியாதது போலவே, அவர்கள் இருவருடைய இருதய பக்திகளையும் வெவ்வேறு என்று தனித்துப் பிரித்துப் பார்க்கவே கூடாது. சேசுவின் திரு இருதயத்துக்கு இணையாக மரியாயின் மாசற்ற இருதயம் வைக்கப்பட வேண்டும் என்றும், முந்தியதைப் போல் பிந்தியதையும் பாப்பரசர் உலகமெங்கும் விஸ்தரிக்க வேண்டுமென்றும் நமது ஆண்டவரே விருப்பம் தெரிவித்துள்ளார்.

சேசுமரிய இருதயங்கள் மனிதர்கள் மேல் கடவுள் கொண்டுள்ள சிநேகத்தின் அடையாளங்களாக இருக்கின்றன. இந்த தேவசிநேகத்தி னாலேயே நாம் மீட்கப்பட்டிருக்கிறோம். நித்தியத்தில் மோட்ச பாக்கியத்தை நாம் அடைவதற்கு இவ்விரு இருதயங்களும் நமது நம்பிக்கை உறுதியாகவும் அச்சாரமாகவும் விளங்குகின்றன. நமது ஆண்டவரும் தேவமாதாவும் தங்கள் இருதய பக்தியைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு நித்திய மோட்சத்தையும், மரண சமயத்தில் அவர்களுடைய தப்பாத உதவி ஆறுதலையும் அளவற்ற அன்போடு வாக்களித்திருக்கிறார்கள்.

மனிதருடைய எண்ணற்ற பாவதுரோகங்களால் சேசுவின் திரு இருதயத்திற்கு ஏற்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகவும் அவருக்கு ஆறுதலளிக்கவும் வேண்டும் என்கிற கருத்தோடு, தொடர்ச்சியாக ஒன்பது தலைவெள்ளிக்கிழமைகளில் தகுந்த ஆயத்தத்தோடு திவ்விய நற்கருணை உட்கொண்டு பரிகார நன்மை ஒப்புக்கொடுக்கிறவர்கள் மனந்திரும்பாமல் மரிக்கமாட்டார்கள், கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அர்ச். மார்கரீத் மரியம்மாளுக்கு சேசுநாதர் வாக்களித்தார்.

எந்நேரமும் மனிதர்களுடைய பாவதுரோகங்களாகிய முட்களால் குத்தப்பட்டு வேதனைப்படுகிற மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு நிந்தைப்பரிகாரமும் ஆறுதலும் கொடுக்க வேண்டுமென்கிற கருத்தோடு, தொடர்ச்சியாக ஐந்து முதல் சனிக்கிழமைகளில் பாவசங்கீர்த்தனம், திவ்வியநன்மை, ஐம்பத்துமூன்றுமணி ஜெபமாலை, தேவ இரகசியங்களை

நினைத்துக் கொண்டு மாதாவிடம் கால்மணி நேரம் தங்கி இருத்தல் ஆகிய நான்கு காரியங்களையும் செய்கிறவர்களுக்கு மரண சமயத்தில் மோட்சம் செல்வதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் வரப்பிரசாதங்களையும் கொடுப்பதாக லூசியாவுக்கு மாதா வாக்களித்திருக்கிறார்கள். முதல் சனி பக்தியை அனுசரிப்பதால் நாம் ரஷ்யாவின் மனந்திரும்புதலையும் உலக சமாதானத்தையும் பெற்றுக்கொள்வோம்.

குறிப்பு : நிந்தைப்பரிகாரம் எதிலே அடங்கியிருக்கிறதென்றால், பகைத்துப் பழிக்கப்படும் சேசு, மரிய இருதயங்களை நாம் அன்புடன் நேசித்து ஆன்மாக்கள் மனந்திரும்ப மன்றாடி, ஜெப தவம் செய்வதிலே தான் அடங்கியிருக்கிறது. நாம் மேற்கொள்ளும் ஜெபமும், பரித்தியாக முயற்சிகளும் சிநேகத்தினால் தூண்டப்பட்டு ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காக பயன்பட வேண்டும். அந்த மனப்பான்மையோடு இத்திருமணியை ஒப்புக்கொடுப்போம்.

பாவப்பரிகார மன்றாட்டுக்கள்

முதல் : கடவுளின் பிள்ளைகளான மனிதர்கள் அவரின் பகைவனான பசாசுக்கு பாவத்தால் அடிமைப்பட்டு ஊழியம் செய்வதால் கடவுளுக்கு ஏற்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக –

எல். : சேசுவே மரியாயே உங்களை நேசிக்கிறோம், ஆத்துமங்களைக் காப்பாற்றுங்கள்.

முதல் : சர்வேசுரனை நினையாமலும் அவருடைய கட்டளைகளை அனுசரியாமலும் இருப்பதே போதிய பாவமாக இருக்கிறது. ஆனால் கடவுளை நேசியாமல் இருப்பது மட்டுமல்ல, அவரைப் பகைப்பதற்கும் பழிப்பதற்கும் என்றே உலகில் சாத்தானுக்கு வழிபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாபெரும் துரோகத்திற்குப் பரிகாரமாக –

எல். : சேசுவே மரியாயே உங்களை நேசிக்கிறோம், ஆத்துமங்களைக் காப்பாற்றுங்கள்.

முதல் : பசாசையும் அதன் கிரியைகளையும் அதன் ஆரவாரங்களையும் விட்டுவிடுகிறேன் என்று வாக்களித்த மக்கள், சர்வேசுரனைப் பகைவனாகக் கருதி அவரைத் தூஷிக்கவும், பசாசை ஆராதித்து சகல பாவங்களையும் செய்வேனென்று பசாசுக்கு வாக்குறுதி கொடுக்குமளவிற்கும் வந்துள்ளனரே! நல்ல தேவன் இவ்விதம் நிந்திக்கப்படும் மாபெரும் பாவத்திற்கு பரிகாரமாக

எல். : சேசுவே மரியாயே உங்களை நேசிக்கிறோம். ஆத்துமங்களைக் காப்பாற்றுங்கள்.

முதல் : சத்திய வேதத்தின் உன்னத வழிபாடு கல்வாரிப்பலி.

சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுக்கும் இப்''பலிபூசை'' யை நேர் மாறாக மாற்றி சாத்தானுக்குக் ''கரும்பூசை'' என்று ஒரு மகா பயங்கர அசுத்தச் சடங்கு ''சாத்தான் மதத்தில்'' நடைபெறுகிறது. அதில் பசாசை வரவழைத்து ஆராதிக்கிறார்கள். பசாசுக்குத் தங்களை முழுவதும் ஒப்புக்கொடுத்தவர்கள் பங்கெடுக்கிறார்கள். கத்தோலிக்க கோவில்களில் நற்கருணையைத் திருடிச் சென்று நிந்தனை செய்கிறார்கள். இத்தகைய அக்கிரம நிந்தைகளுக்குப் பரிகாரமாக.

எல். : சேசுவே மரியாயே உங்களை நேசிக்கிறோம். ஆத்துமங்களைக் காப்பாற்றுங்கள்.

முதல் : சத்திய வேதாகமத்தைப் பொது வேதாகமமாகவும், சத்திய வேத வழிபாடுகளை சர்வ சமய வழிபாடுகளாகவும் மாற்றி வரும் நவீன முயற்சியில், பாத்திமாவில் மாதா காட்சி கொடுத்த திருத்தல வளாகத்தில் எழுப்பப்படும் அகில உலக, சர்வ சமயக் கோவிலின் அனாச்சார நிந்தைகளுக்குப் பரிகாரமாக.

எல். : சேசுவே மரியாயே உங்களை நேசிக்கிறோம். ஆத்துமங்களைக் காப்பாற்றுங்கள்.

ஜெபிப்போமாக

ஆண்டவரே! மானிடர் உம்மை நிந்திப்பதில் எல்லா வரம்பையும் தாண்டிவிட்டார்களே! நாங்கள் என்ன செய்வோம்! பரிகாரத்திற்கு எங்கள் மாதிரியாயிருக்கிற மாமரி தாயே! உமது திருக்குமாரனுக்கு பசாசின் மக்கள் செய்யும் மன்னிக்க முடியாத இப்பழிகளையும் மன்னித்து இரட்சிக்கும்படி மன்றாடும். அவரால் இரத்தம் சிந்தி மீட்கப்பட்ட ஆன்மாக்கள் இவை என்று அவருக்கு நினைவூட்டி இக்கொடிய பாவங்களைப் பொறுத்தருளும்படி மன்றாடும். ''உன் பாவங்கள் இரத்தாம்பரம்போல் சிவந்திருந்தாலும் அவைகளை வெண்பனி போல் ஆக்குவேன்'' என்று சர்வேசுரன் மொழிந்த வாக்குறுதியை அவர் நினைவு கூரவும், மானிட குலம் புரியும் இப்பாதகங்களை மன்னித்தருளவும் மன்றாடிக் கேட்பீராக - ஆமென்.

பாடல்: (எழுந்து நின்று)

என் மீட்பராகிய ஏக தேவனே
என் பாவம் போக்குவீர் சேசுநாதரே!

1. பேயுலகுடல் என்னும் இம்மூன்றுமே
மாயம் எனக்கு மிகவும் செய்யுதே (என் மீட்பராகிய....)

2. பாவி யென்றே நீர் என்னைத் தள்ளாதேயும்
தேவ சுதனே கோபங்கொள்ளாதேயும் (என் மீட்பராகிய....)

3. நீச வுலகம் நிலையென் றெண்ணியே
நேச சேசுவே உமை மறந்தேனே (என் மீட்பராகிய....)

4. பேய்க்கடிமை என்றே முனியா தேயும்
தாய்க்குரிய அன்பு மறவா தேயும் (என் மீட்பராகிய....)

5. பாவ வழியில் நடந்து சோர்ந்தேனே
தாசன் என்னை மீட்டிரட்சிதாளுவீர் (என் மீட்பராகிய....)

வாசகர்: (சங்.73) எழுபத்து மூன்றாம் சங்கீதத்திலிருந்து வாசகம்:

ஆண்டவரே! உமது பரிசுத்த ஸ்தலத்தில் சத்துரு எவ்வளவு பொல்லாப்புச் செய்தான்! உமது பகைவர், உமக்குத் தோத்திரமாகச் செய்யும் திருச்சடங்கு நேரத்தில் பெருமை பாராட்டினார்கள். தங்கள் செய்கையின் அக்கிரமத்தை உணராமல் தேவாலயத்தின் சிகரத்திலும் வாசற்படிகளிலும் தங்கள் கொடிகளை வெற்றியின் அடையாளமாக நாட்டினார்கள். கோடரிகளினால் காட்டில் மரங்களை வெட்டுகிறாப் போல் தேவாலயத்தின் கதவுகளைப் பிளந்து போட்டார்கள். கோடரியாலும், சம்மட்டியாலும் உம்முடைய சுதந்திரத்தை இடித்தார்கள். உமது ஆலயத்தில் நெருப்பு வைத்தார்கள். பூமியில் உமது திருநாமத்தின் கூடாரத்தைப் பங்கப்படுத்திப் போட்டார்கள். அவர்கள் ஒருமிக்கக் கூடி தங்கள் இருதயத்தில் சொன்னதாவது: "பூமியில் தேவனுக்கு திருநாள் அற்றுப் போகும் படியாய்ச் செய்வோம். எங்களுக்கு உதவியாக அற்புதங்களை நாங்கள் காணவில்லை. எங்களில் தீர்க்கத் தரிசியும் இல்லை. ஒருவரும் எங்களை அறியமாட்டார்கள்."

சர்வேசுரா! எதுவரைக்கும் சத்துரு எங்களை நிந்திப்பான்? எதிரிகள் முடிவு வரை உமது நாமத்தைப் பரிகசிப்பார்களோ?

குறிப்பு : தாவீது அரசனின் இவ்வார்த்தைகள் தீர்க்கத்தரிசனமாக உரைக்கபட்டன. நாஸ்திகரும் தெய்வ நிந்தனையாளரும் செய்யும் அக்கிரமப் பழிகள் அளவை மிஞ்சி வருகின்றன. இதற்கெல்லாம் நாம் பரிகாரம் செய்தல் அவசியம்.

பாடல்: (எழுந்து நின்று)

சேசுவின் மதுர திரு இருதயமே

1. சேசுவின் மதுர திரு இருதயமே சிநேக அக்கினி மயமே
தினமும் நீர் எங்கள் சிநேகமாயிருப்பீர் தேவ தயா நிதியே

2. மனிதரை மோட்ச கதியிலே சேர்க்க மனுமகனாய்ப் பிறந்தீர்
மகிமைப் பிரதாப கடவுளானாலும் மாபழி மேற் சுமந்தீர்

3. கள்ளனைப் போல கசடர்கள் உம்மைக் கடுஞ்சிலுவையி லறைந்தார்
கருணை ஆர் உந்தன் இருதய அன்பின் கரை எவர் கண்டறிவார்

4. உம்திரு இரத்தம் ஒரு துளி முதலாய் உமக்கென வைத்தீரோ
ஓய்விலா அன்பால் உம்மையே மறந்தீர் ஓ திவ்ய இருதயமே

5. என்றும் எம்மோடு இருந்தருள் ஈந்தே இனிய நல்லுண வானீர்
இவையெல்லாம் பாரா ஈனர்கள் நாங்கள் ஓ திவ்ய இருதயமே

6. நன்மைமேல் நன்மை என்றும் நீர் செய்தீர் நாங்களோ தீமை செய்தோம்
நன்றியில்லாமல் உம்தயை மறந்தோம் நாணி இப்போதழுதோம்

7. எங்களைப்பாரும் இடர்குறை தீரும் இனிய நல்லிருதயமே
எந்தெந்தப் பாவ தந்திரம் நின்று இரட்சிப்பதும் பொறுப்பே

8. தாய் மறந்தாலும் நீர் மறப்பீரோ தயை உமக் கியல் பாமே
தாழ்மையாய்ப் பணியும் பாலகர் நாங்கள் தயை தயை தயை சுவாமி

9. அந்நிய காலம் வந்திடுங் காலே அவஸ்தையாய் நான் கிடந்தால்
அடைக்கலம் தஞ்சம் ஆக நீர் இருப்பீர் அன்புள்ள இருதயமே

பகிரங்க மன்னிப்பு மன்றாட்டுக்கள்

முதல் : ஒரு நண்பனையோ அல்லது அந்நியனையோ கூட மனவருத்தப்படுத்தி விட்டால் மன்னிப்புக் கேட்பது அவசியமாகிறது. நம் கடவுளும் மிகச் சிறந்த நேசருமான சேசுநாதரை நாம் எத்தனையோ விசை மனம் நோகச் செய்துள்ளோம்! அவருடைய தெய்வீக மகத்துவத்தை ஆராதியாமலும் அவரது கட்டளைகளை அனுசரியாமலும் நாம் கட்டிக்கொண்ட பாவங்களையும் மறதி அசட்டைத்தனங்களையும் மன்னிக்கும்படி இப்போது அவரிடம் பகிரங்கமாக பொறுத்தல் கேட்போமாக.

மன்றாட்டு 1

முதல் : ஓ சேசுவே! கடவுளின் தேவசிநேகக் கட்டளையை மறந்து உம்மை நேசியாத குற்றத்திற்காக ஆண்டவரே உம்மிடம் மன்னிப்பு கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 2

முதல் : உம்முடைய பிறர் சிநேகக் கட்டளையை மறந்து எங்கள் அயலாரை சிநேகியாத குற்றத்திற்காக ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 3

முதல் : பாவப்பரிகாரத்திற்குச் சிறந்த வழி திவ்விய பலி பூசை என்பதை அறிந்தும் நாங்கள் காணத்தவறிய பூசைகளுக்காகவும், நிந்தைப்பரிகாரமாக உம்மை திவ்விய நற்கருணையில் அன்புடன் உட்கொள்ளும்படி நீர் கேட்பதை அறிந்திருந்தும், நன்மை வாங்கக்கூடிய சந்தர்ப்பங்களைத் தவற விட்டதற்காகவும், உமக்கு ஆறுதல் தருவதற்கு திவ்விய நற்கருணையில் உம்மைச் சந்திப்பது எவ்வளவு அவசியம் என அறிந்தும் நற்கருணை சந்தியாமல் அசட்டையாக இருந்ததற்காகவும் ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 4

முதல் : ஞாயிறு, கடன்திருநாட்களை சர்வேசுரனுடைய நாட்களாக அனுசரியாமலும் ஒருசந்தி, சுத்தபோசனம், ஒறுத்தல்கள் செய்யாமலும் ஓய்வு நாட்களில் விலக்கப்பட்ட வேலை செய்தும் நாங்கள் கட்டிக்கொண்ட குற்றங்களுக்கு மனம் வருந்தி ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 5

முதல் : பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி, சபித்து தூ ணம் கக்கி, கடவுளின் திருநாமத்தை வீணாகச் சொல்லி அவசங்கைப் படுத்தியதற்காக ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 6

முதல் : பெற்றோர், பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் இராமலும், சேர்ந்து குடும்பசெபம் செய்யாமலும், பிள்ளைகளுக்குத் துர்மாதிரியாய் நடந்து, ஆசிரியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களுக்கு சேசு, மாமரி பற்றி ஒரு வார்த்தை முதலாய்ப் பேசாமலும் கத்தோலிக்க வாழ்வில்

அவர்களைப் பழக்காமலும் அசிரத்தையாக இருந்ததற்காக ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 7

முதல் : தேவ ஊழியர்கள் தங்கள் துர்மாதிரிகையாலும், திருச்சபையின் போதனையை மாற்றியோ குறைத்தோ கூட்டியோ கற்பிப்பதாலும் ஞான ஆபத்துக்களை ஏற்படுத்தியதற்காக ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 8

முதல் : திரைப்படம், ரேடியோ, டெலிவி ன், பத்திரிக்கை, புத்தகங்கள் வாயிலாகப் பரப்பப்படும் எண்ணற்ற ஆபாசப் படங்கள், பாடல்கள், வெட்கக்கேடுகளுக்காகவும், தீய இல்லங்களில் கற்பு என்னும் மிகப்பரிசுத்த புண்ணியம் பங்கப்படுவதற்காகவும், மாசற்றவர்கள் மயக்கி வலையிடப்படும் அசுத்த துர்மாதிரிகைகளுக்காகவும் ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 9

முதல் : நாடெங்கும் பரவி வரும் ஆடைக்குறைப்பு, அலங்கோலமாய் ஆடையணியும் முறை, கத்தோலிக்கர் கூட மேற்கொண்டு வரும் ஆபாச உடை பாணிக்களுக்காகவும், பெற்றோர் இவ்வி யத்தில் பிள்ளைகளைக் கண்டியாத தவறுகளுக்காகவும் ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

மன்றாட்டு 10

முதல் : எங்கள் இந்திய நாட்டிலும் தாய் வயிற்றில் சிசுவை கொலை செய்ய சட்டபூர்வமாக உத்தரவு தரப்பட்டுள்ளது. குடும்பக் கட்டுபாடு என்று கூறி உயிர்த் தோன்ற விடாமல் தடைசெய்யும் பெரிய அக்கிரமம் ஆதரிக்கப்படுகிறது. இவற்றால் ஏற்படும் கடவுள் பழிப்புக்காகவும் நடைபெறும் லட்சக்கணக்கான சிசுக்கொலைகளுக்காகவும் ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

முதல் : இளவயதினரை அவசியமானால் கண்டித்து நல்வழிப்படுத்தாமல் அவர்கள் போக்கிலேயே விட்டுவிடும் தவறுக்காகவும், பாவத்தைப் பாவம் என்று கூறத் தயங்கும் கோழைத் தனத்துக்காகவும், பாவம் மட்டுமல்ல பாவ சந்தர்பங்களும் தீமையென்று விலக்கப் படாமல் பாவ சந்தர்ப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் மாறுபட்ட போக்கிற்காகவும் ஆண்டவரே உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறோம்.

எல் : ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

பாடல் : (எழுந்து நின்று) (பக்.157)

1. தேவ நற்கருணையில் சிநேக பலியாய் நிற்கும்
சேசுவின் திரு இருதயமே - ஓ (2)
பொல்லா - தீய மனிதர் செய்யும் தீமை அகற்றி உம்மை
சிநேகித்து வந்து வாழ்வ தெப்போ

2. வானமதில் நிறையும் ஞான நன்மைகள் யாவும்
வற்றாதென்றும் சுரக்கும் சுனையே - ஓ (2)
மிக்க - வன்மன மானிடர்கள் நன்மைசேர் உம் இதயம்
வாழ்த்திப் புகழ்ந்து வாழ்வ தெப்போ

3. தாயினும் மிக்க அன்பு தயாளமுடன் எமக் கும்
சரீரமுடன் இரத்தமுமளித்தீர் - ஓ (2)
உந்தன் - தயவைப் பழித்த பின் பும் தர்ம இருதயத்தின்
தஞ்சமடைந்து வாழ்வ தெப்போ

4. பதிதர் அஞ்ஞானிகள் உம் பரம இருதயத்தை
பழித்துப் பகைக்க விடலாமோ - ஓ (2)
இவர் - பாசமறுத் தும் திவ்ய பந்தியில் சந்ததமும்
பணிந்து மகிழ்ந்து வாழ்வ தெப்போ

5. அல்லும் பகலும் ஓயா அன்பின் திருப்பலியாய்
ஆகி எம்மோடிருக்குந் தாதா - ஓ (2)
உம்மை - அண்டி சந்திக்கவரா அலைந்து திரிந்த பின் பும்
அன்பில் களித்து வாழ்வ தெப்போ

6. இந்த ஊரினில் வரும் எந்தக் கொடும்பிணி நின் (று)
எமைக் காத்து ரட்சிப்பீர் இதயமே - ஓ (2)
உமக்(கு)-எங்கள் இருதயத்தை இசைந்த கைம்மாறாக உம்
இடத்தில் கொடுத்து வைத்தோ மிப்போ

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம்

இப்போது நாம் மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்வோம். மாமரிக்கெதிராக ஐந்து வகைகளில் பாவம் செய்யப்படுகிறது. அவற்றை இங்கு நினைவுப்படுத்தி நம்மால் இயன்ற நிந்தைப் பரிகாரம் செய்து ஆறுதலளிப்போம்.

மைந்தனின் நிந்தை எப்படி மாதாவைப் பாதிக்கிறதோ அதைபோல் மாதாவின் நிந்தை மைந்தனை மிகவும் வேதனைப்படுத்துகின்றது. இதனாலேயே சேசு தன் அன்னையின் மாசற்ற இருதயத்திற்கும் நிந்தைப் பரிகாரம் செய்யும்படி கேட்கிறார். 1925-ம் வருடம் டிசம்பர் மாதம் 10-ம் நாள் சகோதரி லூசியாவுக்கு சேசு தம் அன்னையுடன் தோன்றினார். மாதாவின் வலது கரத்தில் குத்தி ஊடுருவும் முட்களால் சூழப்பட்ட ஓர் இருதயம் இருந்தது.

சேசு லூசியாவுக்கு அந்த இருதயத்தைக் காட்டி : உன்னுடைய மிகப் புனித அன்னையின் இருதயத்தின் மீது இரக்கப்படு. நன்றியற்ற மனிதர்கள் ஒவ்வொரு விநாடியும் ஊடுருவக் குத்தும் முட்களால் அது சூழப்பட்டுள்ளது. பரிகார முயற்சி செய்து அம்முட்களை அகற்ற யாருமில்லை என்றார். மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஆறுதலைத் தப்பாமல் செய்ய வேண்டும் என இதனால் சேசு உணர்த்துகிறார். அவர் விரும்பிக் கேட்ட பரிகாரத்தை இப்போது நாம் கொடுப்போம்.

முதலாவது நிந்தைக்குப் பரிகாரம்

முதல் : ஓ எங்கள் அமலோற்பவ தாயே ! உமது அமலோற்பவமே பாவ உலகில் மனிதர்களின் ஒரே பாக்கியமாக உள்ளது. ஜென்மபாவம் இல்லாமல் உற்பவித்த நீர்தான் பசாசின் தலையை நசுக்கி வெல்ல முடியும். இவ்வுண்மையை மறந்து, உமது அமல உற்பவத்தை மறுக்கும் வகையில் பிதற்றத் துணிந்துள்ள வர்களுக்காக நாங்கள் உம்மிடம் மன்னிப்புக் கேட்டு, உமது மாசற்ற இருதயத்தை இவ்வாறு துயரத்துக்கு உள்ளாக்குவோரின் பாவத்துக்குப் பரிகாரம் செய்து, உம்மை மனமார நேசித்து வாழ்த்துகிறோம்.

எல் : மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே வாழ்க!

இரண்டாவது நிந்தைக்குப் பரிகாரம்

முதல் : ஓ எங்கள் கன்னித்தாயே ! முப்பொழுதும் புனித கன்னிகையே ! பதிதக் கொள்கையுடைய சிலர் உம்முடைய நித்திய கன்னிமைக்குக் களங்கம் கற்பித்து வருகிறார்கள். பேயின் தூதரான சில மனிதர், வாயால் கூறக்கூடாத அளவு இதில் உம்மைப் பழித்து உரைக்கின்றனர். மேடையிலும், புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும் உமது பரிசுத்த கன்னிமையை இழிவாகப் பேசியும்,

எழுதியும் சித்தரித்தும் வருகின்றனர். இந்த அவமானத்துக்குத் தருந்த பரிகாரமாக உமது நேசப் பிள்ளைகளாகிய நாங்கள் பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாய் இருக்கிற கன்னிகையே! என்று சத்திய திருச்சபையுடனும் எண்ணற்ற புனிதர்கள், சம்மனசுக்களுடனும் உம்மைப் பணிந்து வாழ்த்திப் போற்றுகிறோம்.

எல் : மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே வாழ்க!

மூன்றாவது நிந்தைக்குப் பரிகாரம்

முதல் : கடவுளின் தாயாகும் மகா பாக்கியம் பெற்ற அர்ச்.மரியாயே! நெஸ்டோரியுஸ் முதல் இன்று வரையிலும் உமது தெய்வீகத் தாய்மையை மறுக்கும் பதிதர்கள் அனைவருக்காகவும் நாங்கள் மன்னிப்புக் கேட்கிறோம். உண்மையாகவே நீர் சர்வேசுரனின் மாதா, எங்களின் தாய் என்று பெருமையுடன் உம்மை அழைத்து, கிறிஸ்து நாதருடைய மாதாவே!, தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே!, சிருஷ்டிகருடைய மாதாவே! என்று உம்மை வாழ்த்திப் போற்றி ஸ்துதிக்கிறோம்.

எல் : மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே வாழ்க!

நான்காவது நிந்தைக்குப் பரிகாரம்

முதல்: மகா அன்புக்குப் பாத்திரமாகிய மாதாவான அர்ச்.மரியாயே! கடவுளை எதிர்ப்பவர்கள் உம்மையும் எதிர்க்கிறார்கள், பகைக்கிறார்கள், வெறுக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு செய்வதோடு நில்லாமல் பிறரையும் விசேஷமாக இளம் உள்ளங்களையும் இத்தீமையில் உட்படுத்துகிறார்கள், உம்மைப் பழித்துப் பகைக்கும்படி தூண்டுகிறார்கள், கற்றுத்தருகிறார்கள் ! அளவுக்கு மிஞ்சிய இந்த அக்கிரமத்துக்காக உம்மிடம் மன்னிப்பு வேண்டி, உம்மை எங்கள் மனமார நேசித்து வாழ்த்தி வணங்குகிறோம்.

எல் : மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே வாழ்க!

ஐந்தாவது நிந்தைக்குப் பரிகாரம்

முதல் : தாவீது இராஜாவின் உப்பரிகையான அர்ச்.மரியாயே ! உம்மீது பேயின் தூதர்களுக்கு எவ்வளவு வெறுப்பென்றால், உமது திரு உருவங்களையும், படங்களையும் அவர்களால் பொறுக்க முடியவில்லை. உம்மை நினைப்பூட்டும் எந்தப்பொருளும் அவர்களுக்குப் பொருந்தாததாக இருக்கின்றது. திட்டமிட்டு அவைகளை ஆலயத்திலிருந்தும் பீடங்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் சேத்திரங்கள், பிரசுரங்களிலிருந்தும் அகற்றி வருகிறார்கள். உமது அன்பின் அடையாளமான ஜெபமாலை, உத்தரியம், அற்புத சுரூபம், சபைச் சின்னம் முதலியவற்றைப் புறக்கணிப்புச் செய்கிறார்கள். இவர்களின் பழிப்புக்கெல்லாம் பரிகாரமாக நாங்கள் உமது

திருவுருவங்களையும் படங்களையும் பக்திப் பொருட்களையும் அன்புடன் பாதுகாத்து உபயோகிப்பதால் உமது மாசற்ற இருதயத்துக்கு ஆறுதலளித்துப் பரிகாரம் செய்கிறோம்.

எல் : மரியாயின் துயரம் நிறைந்த மாசற்ற இருதயமே வாழ்க!

பாடல் : (எழுந்து நின்று)

மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு நிந்தைப் பரிகாரம்
(தேவ நற்கருணையில் என்ற மெட்டில் பாடலாம்)

1. பாத்திமா பதியிலே பாலர்கள் மூவருக்கு
பரலோகக் காட்சி தந்த தாயே - ஓ - இந்த
பாரின் பாவங்களுக்கு பரிகாரம் செய்யும்படி
பரிந்து கேட்டதைத் தருவ தெப்போ

2. தேவனின் நீதி மிக தீய பாவங்களினால்
நிந்தைப் படுகின்றதினாலே - ஓ - ஜெப
தவம் மிகச் செய்யுமென்று ஜெபமாலை சொல்லுமென்று
சொன்னதை நாங்கள் செய்வ தெப்போ

3. கோதை மா மலர்களே சூழும் உம் இதயத்தை
கொடிய முட்களும் சூழ்வதேனோ - ஓ - எங்கள்
குற்றங்களன்றோ அவை குறிப்பாயுணர்த்தினையோ
குவலயம் காக்க வந்த தாயே

4. கரத்தினில் நின்று வரும் காந்தியொளியால் பூமி
திறந்து நரகமதைக் காட்டி - ஓ - அங்கு
பாவிகள் செல்லாவண்ணம் பண்ணுவீர் ஜெபம் என்று
ஏவிய குரல் கேட்ப தெப்போ

5. சொல் மொழி கேளாவிட்டால் செந்நிற நாகம் தூண்ட
சொல்லரும் துன்பம் வரும் என்றீர் - ஓ - இதைக்
கண்ணாலே கண்ட பின்னும் காணாத மூடர்கள் போல்
காலந் தாழ்த்தாமல் செய்வ தெப்போ

6. பாப்பரசரும் தேவ திருச்சபையுமே பல
தாக்குதல்களினாலே வாட - ஓ - இதைப்
பரமநாயகி அன்றே சொல்லியபடி இன்று
பாரெல்லாம் கண்டு கொண்ட தன்றோ

7. இந்தப் பாரினில் வரும் எந்தக் கேடும் எங்களை
மேற்கொள்ளாமல் காத்திடும் தாயே - ஓ - உமக்